# குறிஞ்சி

கோறளைப்பற்று தெற்கு பிரதேசசெயலக சாகித்தியவிழா சிறப்பு மலர் - 2007



பிரதேச கலாசார பேரவை, பிரதேசசெயலகம், கோறளைப்பற்று தெற்கு.



## குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலப் பண்புகளை கொண்டுள்ளதுடன் குறிஞ்சிக் குமரன் குடி கொண்டிருக்கும் குடும்பிமலை எனும் பிரசித்திபெற்ற மலையையும் தன்னகத்தே கொண்டிருப்பதனால் எமது பிரதேச சாகித்திய விழா சிறப்பு மலருக்கு குறிஞ்சி எனப் பெயரிட்டுள்ளோம்.

குறிஞ்சி நிலப் பண்புகளை பெருமளவில் கொண்டிருந்தாலும், குறிஞ்சியுடன், மருதம், முல்லை, நெய்தல், பாலை எனும் ஐவகை நிலப் பண்புகளையும் கொண்டது இப்பிரதேசம்.

கலைவளமும் தொழில் வளமும் கொண்ட வனப்பு மிக்க பிரதேச பண்புகளை காட்டுவதாகவே அட்டை ஓவியம் அமைந்துள்ளது.


அட்டை ஓவியம்
**என். கே. தயாளகுணசீலன்**

அட்டை வடிவமைப்பு
**த. சங்கர்**

ஆசிரியர்
**ச. பெ. சத்தியசீலன்**

ஆலோசனை
**வெ. தவராஜா**


# குறிஞ்சி

**கோறளைப்பற்று தெற்கு**
**பிரதேச சாகித்திய விழா**
**சிறப்புமலர் - 2007**





பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கோறளைப்பற்று தெற்கு

**தலைவர்**

திரு. வெ. தவராஜா

பிரதேச செயலாளர்

**உப தலைவர்கள்**

திருமதி. ஹெலன் சிவராஜா

கணக்காளர்

திருமதி. தயாவதி கௌரீஸ்வரன்

உதவி பிரதேச செயலாளர்

**இணைச் செயலாளர்**

திரு. ச. பெ. சத்தியசீலன்

திரு. மு. சதாகரன்

**குழு உறுப்பினர்கள்**

திரு. எஸ். சிவசுந்தரம்

திரு. எம். குணரெட்ணம்

திரு. ஐ. சர்வேஸ்வரன்

திரு. கே. அருமைராஜா

திரு. எஸ். கே. கமலசேகரன்

திருமதி. குமுதினி இருதயதாசன்

திரு. எம். பத்மநாதன்

திரு. ரி. ரவிராஜா

திருமதி. நிரேகா தயாபரன்

திரு. எஸ். பி. வரதராஜன்

திரு. ஏ. சந்திரகுமார்

**மலர் ஆசிரியர்**

திரு. ச. பெ. சத்தியசீலன்

**விடய எழுதுவினைஞர்**

செல்வி. மார்க் மிலானி



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்
திரு. **சுந்தரம் அருமைநாயகம் அவர்களது**

# வாழ்த்துச் செய்தி

எமது பாரம்பரியங்களைக் கட்டிக் காத்து வருவது கலையும் கலாசாரமும் தான். ஒரு சமுதாயத்தின் பண்பாடு முதிர்ச்சிக்கு கலையும் கலாசாரமும் உரமிடுகின்றன.

ஒரு சமுகத்தினால் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றபோது, அச்சமுகத்தின் கலையும் கலாசாரமும், பண்பாட்டு விழுமியங்களும் பதிவாகி, பிற்கால சந்ததிக்கு வழிகாட்டியாக அமைந்து விடுகின்றன.

கலையையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்குமுள்ளது. முழுச்சமுகமாகவோ குழுவாகவோ அல்லது தனிமனிதனாகவோ எமது கடமையைச் செய்ய வேண்டியது எமது பொறுப்பாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை வரவேற்கப்பட வேண்டியதே.

இந்தவகையிலே கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை காலடி எடுத்து வைத்துள்ளதுடன் சிறப்பு மலரையும் வெளியிடுகின்றது. 'குறிஞ்சி' எனும் இச்சிறப்பு மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

இம்முயற்சியில் ஈடுபட்ட பிரதேச செயலாளரையும் குழுவினரையும் பாராட்டுகின்றேன்.

**திரு. சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு
15.11.2007



பிரதேச செயலாளர்

திரு. வெ. தவராஜா அவர்களது

# வாழ்த்துச் செய்தி

ஒரு பிரதேச அபிவிருத்தியின் அளவுகோலாக கலை கலாசாரத்தையும் கொள்ளலாம். கலை கலாசாரம் வளர்ந்துள்ள சமூகமே தமது பண்பாட்டையும், பாரம்பரியங்களையும், மரபையும், தமது இருப்பையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

எச்சமூகத்தில் பண்பாடும் பாரம்பரியமும் பேணப்பட்டு அதனை வெளிக்காட்டும் கலையும் கலாசாரமும் காணப்படுகின்றதோ, அச்சமூகத்தில் இது உறுதியாக்கப்படுகின்றது. இருப்பு கேள்விக்குள்ளானபோதும் எச் சமூகம் தமது மரபையும் பண்பாட்டையும் கலை காலசாரத்தையும் பேணுகிறதோ அச்சமூகத்தினது பண்பை எச்சந்தர்ப்பத்திலும் சிதைக்க முடியாது.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச பிரிவும் நீண்ட காலமாக துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி அகதியாய், அனாதையாய் வாழ்ந்தும்கூட நம்பிக்கை இழக்காமல் வாழும் பிரதேசம். தமது இன்றைய வாழ்வை இருப்பை உணர்த்த போராடும் வாழ்வாகவும், கலை கலாசாரத்தையும் பேண, பண்பாட்டையும் மரபையும் காக்க போராடும் வாழ்வாகவும் கொண்டுள்ளபோதும் தமது எதிர்கால சந்ததிக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது இச்சமூகத்துக்கான பலம்.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகமானது சமூகத்துடன் இணைந்து பிரதேச கலாசார விழா எடுப்பதும் அதனோடிணைந்த வகையில் சிறப்பு மலர் வெளியிடுவதும் நல்லதொரு தொடக்கம்.

இந்த நல்ல தொடக்கத்தை ஆரம்பித்து வைத்த அனைவருக்கும் பாராட்டுகள். கலாசார பேரவைக்கும் நூலாசிரியருக்கும் மற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.

**வெ. தவராஜா**
பிரதேச செயலாளர்
கோறளைப்பற்று தெற்கு



# ஆசிரியரின் உள்ளத்தில் இருந்து....

2002ம் ஆண்டு வைகாசித் திங்கள் 2ம் திகதி முதல் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகமானது தனியான பிரதேசமாக இயங்கி வருகின்றது. இந்நிலையில் இப்பிரதேச செயலகமானது பிரதேச கலாசார விழாவையும் அதனோடிணைந்து வருகையில் குறிஞ்சி என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டு வைப்பதனூடாக பிரதேச கலை, கலைசார நிகழ்வுகளுக்கு வழியை ஏற்படுத்தி உள்ளது.

பல கிராமங்களைக் கொண்டுள்ள எமது பிரதேச செயலக பிரிவானது ஒவ்வொரு கிராமத்திலும் பாரம்பரிய கலை செயற்பாடுகள் இருந்ததையும் மக்கள் ஆரம்ப காலங்களில் கோயிற் திருவிழாக்களில் கூத்து, நாடகம் மற்றும் பிற நிகழ்ச்சிகளை இரவில் இருந்து விடியும் வரை செய்து மகிழ்ந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

இவ்வாறான பாரம்பரிய கிராமங்களின் கலை உணர்வை அறிந்து கொண்ட பிரதேச செயலாளர், பிரதேச கலாசார பேரவை அமைத்து இம்மலர் வெளியீட்டுக்கு காரணமானவராக அமைகின்றார். குறிப்பாக பிரதேச செயலாளராக மட்டும் அன்றி கலையில் பல்துறை சார் திறமையுடையவராக இருந்து, ஆக்கங்கள் ஒவ்வொன்றும் எமது பிரதேசத்தை முதன்மைப்படுத்தி பாரம்பரிய நிகழ்வுகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்று எமக்கு ஆலோசனை தந்து இந் நூல் வெளியீட்டுக்கு உதவிய பிரதேச செயலாளர் திரு. வெ. தவராஜா அவர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி தந்து இப்புத்தகத்தின் வருகைக்கு மெருகூட்டிய மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திரு. எஸ். அருமைநாயகம் அவர்களுக்கு எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நூலுக்கான ஆக்கங்கள் வழங்கிய அனைவருக்கும், போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும், அவர்களை ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகள். இந்நூலின் வருகைக்கு நிதியையும் வழங்கிய இப்பிரதேச வளர்ச்சியில் பங்கு கொள்ளும் உலக தரிசன அமைப்புக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

இந்நூலின் அட்டைப்படத்தை வரைந்த **N. K.** தயாளகுணசீலன் அவர்களுக்கும், இந்நூலை அழகாக அச்சிட்டு தந்த வணசிங்கா அச்சகத்தாருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ச. பெ. சத்தியசீலன்**

## கட்டுரைகள்






※ கோறளைப்பற்று தெற்கு பிரதேச குடி மரபும் மாற்றங்களும்


(திரு. ச. வெ. சத்தியசீலன் 1-3)

※ கோறளைப்பற்று தெற்கு பிரதேச கலை முயற்சியில் பெண்கள்

(திருமதி. நிரேக்கா தயாபரன் 05-15)

※ கோறளைப்பற்று தெற்குபிரதேசமும் ஊர்களும்

(திரு. எஸ். சீனித்தம்பி, திரு. எஸ். நடராசா 17 - 19)


※ கோராவெளி கண்ணகி அம்மன் ஆலய வழிபாடும், வரலாறும்

(திரு. எஸ். சிவசுந்தரம் 23 - 30)

※ அழிந்துவரும் பாரம்பரியக் கலையாக நாட்டார் பாடல்கள்

(செல்வி. ரினுஜா ஜெகதீஸ்வரன் 31 - 34)





※ கோறளைப்பற்று தெற்கில் விஷக்கடிவைத்தியமும் எமது முன்னோரும்

(வைத்தியர் பூபாலப்பிள்ளை 35 - 37)

※ திரைச்சீலை ஓவியத்தில் எமது பிரதேசம்

(திரு. என். கே. தயாளகுணசீலன் 40 - 42)

※ கோறளைப்பற்று தெற்கு பிரதேச முறுத்தானைக் கிராம ஆதிக்குடிகள்

(திரு. இ. சர்வேஸ்வரன் (B.A) 43 - 49)

※ கோறளைப்பற்று தெற்கு பிரதேச கைவினைகள்

(திரு. க. சசிதரன் 53 - 61)






## சிறுகதை


சுமைகள்கூட ஏணிப்படிகள்தான் ※

(திரு. பாலன் சுதாகரன் 50 - 51)


## கவிதைகள்


※ அவலங்கள் (கோகிலவதி சிவலிங்கம் - 04)

※ கல்வி (சந்தியூரன் க. கிருஷ்ணபிள்ளை - 16)

※ உறவுகளைப் பேணி நட (திரு. என். கே. தயாளகுணசீலன் - 22)

※ வாழ்வை புரிதல் (ராஜாத்தி - 38)

※ முனைப்பு (ராஜாத்தி - 39)






# உள்ளே...



## ஏனையவை


கலைஞர்களை வாழ்த்துவோம் (20 - 21)

நன்றியுரை (62)

# கோறளைப்பற்று தெற்கு பிரதேச குடி மரபும் மாற்றங்களும்

ச. பெ. சத்தியசீலன்

> "அடிக்கடி குடியேற்றங்கள் ஏற்பட்டமையும், சாதி அமைப்பு முறைக்கு முக்கிய காரணங்களாகும். தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஊழியங்கள் வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், இப் பிரதேசங்களில் தீண்டாமை நிலவவில்லை"


மட்டக்களப்பு மாவட்டம் மானிட வியலாளர்களின் தங்கச் சுரங்கம் என்பர். இன்னும் அச்சுரங்கம் ஆழமாகத் தோண்டப் படவில்லை. புராதன பண்பாட்டு அம்சங்கள் சில மட்டக்களப்பு மாவட்டக் கிராமங்களில் பேணப்படுகின்றன. அங்கு காணப்படும் குடிமுறைகள், வழிபாட்டு முறைகள், உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைகள் அவற்றின் அடியாக எழும் சடங்கு முறைகள் என்பன இன்றும் எமக்கு விநோதமாகவும், வித்தியாசமானதாகவும் தெரியக்கூடும். ஆனால் மட்டக்களப்புச் சமூக அமைப்பில் சாதி முறைமை முக்கியத்துவம் பெறுகின்றது. இச் சாதி முறைமையினை கோறளைப் பற்றுப் பிரதேசப் பகுதிகளை உள்ளடக்கியதாக சற்று நோக்குவோம்.

இப் பிரதேசங்களை எடுத்து நோக்கும் போது, முறக்கொட்டான்சேனை, சந்திவெளி, கோரகல்லிமடு, கிரான் உள்ளடங்கலாக நோக்குவோம். இக் கிராமங்களில் அவ்வவ் சாதியினர் தமக்கு வரையறுக்கப்பட்ட தொழில்களை விட ஏனைய தொழில்களையும் செய்வதுண்டு. விவசாயத்தைப் பாரம்பரியத் தொழிலாகக் கொண்ட முக்குவர், வேளாளர் ஆகியோர் தமது தேவைகளுக்காக மீன் பிடிப்பதுண்டு. கரையார் விவசாயம் செய்வதுண்டு. சிறு சிறு கூட்டங்களாக வாழ்ந்த ஆதி மக்கள், சிக்கனம் மிக்க பொருளாதார சமூக அமைப்பு முறையோடு இணங்கி வாழ முனைந்த போது, அவர்கள் இயற்கையாக வகுத்துக் கொண்ட ஏற்பாடே சாதி அமைப்பு முறைக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். சலவைத் தொழிலாளர், சிகை அலங்கரிப்போர், வேளாளர், கைகோளர் (நெய்தல் தொழிலாளர்) போன்றவர்களின் தேவை தனித்தனிக் குழுவைச் சார்ந்து வாழ்ந்து வந்த மக்களுக்கு அவசியம் தேவைப்பட்டது.

அடிக்கடி குடியேற்றங்கள் ஏற்பட்டமையும், சாதி அமைப்பு முறைக்கு முக்கிய காரணங்களாகும். தாழ்த்தப்பட்ட சாதியினரின் ஊழியங்கள் வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், இப் பிரதேசங்களில் தீண்டாமை நிலவவில்லை. ஆகம முறையில் அமைந்த கோயில்கள் பெரும்பான்மையாக இல்லாமையும் இதற்கான முக்கிய காரணமாகும்.

## எமது பிரதேசத்தில் இருந்த குடி முறைகள்

மீன் பாடும் தேன் நாடாம் மட்டு மாநகரின் வடக்கே எல்லாச் சிறப்புக




குடிகள் தத்தம் குடும்பத் தலைவ ரின் பெயரினைக் கொண்டு அழைக் கப்பட்டது. கிரான் பிரதேசத் தில் திருமலையில் இருந்து வந்த வன்னியன் என்னும் பெயரினை உடையவர் இங்கிருந்த பெண் ஒருவரை திருமணம் செய்தமையால், திருமலை வன்னியன் குடி என்று அழைக்கப்பட்டு அதில் இருந்து வெவ்வேறு குடிகள் தோற்றம் பெற்ற தாக அறிய முடிகின்றது. சிறு குஞ்சாப்போடி குடி, உடையார் குடி, பிறங்கர்குடி, கொண்டயப் போடி குடி, முற் குகராசகுடி, வீரச்சோலை வேட வேளகுடி, குமரபுரவேட வேளாளர் குடி, உலகிப் போடி குடி என பல குடிகள் கிரான் பிரதேசத்தில் இருந்திருக்கின்றது.

ளுடனும் அமைந்துள்ள கோரளைப்பற்று தெற்குப் பிரதேச செயலகப் பிரிவானது பல அழகிய கிராமங்களைக் கொண்டு அமைந்ததுடன் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரையும் கலையிலும், தெய்வ வழிபாட்டிலும் ஆர்வமிக்க மக்களாக வாழ்ந்து வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இங்குள்ள மக்கள் பிரதான தொழிலாக விவசாயம், மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். இந்த கிராமங்களி டையே குடிமுறையும் இருந்திருக்கின்றது. குடிமுறை பொதுவாக தற்போதும் கோயிற் திருவிழாக்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பில் 1913ம் ஆண்டில் பெருவெள்ளமும், 1914ம் ஆண்டில் ஏற்பட்ட புயல்காற்றின் தாக்கமும் மக்களை வெவ் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர வைத் தன. கிரான் குளம், பழுகாமம், களுதா வளை, போன்ற இடங்களில் இருந்து வந்தவர்கள் எமது பிரதேசங்களில் வந்து குடியேறி இருக்கின்றனர். இதனால் முறக் கொட்டான்சேனை, சந்திவெளி, கிரான் போன்ற கிராமங்களில் குடி முறைமை உருவாகி இருக்கலாம்.

பிறங்கர் குடியானது பறங்கியர் குடியாகும். பிரான்சீஸ் என்ற பறங்கியரின் பெயரினைத் தழுவியதாக பிறங்கர்குடி என அழைக்கப்பட்டு வந்தது. ஆரம்ப காலங்களில் இப்பிரதேசங்களில் பறங்கி யர் பல இடங்களில் வாழ்ந்து வந்து இருக் கின்றனர். இவர்கள் இரும்பு வேலை களில் ஈடுபட்டு தமது தொழிலைச் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் தற்போது இந்த குடிமுறை மருகிப்போய் உள்ளது. முறக்கொட்டான்சேனை கிராமத்திலும் குடிமுறைகள் இருந்திருக்கின்றன. பூனை யார் குடி, வீரமாணிக்கன் குடி, புலவாளர் குடி இதை விட வேறு குடிகளும் இருந்த தாக அறிய முடிகின்றது. அதனை அறியக்கூடிய சான்றுகளோ, அதை வெளிப் படுத்தக்கூடிய ஆற்றல் உள்ளவர்களோ இக்கிராமத்தில் இல்லாததினால் பிற குடிமுறைகளை அறிய முடியாத நிலை உள்ளது.

குடிகளினை அடையாளங்காண ஒவ்வொரு குடிக்கும் அடையாளச் சின்னம் இருந்ததாக பிரதேசத்தில் இருக்கின்ற முதியவர் சி.சண்முகம் தெரிவிக்கின்றார். மாட்டில் காணப்படும் அடையாளம், குடிகள் தமது அடையாளத்தை இனம் காண குறியாக இடுகின்றனர். தாமரை இதுவும் ஓர் குடியினைக் குறிக்கின்றது. மரண நிகழ்வின்போது செய்யப்படும் நிகழ்வு ஊடாக இது என்ன குடிக்குரிய முறை என தீர்மானிக்க முடியும்.

குடிகளினை அடையாளங்காண ஒவ்வொரு குடிக்கும் அடையாளச் சின்னம் இருந்ததாக பிரதேசத்தில் இருக்கின்ற முதியவர் சி. சண்முகம் தெரிவிக்கின்றார். மாட்டில் காணப்படும் அடையாளம், குடிகள் தமது அடையாளத்தை இனம்காண குறியாக இடுகின்றனர்.

சந்திவெளி கிராமத்திலும் குடி முறைகள் இருந்திருக்கின்றது. இங்கு பரமகுடி, சந்தாபனிக்கன்குடி, புதுர்க்குடி, கோயில்குடி, கலிங்ககுடி, பெத்தான்குடி இந்த குடி முறைகள், திருமணங்கள், கோயிற் திருவிழாக்கள், சடங்குகளின் போது தமது முறைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளன. ஆனால் இப்பொழுது கோயிற் திருவிழாக் காலங்களில் இந்தக் குடிமுறை செல்வாக்கு செலுத்துகின்றது. திருமண முறையின் போது குடிமுறைமை பின்பற்றப் படும் மரபு குறைந்து வருகின்றது.

இக்குடிமுறையில் இருந்து சாதிய மைப்பு உருவாகியதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். இங்குள்ள சாதிகளாக வேளாளர், கரையூரார், சலவைத் தொழிலாளர், சிகை அலங்கரிப்போர், சீவல் தொழிலாளர் ஆகியோர் உள்ளனர். இந்த சாதிகளில் வேளாளர் உயர்ந்தவராக கொள்ளப்படுகின்றனர். இங்கு தொழில்களில் விவசாயமும் மீன்பிடியும் உள்ளது.

மீன்பிடித் தொழிலை செய்கின்றவர்கள் கரையாராக அழைக்கப்பட்டு வருகின்றனர். கடல், வாவி, குளம் என தமது தொழிலைச் செய்து வருகின்றனர். இச் சாதியினர் தமது அந்தஸ்து கருதி மீன்பிடித்தொழிலை மேற்கொள்வது குறைந்து வருகின்றது.

ஏனைய வண்ணக்கர், அம்பட்டர், நளவர் ஆகியோர் பிற பிரதேசங்களில் இருந்து வந்து குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே எமது பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தமது அந்தஸ்து, நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப தமக்குரிய தொழிலை விட்டு வேறு தொழில்களைச் செய்து வருகின்றனர்.

பொதுவாகக் குடிமுறையின் அமைப்புமுறை மருகி வருகின்றபோது, ஆரம்ப காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரம்பரிய நிகழ்வுகள் மங்கிப் போகின்றது. இதனால் ஆரம்ப காலத்தில் இருந்த கட்டுப்பாடும், கட்டமைப்பும் சிதைக்கப்படுகின்றது. ஆனால் குடிமுறைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுகின்ற போது நாகரீக மாற்றத்தையும் உள்வாங்குகின்ற தன்மை காணப்படுகின்றது. இருந்தாலும் பழமையைப் பேணுவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

# அவலங்கள்

கோகிலவதி சவலிங்கம்



அகிலத்தில் அகதிகளின் அவலங்கள்
அரவணைக்க யாருமின்றி கதறியழும் ஓலங்கள்
பாரெங்கும் சமதானத் தாகங்கள் – எமது ஊரெங்கும்
பல் குழல் தந்த சேதங்கள் – மாறுமா?
எம்மை விட்டு என்றென்றும் இதுவே

புலம் பெயர் அகதிகள் உலகெங்கும்
பூர்வீகம் செத்தது நமது ஊரெங்கும்
சேற்றில் முளைத்த தாமரைபோல் – செழிப்பாய்
வாழ்ந்தோம் அன்றொருநாள் – அதை
மிதித்தது யார்? இந்த அகிலத்தில்

இனத்தால், மதத்தால், மொழியால் வளர்த்தோம் – பிரிவினை
ஆனால் வேதனையால் சோர்ந்தோம் அகதியெனும் நாமத்துடன்
இயற்கை சூறை கொண்டது எமது வாழ்வை – அகதியாய்
வீதியில் நிற்க வைத்தது – யுத்தம் யுத்தம் அத்தனையும்
இரவு பகலாய் எமக்கு நித்தம் நித்தம்

அகதியின் வாழ்க்கை அவலமென்றால்
ஐ நாவின் சட்டம் இருட்டறையோ?
சேதம் எரிகிறது பாசங்கள் பிரிகிறது
பச்சிளம் பாலகர்கள் பாலின்றித் தவிக்கின்றனர்
மனித உரிமை மரணித்த காலமிதோ

விஞ்ஞானத்தின் விபரீதத்தால் வந்த நாசமிதோ
பிரிவினை வேண்டாம் நெஞ்சமதில் – அகதி
என்ற நாமம் வேண்டாம் அகிலமதில்
அன்பை வளர்த்தோம் நாமிணைந்து – நலமாய்
வாழ்வோம் நாடிணைந்து

பிரதேச சாகித்திய விழா - 2007 கவிதைப் போட்டி முதலிடம்

# கோறளைப்பற்று தெற்கு பிரதேச கலை முயற்சியில் பெண்கள்

திருமதி. நிரேகா தயாபரன்

"பெண்கள் உயர்வான நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டு வந்த போதிலும், காலப்போக்கில் அவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவ்வாறு இரண்டாம் நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டு வந்தபோதிலும் அவர்களால் படைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு வரும் கலையம்சங்கள் அவர்களது பெருமையை, இன்றும் எடுத்துக்காட்டுவனவாகவே உள்ளது."



திருமதி. கனகம்மா செல்லையா



திருமதி. கந்தப்பிள்ளை லெட்சுமி



திருமதி. கணபதிப்பிள்ளை திவ்வியமலர்



திருமதி. கந்தப்பன் வள்ளியம்மை



திருமதி. கிருபைலெட்சுமி தருமலிங்கம்

ஒரு மனநிலையையோ அல்லது விழுமியங்களையோ வெளிப் படுத்துவதற்கு அல்லது தொடர்பு நிலைப்படுத்துவ தற்கு வேண்டிய திறனுடைய பயிற்சியே கலையாகும். திறன்கள் வளர்ச்சிப்படியில் செம்மையான திறன்களை வெளிப்படுத்த, தொடர்பு நிலைப்படுத்த பல்வேறு ஊடகங்க ளைக் கையாள்வர். அவையாவன அசைவுகள் (நடனம், நாடகம்), குரல் (இசை), வர்ணம், கோடுகள், பொருட்கள் (ஓவியம்), மரம், கல், மண் (சிற்பம், கட்டிடம்) தங்கம், வெள்ளி, பொன், செப்பு, மரம், தென்னை, பனை, ஓலை, இறகு (கைவினை) இவை ஒவ்வொன்றும் ஒரு திறனைக் கொண்டது. உடலை அசைக்கும் திறனில் நாடகம் சிறக்கின்றது; குரலை அசைக்கும் திறனில் இசை சிறக்கின்றது; வர்ணங்களை கோடுகளை கையாளும் சிறப்பில் ஓவியங்கள் சிறக்கின்றது. இவை போன்றே ஏனையவும் சிறக்கும். இந்தத் திறன் முக்கியமாக அமையினும், கற்பனையே உயிராக இருக்கும். இக்கற்பனைதான் திறனைக் கையாளும் செயற்பாட்டினைச் செய்கின்றது. இவ்வாறான கலையம் சங்கள் அனைத்தும் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இருபாலாரிடமும் ஏதோ ஒரு வடிவில் காணப்படுகின்றது.

எனினும் வரலாற்று ரீதியாகப் பார்க்கின்றபோது ஆரம்ப காலத்தில் பெண்கள் உயர்வான நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டு வந்த போதிலும், காலப்போக்கில் அவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவ்வாறு இரண்டாம் நிலையில் வைத்துப் பார்க்கப்பட்டு வந்தபோதிலும் அவர்களால் படைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு வரும் கலையம்சங்கள் அவர்களது பெருமையை, இன்றும் எடுத்துக் காட்டுவனவாகவே உள்ளது. 1960-1970களில் பெண்ணினத்தை வேறுபடுத்தி ஒரு சார்பாய் நடத்தும் சுரண்டல் முறைமையினை (Exploitation) கடுமையாக எதிர்த்தே பெண்ணுரிமை பேணும் இயக்கம் (Women's Liberation) தோன்றியது. அதன் பெயரால் பல இலக்கிய அம்சங்களும் உருவாகியுள்ளன. பெண்ணினத்தின் நோக்கில்

பல சமுதாய சட்டவாதப் பொருள்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதன் விளைவாகவே சொல்லும், திறனும், செல்வாக்கும் மிக்க பல பெண் எழுத்தாளர்கள் தோன்றினர். இதுவரை எவரும் கண்டிராத அளவு ஒழிவு மறைவு அற்ற முறையில் பெண்ணின் மன உணர்வுகளைப் பற்றி அமையும் புனைகதைகள் மற்றும் அவர்கள் சார்ந்த ஏனைய விடயங்களும் வெளி வரலாயின. பெரும்பாலான கலையாற்றல் மிக்க பெண் எழுத்தாளர்கள் பெண்ணுரிமை இயக்கத் தோடு இணையாது நின்று தமது எழுத்தாற்றலை வெளிக்காட்டி பாராட்டும் பெற்றுள்ளனர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பவர் மேரி மக்கார்தி (Mary Macarthy) ஆவார். இவர் புனைகதை களினூடாக பெண்களின் தனிப்பட்ட வாழ்வு முறை பற்றியும், அவர்களது கலையம்சங்கள் பற்றியும் மற்றும் உழைத்து அலுவலாற்றும் (Career) பெண்களினது வாழ்வு முறை பற்றி யும் எடுத்துக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரின் வடக்கே 28 கி.மீ. தூரத்தில் கோறளைப்பற்றுத் தெற்கு பிரதேசம் அமைந்துள்ளது. இங்குள்ள மொத்த சனத்தொகை 3,5272 ஆகும். இதில் அரைப் பகுதிக்கு மேற்பட்டோர் பெண்களாவர். இங்குள்ள மக்களது பிரதான தொழில்களாக விவசாயம், மந்தை வளர்ப்பு, மீன்பிடி என்பன காணப்படு கின்றது. இங்கு கடும் உழைப்பாளர்களாக பெண்களே திகழ்வதுடன் இவர்களது உழைப்பு இப்பிரதேசத்துக்கு மிகவும் தேவையானதொன் றாகவும் உள்ளது. இவைதவிர இப்பிரதேசத்து மக்கள் ஏதோ ஒரு வகையில் சிறந்த கலையம் சங்களைக் கொண்டவர்களாகவும் காணப் படுகின்றனர். குறிப்பாக நாட்டு வைத்தியம், விஷ வைத்தியம், நடனம், நாடகம், பாட்டு, கும்மி, கரகாட்டம், கோலாட்டம், நாட்டுப்பாடல், சிற்பம், ஓவியம் மற்றும் புனைகதைகள் போன்ற பல்வேறு கலை ஆற்றல்களைக் கொண்டவர் களாகவும், அதனை வெளிப்படுத்துபவர்க ளாகவும் இருப்பதுடன், தங்களது இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றனர். ஆயினும் இப்பிரதேசத்தில் அதிகமான கலைஞர்கள் ஆண்களாக இருப்பது போன்று எமக்கு தோற்றமளித்தாலும், ஆணுக்கு நிகரான கலையாற்றல்களைக் கொண்டுள்ள பல பெண்களும் இப்பிரதேசத்தில் காணப்படு கின்றனர். ஆனால் இவ்வாறான பெண்களினது திறன்கள் இற்றைவரையும் இலைமறை காயாகவே இருந்து வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகவே உள்ளது. எனவே இவ்வாறான பெண்களின் திறமையும், அவர் களது கலையம்சங்களும் அதை வெளிப்படுத்தி வரும் சிறப்பும் போற்றுதற்குரியதான அம்சமாக இருப்பதனால், அவர்கள் தொடர்பான ஆற்றல் களையும், அவை தழுவிய கலையம்சங்களையும் எடுத்து நோக்குவது காலத்தின் தேவையாகும்.

## கலைமகள் கலா மன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கலைகள் பலவும் கொலுவிருக்கும் இப் பிரதேசத்தினுள் பல பெண்கள் தங்களது கலை யாற்றல்களை வெளிப்படுத்திய வண்ணமே இருக்கின்றனர். அந்த வரிசையில் நாற்பத்தி யாறு (46) வயது நிரம்பிய திருமதி. கிருபைலெட்சுமி தருமலிங்கம் என்பவர் பல கலைச்சேவை நிகழ்ச்சிகளை நடத்திவரும் திறமையானதொரு பெண்மணியாக இப் பிரதேசத்தில் காணப் படுகின்றார்.

> பெரும்பாலான கலையாற்றல் மிக்க பெண் எழுத்தாளர்கள் பெண்ணுரிமை இயக்கத்தோடு இணையாது நின்று தமது எழுத்தாற்றலை வெளிக்காட்டி பாராட்டும் பெற்றுள்ளனர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பவர் மேரி மக்கார்தி (Mary Macarthy) ஆவார்.

இவர் முறக்கொட்டான்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன், கலைகள் யாவுக்கும் தலைவியாக விளங்கும் கலைமகளின்



1991இல் பாடசாலை மாணவர்களுக்கு கும்மி கலை நிகழ்வை பழக்கி, அரங்கேற்றியபின் தனது மாணவிகளுடன், குருவான கிருபைலெட்சுமி

நாமத்தினையே நாமமாகக் கொண்டு 'கலை மகள் கலா மன்றம்' எனும் ஒரு மன்றத்தை 1986ஆம் ஆண்டு 40 பெண்களுடன் ஆரம் பித்து, அதற்கு தலைவியாக இருந்து பல கலைச் சேவைகளை வழங்கியும், வழங்கிக் கொண்டும் இருக்கின்றார்.

இப் பெண்மணி சிறுவயது முதலே கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததன் காரணமாக இம்மன்றத்தினை ஆரம்பித்தார். இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு இப்பிரதேச மக்க ளின் ஆதரவும், உறுதுணையும் இருந்து வரு கின்றது. இப்பெண்மணியின் தந்தையான கந்தன் பூபாலப்பிள்ளை என்பவர் ஒரு பூசகராக இருப்பதுடன் இனிமையான குரல் வளமும் கொண்டவர். அதுமட்டுமன்றி பாடல்கள் இயற்றும் திறனும் இவருக்குண்டு. அத்தோடு தன்னால் இயற்றப்படும் பாடல்களுக்கு மெட்ட மைத்து பாடும் ஆற்றலையும் கொண்டிருந்தார். மற்றும் கோயில் பூசகராக இருந்ததினால் மந்திரம், திருநீறுபோடல், கண்ணூறு கழித்தல், விஷவைத்தியம் போன்ற பலசேவைகளையும் மக்களுக்குச் செய்து வந்துள்ளார். இவ்வாறான பல கலையம்சங்களைக் கொண்ட இவருக்கு மகளாகப் பிறந்த கிருபைலெட்சுமி என்ற இப் பெண்மணி சிறு வயது முதல் தேவாரம், பக்தி பாடல்களை இசையுடன் சொல், பொருள் பிழை யின்றி படிக்கும் திறனை தனது தந்தையாரிடம் இருந்து கற்றுக்கொண்டுள்ளார். ஆலய திருவிழாக் காலங்களிலும், உற்சவங்களின் போதும் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்த இவர் தனது 18 வயதில் கோயில் திருவிழாவின் போது கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து மேடை ஏற்றி எல்லா மக்களது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த கன்னி முயற் சியைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை மேடை ஏற்றிய திறனே, பல பெண்களை இணைத்து கலைமகள் கலாமன்றத்தினை ஆரம்பித்து, அதனூடாக தனது கலைச்சேவைப் பயணத்தைத் தொடர காரணமாக அமைந்தது.

## கலைமகள் கலாமன்றத்தின் கலைச்சேவை

இக்கலைமகள் கலாமன்றத்தின் கலை நிகழ்ச்சிகள் பற்றி பார்க்கும் பொழுது இப்பிரதேச மண்ணின் கலை கலாசாரங்களை உள்ளடக்கிய மணங்கமழும் கலைகளான கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக் குப் பாடல்கள் அமைத்து, அதற்கு மெட்டும் இட்டு, பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர், சிறுமியர் களுக்கும், அதனைப் பழக்கி மேடை ஏற்றுவது இதனது சேவையாக உள்ளது. குறிப்பாக இக் கலைச்சேவை நிகழ்ச்சிகளை வடிவமைத்து, மேடை ஏற்றும் திறன் இம்மன்றத்தின் தலைவி யையே சாரும். இதனை இவர் மிகவும் ஈடுபாட்டு டன் செய்து வருவதுடன் இந்நிகழ்ச்சிகளைக் குறிப்பாக அம்மன் சடங்கு நேரங்களில் அரங் கேற்றம் செய்து இப்பிரதேச மக்களின் மிகுந்த வரவேற்பையும் பெற்றுக்கொண்டுள்ளார். இதன்

காரணமாக இதுபோன்ற கலை நிகழ்ச்சிகளுக்குப்பாடல் இயற்றி, அதற்கு மெட்டும் அமைத்து பாடுவதற்கும், வடிவமைப்பதற்கும் இவரையும் இவரது கலைமகள் கலாமன்ற உறுப்பினர்களையுமே நாடிச் செல்கின்றனர்.

ஆண்டுதோறும் இடம்பெறும் மகளீர் தினங்களின் போதும் கலாசார விழாக்களின் போதும் தங்களது கலைமகள் கலாமன்றத்தின் மூலம் நாடகம், வில்லுப்பாட்டு, கவிதை, பாடல்கள் என பல நிகழ்ச்சிகளை தனது மன்ற உறுப்பினர்களுடன் இணைந்து வடிவமைத்து சூரியா, தடாகம், உழைக்கும் மகளீர் அமைப்புக்கள் பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களில் மேடையேற்றி வெற்றி பெற்று சிறந்த விருதுகளையும் பெற்றுள்ளார். இவை மட்டுமன்றி 1998ம் ஆண்டு சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு இம்மன்றத்தின் தலைவியும் அவரது குழுவினரும் இணைந்து வீதி நாடகங்களை எழுதி அதற்குப் பாடல்களும் இயற்றி இசையமைத்து அவற்றினை வீதியில் அரங்கேற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அவர்களது கலைச்சேவை அமைந்திருந்தது. இவ்வீதி நாடகத்தினை எழுதி வடிவமைத்து இவ்வீதி நாடகத்தினை அரங்கேற்றியமைக்காக இவருக்கும் இவரது குழுவினருக்கும் பாராட்டும், விருதும் உழைக்கும் மகளீர் அபிவிருத்தி மன்றத்தினாலும், சூரியா பெண்கள் அமைப்பிலும் கிடைத்துள்ளது.

சிறப்பாக நாட்டுப் பாடல்களை எழுதக்கூடிய திறமை இவருக்கு இருப்பதனால் தனது கலாமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து நாட்டுப் பாடல்களை எழுதி அதற்கு இசை வடிவம் வழங்கி ஒலிப்பதிவு செய்து மேலை நாடுகளில் இயங்கிவரும் கலை மன்றங்களுக்கு சூரியா பெண்கள் அமைப்பினூடாக இவ்வாறான கலைச் சேவையையும் நிகழ்த்தி வருகின்றனர். இவ்வாறு 10 பாடல்கள் எழுதி இசையமைத்து, ஒலிப்பதிவு செய்து கொடுப்பதற்காக அதற்கான ஊதியமாக 4500 ரூபா மட்டுமே பெறுகின்றனர். இவ்வாறு கிடைக்கும் பணத்தையும் தங்களது கலைமகள் கலாமன்றத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடுகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களை வைத்துக் கொண்டே சகல கலை நிகழ்ச்சிகளையும் வடிவமைத்து மேடையேற்றி வருகின்றனர். இதனால் இளம் தலைமுறையினர் சிறப்பாக நிகழ்ச்சிகளை செய்வதற்கு ஊக்கப்படுத்துவதுடன் தாங்களும் தங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன், ஒரு வழிகாட்டியாகவும் இவர்கள் திகழ்கின்றனர்.

இவை தவிர ஆலயங்களில் பஞ்ச புராணம் ஓதுவது, இறைவனின் புகழைப் பாடுவது, பக்திப் பாடல்களை பாடுவது, திரு



கிருபைலெட்சுமியால் கோயில் திருவிழாவுக்காக ஒழுங்கு செய்து அரங்கேற்றப்பட்ட நடனம் 1989

வெண்பா மற்றும் விரத காலங்களில் பிள்ளையார் காப்பு, சித்திரக் கதை, புராணங்களை முறைப்படி ஓதி விளக்கம் கூறுவது என இவர்களது கலைச் சேவை பரந்து காணப்படுகிறது. ஒவ்வொரு பாடலையும் எப்படிப் பாட வேண்டும் என இசையுடனும், நல்ல குரல் நயத்துடனும் பாடிக் காட்டுவதனால் இளம் தலைமுறையினருக்கு இனிவரும் காலங்களில் இவற்றை முறையாக பின்பற்றக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இவர்கள் மூலம் இப்பிர

தேசத்திற்கு கிடைத்துள்ளமை வரவேற்கக்கூடிய அம்சமாகும்.

இவை மட்டுமன்றி இம்மன்றத்தின் தலைவியான இப் பெண்மணி தனது தந்தை ஒரு பூசகராக இருந்ததன் காரணமாக அவருடன் இருந்து சில மந்திரங்களையும் கற்றுள்ளார். குறிப்பாக திருநீறுபோடல், கண்ணூறு கழித்தல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல் போன்ற வேலைகளையும் செய்யக் கூடியவராக காணப்படுகின்றார்.

இக்கலைமகள் கலாமன்றத்தின் அங்கத்தவராக இருந்த பெண்மணியான ரங்கநாயகி என்பவரும் சுமார் 17 வருடமாக கலைச்சேவை செய்து 2006ம் ஆண்டு இறைவனடி சேர்ந்துள்ளார். இவரும் பாடல்களை இசையுடன் பாடும் திறன் கொண்டவராக இருந்ததுடன் நாடகங்களில் சிறந்த பாத்திரங்களை ஏற்று நடிக்கும் ஆற்றலையும் கொண்டிருந்தார். கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து, மாணவர்களைக் கொண்டு மேடையேற்றி வெற்றியும் கண்டுள்ளார். குறிப்பாக கரகாட்டம், வில்லுப் பாட்டு, கும்மி, போன்றவற்றிற்கு இசையமைத்துப் பாடி, அதனை மாணவர்களுக்கு பழக்கி மேடையேற்றுவதில் மிகவும் திறமையானவராகத் திகழ்ந்தார் என்பதனை இம்மன்ற உறுப்பினர்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இம்மன்றத்தில் இருந்து தங்களது கலைச் சேவையினை தற்பொழுதும் தொடர்ந்து வரும் பெண்மணிகளாக சந்திராதேவி, வரதலெட்சுமி, கோணேஸ்வரி, வதனி போன்றோர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இம்மன்றத்தின் மூத்த கலைஞர்களின் பின்பற்றுதலின் வழியே தங்களது கலைச் சேவைகளையும் செய்து வருகின்றனர். இம்மன்றத்தில் இருக்கும் ஒவ்வொரு பெண்மணியும் சிறந்த குரல்வளம் கொண்டவர்களாக இருப்பதுடன் சொல், பொருள் பிழையின்றி பாடல்களைப் பாடக்கூடியவர்களாகவும் நாடகங்கள் மூலம் சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்துபவராகவும் உள்ளனர்.

இவ்வாறு கலைமகள் கலாமன்றம் தனது கலைச்சேவையைச் செய்து வருவது போல் இப்பிரதேசத்தில் ஏனைய பகுதிகளிலும் உள்ள பெண்களும் தங்களது கலைத் திறமைகளை அவ்வப்போது இடம்பெறும் கலை நிகழ்வின் போது வெளிப்படுத்தி வருகின்றனர். அவற்றுள் சிறப்பாக தனது ஆற்றலை வெளிப்படுத்துபவராககிரானைச்சேர்ந்தகிருஸ்ணப்பிள்ளை சின்னப்பிள்ளை என்பவர் காணப்படுகின்றார். குறிப்பாக நாட்டியம், நாடகம், பாடல், விநோதப் போட்டி, நாட்டுப்புறப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளை திறம்படச் செய்து தனது திறனை வெளிப்படுத்திக் காட்டுபவராக இருப்பதுடன் பாடசாலை மாணவர்களுக்கு விநோத உடைப் போட்டியின் போது அவர்களை அந்நிகழ்ச்சிக்குத் தயார் படுத்துவதன் மூலம் தனது சேவையை செய்து வருகின்றார்.

> சிறப்பாக நாட்டுப் பாடல்களை எழுதக் கூடிய திறமை திருமதி கிருபை லெட்சுமிக்கு இருப்பதனால் தனது கலாமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து நாட்டுப் பாடல்களை எழுதி அதற்கு இசை வடிவம் வழங்கி ஒலிப்பதிவு செய்து மேலை நாடுகளில் இயங்கிவரும் கலை மன்றங்களுக்கு சூரியா பெண்கள் அமைப்பினூடாக இவ்வாறான கலைச் சேவையையும் நிகழ்த்தி வருகின்றனர்.

## மருத்துவ மாதர்களின் சேவைகள்

இதுதவிர இப்பிரதேசத்தில் மருத்துவ வசதி இல்லாத சந்தர்ப்பத்தில் இருந்து இன்று வரை பல பெண்கள் மருத்துவமாது அல்லது மருத்துவிச்சி வேலை செய்து பல ஆயிரக் கணக்கான குழந்தைகளின் பிரசவத்திற்கு காரணமாக இருந்ததுடன் தாய்மார்களையும் காப்பாற்றியிருக்கிறார்கள். இதற்கு இவர்களுக்கு அனுபவத்தின் மூலம் கிடைத்துள்ள திறனும் இறைவனால் கொடுக்கப்பட்ட வரமுமே காரணம் எனலாம். மிக நுட்பமாகத் தாயையும் சேயையும்

காப்பாற்றும் ஆற்றலை பெற்றுள்ளனர். ஏனெனில் பிரசவத்தின் போது அந்தத் தாய்க்குத் துணிவை ஏற்படுத்தி, அன்புகாட்டி, அப்பெண் மணிக்குரிய சகல வேலைகளையும் செய்து, குழந்தையையும் பிரசவிக்கச் செய்து அந்தக் குழந்தைக்கும் சகல பணிவிடைகளையும் செய்வது என்பது இலகுவான செயற்பாடல்ல. இக்கடமைகளைச் செய்வதாக இருந்தால் அம்மருத்துவ மாதுக்கு மனதில் துணிவு வேண்டும். அந்தத் துணிவு இப்படிப்பட்ட ஒருசில பெண்களிடமே இருப்பதன் காரணமாக இவர்களை நடமாடும் தெய்வங்கள் என மக்கள் புகழாரம் சூட்டுகின்றனர்.

எமது பிரதேச செயலகப் பிரிவிற்குள் இருக்கும் அதிகமான கிராமங்கள் நெடுந்தூரக் கிராமங்களாகவும் வைத்திய வசதி குறைந்த இடங்களாகவும் இருப்பதன் காரணமாக மருத்துவ மாதர்களின் சேவை அவசியமான தொன்றாக உள்ளது. இங்கு ஒவ்வொரு கிராமத்துக்குமென ஒருசில பெண்கள் இவ்வேலையைச் செய்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். அந்த வகையில் 86 வயது நிரம்பிய சின்னத்தம்பி கண்ணகை என்பவர் 40 வருடமாக மருத்துவிச்சி தொழிலைச் செய்து வருவதுடன், வயிற்றிற்குப் பார்த்தல், நாய்க்கடிக்கு மருத்துவம் செய்தல், திருநீறு போடல் போன்ற சேவைகளை மன நிறைவுடன் செய்துவருகின்றார். குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு பிரசவம் பார்த்து இருப்பதுடன் 1990 ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்த சூழ்நிலையின்போது அதிகமான பிரசவத்தினை பார்த்திருப்பதுடன் 14 பிரசவத்தினை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஒரே நாளில்பார்த்திருப்பது இவரதுமனத்திறமையையும் சமூக மனப்பான்மையையுமே எடுத்துக் காட்டுவதாக உள்ளது. குறிப்பாக இப்பெண்மணியின் விசேட திறமையானது தாய்மையடைந்துள்ள பெண்ணுக்கு எப்போது குழந்தை பிரசவிக்கும் என்பதனை அப்பெண்மணியின் நாடி பிடித்தறிந்து சரியாகக் குறிப்பிட்டு சொல்லக் கூடியதாகத் திகழ்கின்றார். இது இவரது தனித்துவமான மருத்துவசேவையை வெளிப்படுத்தும் தன்மையாக இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

இதேபோல் செல்லையா கனகம்மா என்பவரும் சுமார் 37 வருடங்களாக தான் வசிக்கும் கிராமமான கள்ளிச்சை வடமுனைப் பகுதியில் தனது சமூகப்பணியை தொடர்ந்து செய்து வரும் பெண்மணியாகத் திகழ்கின்றார். ஏனெனில் இக்கிராமம் ஒரு நெடுந்தூரக் கிராமமாகவும், வைத்திய வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதனாலும் எல்லோரும் இவரது சேவையையே நாடிச் செல்கின்றனர். இவர் சுமார் 400 குழந்தைகளுக்கு மேல் பிரசவம் பார்த்திருப்பதுடன் ஒருதடவையில் ஆறு பெண்களுக்கு பிரசவம் பார்த்து எந்தவித பிரச்சினையும் இன்றி அவர்களுக்கு சுகப் பிரசவம் அடையச் செய்துள்ளார். இப்பிரதேசத் திலுள்ள எல்லோரும் இவர் மீது அன்பும் நம்பிக்கையும் வைத்திருப்பது இவரது கலைச் சேவையின் சிறப்பினையும் திறமையினையும் எடுத்துக் காட்டுவதாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தினுள் அமைந்துள்ள பூலாக்காடு கிராமசேவகர் பிரிவினுள் வசிக்கும் 45வயது நிரம்பிய திருமதி. லெட்சுமி கந்தப்பிள்ளை என்பவரும் ஒரு மருத்துவிச்சி தொழில் செய்யும் திறமையான பெண்மணியாக காணப்படுகின்றார். இவர் தனது தாயிடம் இருந்து இத்தொழிலைக் கற்றுக் கொண்டதுடன் 18வயதில் இத்தொழிலைச் செய்வதற்கு ஆரம்பித் துள்ளார். இவரது இக்கலைச் சேவை இப்பிரதேச மக்களுக்கு இன்றியமையாத சேவையாக இருப்பதுடன், இரவு பகல் பாராது தனது பகுதிக்குட்பட்ட இடங்களுக்கு யார் வந்து அழைத்தாலும் மனங் கோணாமல் உடன் சென்று பிரசவம் பார்க்கும் மனப்பாங்கு இவருக்கு உள்ளதாக இப்பிரதேச மக்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதுவரை இவர் சுமார் 450க்கு மேல் பிரசவம் பார்த்திருப்பதுடன் எல்லாக் குழந்தைகளையும் எந்த இடையூறும் இன்றி சுகப்பிரசவம் அடையச் செய்துள்ளார் என்பதனையும் மிகவும் மகிழ்வுடன் இப்பிரதேச மக்கள் கூறக் கேட்கக்கூடியதாக இருந்தது.

திகிலிவெட்டை கிராமத்தைச் சேர்ந்த 68வயது நிரம்பிய பொன்னையா செல்லம்மா என்பவரும் இப்பிரதேச மக்களுக்கு மருத்துவிச்சி வேலை செய்யும் ஒரு பெண்மணியாக இருக்கின் றார். இவரது இச்சேவை மக்களுக்கு மிகவும் அவசியமானதொன்றாக உள்ளது. ஏனெனில் இக்கிராமமக்கள் தங்களது அடிப்படை வசதிக ளைக்கூட நிறைவேற்ற வேண்டியிருப்பின் ஆற் றைக் கடந்து நகரத்துக்கு வரவேண்டியுள்ளது.

> இப்பிரதேசத்தில் மருத்துவிச்சு சேவை செய்யும் ஒவ்வொரு பெண்களும் எல்லா மக்களாலும் போற்றுதற்குரியவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் மதிக்கப்பட வேண்டியவர்களாவர். ஏனெனில் இச்சேவையை எல்லோராலும் செய்யமுடியாது.

குறிப்பாக இம்மக்கள் ஆற்றைக் கடப் பதற்கு தோணியையே பயன்படுத்துகின்றனர். அதுவும் மழைக்காலங்களில் மிகவும் கடினமான நிலையிலேயே பயணம் செய்ய வேண்டியுள் ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இருக்கும் மக்களுக்கு இப்பெண்மணியின் சேவை அவசிய மானதாக உள்ளது. வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பிரசவம் பார்க்கும் சந்தர்ப்பம் அரிதாக இருப்பதனால், இப்பெண் மணியையே அதிகமாக இங்குள்ள மக்கள் தெய்வமாக நம்பி இருக்கின்றனர். இப்பெண்மணியும் மக்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஒவ்வொரு பிரசவத்தையும் எந்தவித இடையூறுமின்றி சுகப்பிரசவமாகவே செய்கின்றார். இப் பெண் மணி சுமார் 40 வருடங்களாக இப்பிரதேச மக்களுக்கு சேவை செய்து வருவதுடன் 450 குழந்தைகளுக்கு மேல் பிரசவம் பார்த்துள்ளார். இங்குள்ள மக்கள் அனைவரும் இவரது சேவை யின் மீது நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் வைத்தி ருப்பதுடன் இவர் பிரசவம் பார்க்கும் தாயும் குழந்தையும் சுகப்பிரசவம் அடைந்து இப்பெண் மணியின் கைராசி என பெருமிதமாகக் கூறிக் கொள்வதனையும் அறியக்கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தினுள் அமைந்துள்ள சந்திவெளி கிராமத்தில் 48 வயது நிரம்பிய கணபதிப்பிள்ளை திவ்வியமலர் என்பவரும் மருத்துவிச்சி சேவை செய்யும் ஒரு பெண்மணி யாக உள்ளார். இவர் இக்கிராமத்தில் உள்ள மக்களுக்கு 15 வருடங்களாக இச் சேவையை செய்து வருவதுடன், சுமார் 250 குழந்தைக ளுக்கு மேல் பிரசவம் பார்த்துள்ளார். இரவு வேளைகளில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத சந்தர்ப்பத்தில் இப்பெண் மணியின் சேவை அவசியமானதாக உள்ளது. இப்பெண்மணியும் இரவில் எந்த வேளையாவது யார் வந்து அழைத்தாலும் இச்சேவையை அன்புடனும் இரக்கத்துடனும் செய்கின்றார் என இங்குள்ள மக்கள் குறிப்பிடுவதுடன் இவர்மூலம் சுகப்பிரசவமே அடைந்துள்ளது எனவும் மிகப் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார்கள்.

இதேபோல் பேரிலாவெளி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 55 வயது நிரம்பிய கந்தப்பன் வள்ளியம்மை மற்றும் 53 வயது நிரம்பிய அழகப்பன் பெரியப்பிள்ளை ஆகிய இருவரும் இப்பிரதேசத்தில் சுமார் 15 வருடங்க ளாக மருத்துவிச்சி வேலையை செய்து வரு கின்றனர். ஏனெனில் இப்பகுதி பிரதான வீதியில் இருந்து தொலை தூரத்தில் இருப் பதுடன் மக்கள் பிரயாணம் செய்வதற்குரிய வசதிகள் மிகவும் குறைந்த இடமாகும். எனவே இப்பெண்மணி களது சேவை இப்பகுதிக்கு மிகவும் அவசியமான தொன்றாக உள்ளது. மக்களும் இவ்விருவர் மீதும் மிகவும் நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ளனர். அதுபோல் இவர்கள் இரு வரும் எந்த வேளையிலும் சேவை செய்யக்கூடிய மனப்பாங்கிலேயே உள்ளனர். இதனால் மக்கள் இவ் இருவரது சேவையையும் எதிர்பார்ப்பவர் களாகவே உள்ளனர். இவர்களும் அதற்கேற்றாற்

"பெண்களால் உருவாக்கப்படும் படைப்புக்கள் ஆக்கபூர்வமானது என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படல் வேண்டும்."

போல் தங்களது சேவையை செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. இவர்களில் கந்தப்பன் வள்ளியம்மை என்பவர் சுமார் 150 பிள்ளைகளுக்கு பிரசவம் பார்த்துள்ளார். இவ்விருவரும் பார்த்த பிரசவம் எந்தப் பிரச்சினையும் இல்லாத சுகப்பிரசவ மாகவே அமைந்துள்ளது.

இதேபோல் 55 வயது நிரம்பிய மெனிக்கா சிவராசா எனும் பெண்மணியும் முறக்கொட்டான்சேனை பிரதேசத்தில் மருத்து விச்சி சேவை செய்யும் பெண்மணியாக உள்ளார். சுமார் 15 வருடங்களாக இச்சேவையை இப்பிரதேச மக்களுக்கு செய்து வருகின்றார். சுமார் 170 சுகப்பிரசவம் பார்த்துள்ளார். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியாத சந்தர்ப்பத்தில் இவரையே இங்குள்ள மக்கள் நாடுவதை அறியக்கூடியதாக உள்ளது. இதே போல் இதற்கு அருகே அமைந்துள்ள தேவபுரம் கிராமத்தில் 60 வயது நிரம்பிய அப்புகாமி மாரிமுத்து எனும் பெண்மணியும் இச் சேவை யைச் சுமார் 20 வருடமாகச் செய்து வருகின்றார். இதுவரை 250 குழந்தைக்கு மேல் சுகப்பிரசவம் பார்த்துள்ளார்.

இவை மட்டுமன்றி பாலையடித்தோணா கிராமத்தில் வசிக்கும் 80 வயது நிரம்பிய கறுத்தன் சின்னமுத்து மருத்துவிச்சி சேவை செய்வதுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு காது குத்தலும் இவரது சேவையாக உள்ளது. இங் குள்ள எல்லா மக்களும் தங்களது குழந்தைக ளுக்கு காது குத்துவதற்கும் இவரையே நாடிச் செல்கின்றனர். இவரது சேவை இக்கிராமத்திற்கு அவசியமானதொன்றாகவே உள்ளது. இதே போன்று இந்த இடத்தைச் சேர்ந்த 52 வயது நிரம்பிய கணபதிப்பிள்ளை இரத்தினம்மா என்பவர் வயிற்றுக்கு பார்க்கும் திறனைக் கொண்டுள்ளார். தாய்மை யடைந்துள்ள பெண் களது நிலையை உடன் அறிந்து அவர்களுக் குரிய நடவடிக்கைகளை உரிய முறையில் செய்வ தற்கு இவரது சேவை அவசியமானதொன்றாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் செட்டியார் குடியிருப்பைச் சேர்ந்த 48 வயது நிரம்பிய காசியன் அழகம்மா எனும் பெண்மணியும் தான் வசிக்கும் பகுதியில் மருத்துவிச்சி சேவை செய்யும் ஒரு பெண்மணி யாகத் திகழ்கின்றார். இவர் இச்சேவையை சுமார் 17 வருடங்களாகச் செய்து வருவதுடன் இதுவரை 300 இற்குமேல் பிரசவம் பார்த்துள்ளார். இப்பிரதேசத்தில் இவரைத் தெரியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் அந்தள விற்கு எல்லோருக்கும் தெரிந்த ஒரு பெண்மணி யாகவே காணப்படுகின்றார். எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் நபராகவே உள்ளார். இதனால் இங்குள்ள மக்கள் பெரிதும் இவரது சேவையை எதிர்பார்ப்பவர்களாகவே உள்ளனர்.

இப்பிரதேசத்தில் மருத்துவிச்சு சேவை செய்யும் ஒவ்வொரு பெண்களும் எல்லா மக்களா லும் போற்றுதற்குரியவர்களாகவும், மரியாதைக் குரியவர்களாகவும் மதிக்கப்பட வேண்டியவர்களா வர். ஏனெனில் இச்சேவையை எல்லோராலும் செய்ய முடியாது. இரவு பகல் பாராது, எந்த இடமாக இருந்தாலும், உடன் சென்று சேவை செய்யும் மனப்பாங்கு இப்படிப்பட்ட பெண்களி டமே உள்ளது. தற்பொழுது 10 வருடங்களுக்கு மேல் மருத்துவிச்சு சேவை செய்யும் பெண்க ளுக்கு அரச ரீதியாகவும் அங்கீகாரம் கிடைத் திருப்பது அப்பெண்மணிகளின் திறமையை எடுத்துக் காட்டுவதாகவேயுள்ளது. அத்தோடு இதனை பின்பற்றும் பெண்மணிகளுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாளர்களாகவும் விளங்கு கின்றனர். எனவே இதுபோன்ற பெண்களின்

சேவைகள் தொடரவும், வளர்ச்சி பெறவும் வேண்டும் என்பதோடு, இச் சேவையின் தாற்பரியத்தினை உணர்ந்து அவர்களுக்கு உறுதுணையாகவும் நின்று உதவி செய்வதுடன், அவர்களது சேவைக் குரிய சமூக அந்தஸ்தினை உயர்த்துபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.

மேலும், இப்பிரதேசத்தில் கவிதை, கட்டுரை, கதைகள் மூலம் தங்களது திறனை வெளிப்படுத்தும் பெண்களும் காணப்படுகின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக முறக்கொட்டான்சேனையைச் சேர்ந்த சந்திரசேகரம் சசிகலா என்பவரைக் குறிப்பிடலாம். இவரால் எழுதப்படும் படைப்புக்கள் சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துபவையாகவே உள்ளன. இவரது கலைச்சேவை இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை வெளிக்காட்டுவதாக இருப்பதும் பாராட்டக் கூடிய விடயமாக உள்ளது.

கோறளைப்பற்று தெற்குப் பிரதேசத்தினுள் பெண்களினது கலையம்சங்கள் காலம் காலமாக வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளதை அறியக்கூடியதாக இருந்தாலும், இவர்களது திறன்கள் சரியான முறையில் அர்த்தப்படுத்தப் படவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் கிருபைலெட்சுமி எனும் பெண்மணியினால் ஆரம்பிக்கப்பட்ட கலைமகள் கலா மன்றம் இவரது முயற்சியினால் வளர்ச்சியுற்று வந்தபோதும் 1990களில் ஏற்பட்ட நாட்டுச் சூழ்நிலை காரணமாக இவர்களது கலைச்சேவை குறுகிய வட்டத்தினுள் நின்று விட்டது. பல கலைச் சேவைகளை ஆற்றி வந்த இம்மன்றம் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை மாத்திரமே செய்து வருகின்றது. திறமையான கலையம்சங்கள் பொருந்திய பெண்மணியின் திறன்கள் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதற்கான காரணம் என்ன என பார்க்கும்போது, பெண்களின் கலையம்சங்களை இனம்கண்டு, அதை வளர்த்தெடுக்கக்கூடிய ஒரு ஒழுங்கமைப்பான அமைப்பு இல்லை, பாரம்பரியமான கலையம்சங்களின் தனித்துவத்தினை புரிந்து கொள்ளாத தன்மை, பெண்களினால் வெளிப்படுத்தப்படும் கலையம்சங்கள் பெறுமதியற்றவை என்ற எண்ணப்பாடு, புதிய தொழில் நுட்பவளர்ச்சியின் வரவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய இசை வடிவங்கள், இதுபோன்ற பல்வேறு கார ணங்களினால் பெண்களினால் உருவாக்கப்படும் கலையம்சங்கள் தனித்துவத் தன்மையினை இழந்து விடுகின்றது.

எனவே இது போன்ற எண்ணங்கள் களையப்பட வேண்டும். பெண்களால் உருவாக்கப்படும் படைப்புக்கள் ஆக்கபூர்வமானது என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படல் வேண்டும். பாரம்பரியமான கலையம்சங்களான கும்மி, கோலாட்டம், கரகாட்டம், கூத்து இது போன்ற பாரம்பரியமான கலையம்சங்களைக் கொண்டுள்ள கிருபைலெட்சுமி போன்ற பெண் மணிகளை இனம் கண்டு, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து அவர்களது சேவையைத் தங்குதடையின்றி செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வர வேண்டும். நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், நலன் விரும்பிகள், இப்பிரதேச கலையம்சங்களை வளர்ப்பதில் ஆர்வமாக இருக்கும் அமைப்புக்கள் எவராக இருப்பினும், முன்வந்து செயற்படுபவர்களாக இருந்தால், பெண்களினூடாக வளர்க்கப்படும் கலைகளுக்கும், பெண்களுக்கும் ஓர் சமூக அங்கீகாரம் கிடைப்பதுடன், பெண்களும் கலைத் திறன் கொண்டவர்கள் என்ற மனப்பாங்கும் எல்லோர் மனதிலும் விதைக்கப்படுவதுடன், பெண்களுக்குரிய தனித்துவமான அடையாளங்களும் வெளிவரக்கூடிய சூழலும் உருவாகும்.

கிருபைலெட்சுமி என்பவரது திறனுக்கு எடுத்துக்காட்டாக அவரால் மருத்துவ மாதரைப் புகழ்ந்து எழுதப்பட்ட பின்வரும் புகழ்மாலை மூலம் அவருக்கு இருக்கும் கலை ஆர்வத்தினை உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

# வீட்டு மருத்துவிச்சியின் புகழ்மாலை

பண்டைக்காலம் தொட்டு நல்ல பகுத்தறிவுடனே
பாரம்பரிய மருத்துவமாது வளர்த்தார்,
கண்கண்ட கை மருந்தை கவசமாக்கியே
கச்சிதமாய் கருமமது செய்து முடித்தார்.

எத்தனையோ ஆயிரமாம் குழந்தைப் பிரசவம்
எழிலுடனே கருமாதுக்கு உதவி புரிந்து
காளையவன் துணையுடனே களங்கம் வராமல்
கருணை வைத்து பிரசவம் செய்து முடிப்பாள்.

அம்மாடி ஆத்தாடி என்று துடிக்கும்
அரிவையரை அணைத்து மெல்லே ஆறுதல் கூறி
தலையை தடவியல்லோ சாதுரியமாய்
சிசு உதிக்கும் தருவாயில் சேவைகள் புரிவாள்.

பாலைப் பழம் போலவே பாலன் பிறக்க
பக்குவமாய் நஞ்சுக் கொடி தனையகற்றி
மணிநிமிடம் கூறியே மகிழ்ந்தெழுந்து
மழலை தனை நீராட்டி அன்னையின் கையில் கொடுப்பாள்.

அக்காலத்தில் மருத்துவமனையும் மில்லையே
ஆரோக்கியமாய் பிள்ளை பிறந்தது தானே,
இத்தனைக்கும் துணைபுரிந்த மருத்துவமாதை
எப்படி நாங்களும் புகழாரம் சூடுவோம்

கல்வி அறிவில்லாத காலகட்டத்தில்
கருமாதுக்குதவிய தெய்வமாவாள்,
எத்தனையோ மருத்துவத் தெய்வம் மறைந்தாலும்
எண்ணில்லா மருத்துவிச்சி வளர்ந்து கொண்டிருக்கா.

இரணசிசு கிடைக்கும் பிரசவத்தாயை
எப்படி துணிவூட்டி இரக்கம் காட்டுவாள்
அத்தனைக்கும் நெஞ்சமதில் துணிவுடனே,
ஆடி நடை போடும் தெய்வமகளாவாள்.

ஈருயிரோ மூவுயிரோ காக்கும் தெய்வத்தை
எப்படி புகழ்மாலை சூட்டுவோம் நாமும்.
வாருங்கள் சோதரிகள் வாழ்த்திப் பாடுவோம்
மருத்துவத்தாய்மாரை புகழ்ந்து பாடுவோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தினுள் காணப்படும் பல பிரதேசங்களிலுள்ள பெண்கள் தங்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர். இவற்றுள் ஒரு பிரதேசமாக இருக்கும் கோறளைப்பற்று தெற்குப் பிரதேசத்திலுள்ள பெண்கள் அதிகமான கஷ்டங்களையும், துன்பங்களையும் இடம்பெயர்வின் மூலம் சந்தித்து வந்தாலும் கூட, தங்களது கலைத் திறமைகளையும், ஆற்றல்களையும் அவ்வப்போது இடம்பெறும் கலை நிகழ்வின் போதும், தமது அன்றாட வாழ்வின்போதும் வெளிப்படுத்துபவர்களாகவே உள்ளனர். இதில் சிறப்பம்சமாக குறிப்பிடக்கூடியது, "இப் பெண்மணிகள் எந்தவித பிரதியுபகாரமும் கருதாது தமது சேவைகளைச் செய்து வருவது இவர்களின் பெருந் தன்மையினை எடுத்துக்காட்டுவதாகவேயுள்ளது."

இப் பெண்மணிகளால் செய்து வரும் நாட்டுமருத்துவத் தொழிலானது இன்றைய விஞ்ஞான யுகத்திற்கு ஒரு சவாலாக அமைவதுடன், இப்பிரதேசத்துக்கு அவசியமானதொன்றாகவும் அமைந்துள்ளது.

எனவே இப்பிரதேசத்தினுள் இலைமறைகாய்களாக மிளிரும் இப் பெண்மணிகளது கலைத் திறமைகளை வெளிக்கொண்டுவருவதன் மூலம், தங்களுக்கே உரிய தனித்துவமான கலைத்திறனை அவர்களுக்கு உணரச்செய்து அதனை ஏனையவர்களுக்கும் ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கும் பரவச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

## கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக சாகித்திய விழா – 2007 போட்டி முடிவுகள்

### கட்டுரை கனிஸ்ட பிரிவு

1ம் இடம் – சு. சுவர்ணா - மட்/முறக்கொட்டான் சேனை இ.கி.பி. வித்தியாலயம்
2ம் இடம் – தி. ராம்சிறி - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்
3ம் இடம் – சீ. நிரோஜினி - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்

### கட்டுரை சிரேஸ்ர பிரிவு

1ம் இடம் – ரினுஜா ஜெகதீஸ்வரன் - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்.
2ம் இடம் – பாலன் சுதாகரன் - மட்/கிரான் மகா வித்தியாலயம்.
3ம் இடம் – சி. கோகுலவதி - மட்/சந்திவெளி சித்தி வினாயகர் வித்தியாலயம்.

# "கல்வி"




காலச் சுழலின் பெருங்கதியில்
கரையுந் செல்வக் கணத்துள்ளே
காலம் முழுதும் நிலை கொண்ட
கவி நிறை செய்வது கல்வி ஒன்றே!

உண்மை அன்பு உயர்ந்த மதி
உள்ளத் துறுதி, ஓர்ந்த குணம்
திண்மையாவும் தேர்ந்தறிந்து,
திகழச் செய்வதும் கல்வி ஒன்றே!

தூண்டும் அறிவுச் சுடர் தன்னில்
தூய நெய்யின் துளி வார்த்து,
எண்டொடு சான்றோர், அணி செய்து
இயற்றிடும் இசை பெரு காவியங்கள்

பாழும் மடமைப் பிணி பறித்து
பண்பொடு புலமைப் பயிர் வளர்த்து
முழு உலகும் எமைத் தொடர்ந்தே!
முற்றம்படைத் திடும் கல்வியது:

கவிஞர்:-
சந்திரன். க. கிருஷ்ணபிள்ளை



# கோறளைப் பற்று தெற்குப் பிரதேசமும் ஊர்களும்

S. சினித்தம்பி, S. நடராசா.



அறிந்த ஊர்களில் பெறப்பட்ட தகவல்கள் இப்பிரதேச மக்களுக்கு சென்று அடைய வேண்டும் என்பதே இந்த ஆக்கத்தின் நோக்கமாக உள்ளதுடன் இவ் ஊர்களைப் பற்றிய பின்புலங்கள் மிகக் குறைவாக உள்ளதை காணலாம்.

கோரளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகமானது 2002ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் திகதி முதல் கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இருந்து பிரிந்து தனி ஒரு பிரதேச செயலகமாக சிறப்புடன் இயங்கி வருகின்றது. மட்டக்களப்பு மாநகரின் வடக்கு திசையாக 28.கி.மீ தூரத்தில் இச் செயலகம் உள்ளது. வடக்கு திசையாக பொலன் னறுவை மாவட்டத்தில் திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவையும், தெற்கு திசையாக ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவையும், கிழக்கு திசை யாக கோரளைப்பற்று, கோரளைப்பற்று மேற்கு மற்றும் வங்களா விரிகுடாக் கடலையும், மேற்கு திசையாக திம்புலாகல பிரதேச செயலக பிரிவை யும் கொண்டு 58170 ஹெக்டயர் நிலப்பரப்பு உள்ள பிரதேச செயலக பிரிவாக காணப் படுகின்றது.

இங்கு பிரதான தொழிலாக நெல் விவ சாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடித் தொழில் மற்றும் பிறதொழில் செய்கின்ற மக்கள் வசிப்பதுடன் 5,5500க்கு மேற்பட்ட மக்கள் தொகையும் 8400க்கு மேற்பட்ட குடும்பங்களும் உள்ளடக்கிய 18 கிராமசேவகர் பிரிவை கொண்ட ஒரு பிரதேச செயலகமாக இருக்கின்றது.

இப்பிரதேசத்தில் இருக்கின்ற ஊர்க ளுக்கு எவ்வாறு பெயர் வந்தது, அவ்வாறு வர என்ன காரணமாக இருந்தது என இங்குள்ள பெரியவர்கள் ஊடாக அறியும் போது அவற்றை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இங்கு எல்லா ஊர்களைப் பற்றி அறிய முடியாவிட்டா லும் அறிந்த ஊர்களில் பெறப்பட்ட தகவல்கள் இப்பிரதேச மக்களுக்கு சென்று அடைய வேண் டும் என்பதே இந்த ஆக்கத்தின் நோக்கமாக உள்ளதுடன் இவ் ஊர்களைப் பற்றிய பின்புலங் கள் மிகக் குறைவாக உள்ளதையும் காணலாம்.

**சந்திவெளி**

இக்கிராமமானது படுவான்கரைப் பகுதியில் திமிலதீவில் குடி கொண்டிருந்த திமிலர்கள் செய்த கொடுமையை தாங்க முடியாமல் முற்குகர்களும், ஆப்கானிஸ்தானில் இருந்து வந்திருந்த பட்டானிகளும் சேர்ந்து திமிலரை வெருகலுக்கு அப்பால் துரத்திச் சென்று விட்டு வரும் போது பல வழிகளிலும் சென்ற வர்கள் வந்து சந்தித்த இடமாக இவ்விடம் அமை வதால் 'சந்திவெளி' என பெயர் பெற காரண மாயிற்று. இக்கிராமமானது கிடைக்கப்பெற்ற தடயங்களின் படியும் முன்னைய காணி உறுதி யின் படியும் 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் உருவாகி இருக்க வேண்டும். கிராமத்தின் ஆற்றை அண்டிய பகுதியில் குடியமர்ந் துள்ளனர். அதற்கு அத்தாட்சியாக முந்திய காலத்தில் உள்ள வீட்டுத் திட்டிகளும், வயது முதிர்ந்த தென்னை மரங்களும் அப்பகுதியில் உள்ளது.

'மட்டக்களப்பு மாண்மியம்', 'குகன்குல வரலாறு' ஆகிய நூல்களின் படி இங்கு குடியிருந் தவர் பெத்தான் குடி வயிற்றுவர் என கூறப்பட்ட போதும், பிற்காலத்தில் குடி வழி இல்லாது போய் விட்டது. குடி முறைமை ஒழிந்து போனாலும் முந்திய தலைமுறையின் பெயரில் குடும்ப வழிமுறையைக் கடைப்பிடித்து ஆலயங்களில் பூசைகள், திருவிழாக்கள் செய்து வருவதை காண லாம்.

இங்கு 1930ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் வாழ்ந்தவர்கள் வடசேரி, தென்சேரி என இரண்டாகப் பிரிந்து கொம்பு விளையாட்டை பெரும் விமர்சையாகக் கொண்டாடி கொம்பு கட்டி முறித்து அம்மனுக்கு வெற்றி கொடுத்து பால் பொங்கினால் கிராம மக்களுக்கு அம்மன் சஞ்சலம் வராது என்பது இக்கிராமத்து மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளது.

## முறக்கொட்டான்சேனை

இங்கு சுளகு (முறம்) இழைக்கும் கொட்டான் ஆள் ஒருவர் இருந்திருக்கின்றார். 'சுளகு' என்பது முறம் என அழைக்கப் படுகின்றது. முறமும் கொட்டானும் இணைந்து முறக்கொட்டான்சேனை என பெயர் வந்தது என ஒரு சாராரும், திமலரை வெருகலுக்கு அப்பால் துரத்திச் சென்றுவிட்டு வரும்போது முற்குகர் களும் பட்டாணிகளும் வந்து வெற்றி முரசு கொட்டிய இடமாக இருந்தது என்ற காரணத்தால் முறக்கொட்டான்சேனை என பெயர் வந்தது என வேறு சிலரும் தெரிவிக்கின் றனர். இவற்றை விட ஏனைய கிராமங்களில் காணப்படுவதைப் பார்க்கிலும் கூடுதலாக முடக்கொத்தான் செடி இருப்பதால் முடக்கொத்தான் செய்கின்ற சேனையாக அக்காலத்தில் இப்பிரதேசம் இருந்ததினால் இப்பெயர் வந்தது என ஒரு கருத்தும் உண்டு.

இங்குள்ளமக்களின் பெரும்பாலானோர் மீன்பிடித்தொழில் செய்பவர்களாக காணப்படு வதுடன், கலையில் ஆரம்பகாலங்களில் ஈடுபாடு உள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். திருவிழா காலங்களில் கூத்து ஆடும் வழக்கம் இங்கு இருந் திருக்கின்றது.

## கோரகல்லிமடு

இக்கிராமத்தில் ஏனைய கிராமங்களை விட கூடுதலான கோரபுற்களும், கள்ளி மரங் களும் காணப்பட்டமையால் கோரகல்லிமடு என பெயர் வந்தது. இங்கு உள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி தொழில்கள் செய்கின்றவர்களாக காணப்படுகின்றனர்.

## கிரான்

கிரான் புல் என்ற ஒரு வகை புல் இனம் இங்கு இருந்தமையால் கிரான் என பெயர் வரலாயிற்று. இங்கு மக்கள் பல இடங்களில் இருந்து வந்து குடியேறி இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயத் தொழிலை செய்கின்றவர்களாக காணப்படுவது டன் இங்கு குடிமுறைமை ஆரம்ப காலங்களில் இருந்திருக்கின்றது. ஆனால் குடிமுறைமை தற்போது வழக்கத்தில் இல்லாவிடினும் கோயிற் திருவிழாக்களில் குடிமுறைமைக்கு ஏற்ப திரு விழாக்கள் செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இங்கு பெயர் பெற்ற விஷ வைத்தியர் கள் இருந்து பணி செய்து இருந்திருக்கின்றனர். தூர இடங்களில் இருந்து மக்கள் வந்து வைத்திய சேவை பெற்று சென்று இருப்பதாக இங்குள்ள முதியோர் தெரிவிக்கின்றனர்.

## பாலையடித்தோணா

மணல் தன்மை கொண்ட இக்கிராமத் தில் சிறிய சிறிய நீர்த் தோணாக்களும், நீர் வழிந் தோடக்கூடிய கால்வாய்கள் போன்றனவும், பாலை மரங்களும் காணப்படுகின்ற தன்மை யைக் கொண்டு பாலையடித்தோணா எனப் பெயர் வந்தது என அறிய முடிகின்றது.

### தேவபுரம்

இக்கிராமமானது **K.W.** தேவநாயகம் முன்னைநாள் பராளுமன்ற உறுப்பினரின் பெயரினை மையமாகக் கொண்டு வந்தது. இங்கு இருக்கின்ற புகையிரத நிலையமானது சித்தாண்டி குடிக்குரியதாக இருந்தது. தற்போது தேவபுர புகையிரத நிலையமாக அழைக்கப் படுகின்றது.

இங்கு மக்களில் பெரும்பாலானோர் கடல், ஆறு மீன்பிடி தொழில் செய்கின்றவர்க ளாக காணப்படுகின்றனர்.

### குடும்பிமலை

இப்பிரதேசத்தில் காணப்படும் மலை யின் உச்சியில் குடும்பி போன்ற அமைப்பு இருப்பதால் குடும்பிமலை என பெயர் வந்தது. மலையின் உச்சியில் குமரன் ஆலயம் காணப்படுவதுடன் அடிபாகத்தில் காளிகோயில் உள்ளது.

### பெண்டுகள் சேனை

இங்கு உள்ள பெண்கள் கூடுதலானோர் சேனைப் பயிர்ச் செய் கையில் ஈடுபடுவதினாலும் குரக்கன், மரவள்ளி பயிர்கள் சேனையாக செய்கின்றபடியாலும் பெண்டுகள் சேனை என பெயர் வர காரணமாகின்றது.

### வாகனேரி

இப்பிரதேசமானது கூடுதலாக வனப் பகுதியாக காணப்படுவதுடன் இப்பகுதி மக்கள் விவசாயம், விலங்கு வேட்டை தொழில் செய்கின் றதோடு இயற்கையான ஊற்றுக்களையும், பெரிய நீர் நிலைகளையும் கொண்டு காணப் படுவதினால் வாகனேரி என அழைக்கப் படுகின்றது.

இப்பிரதேசத்தில் காணப்படும் நீர் தேக்கங்களில் எப்போதும் நீர் காணப்படுகின்ற தன்மை உண்டு, இங்கு இருந்து வாழைச் சேனை கடதாசிக் கூட்டுத் தாபனத்திற்கு முன்னர் நீர், குழாய் வழி ஊடாக பெறப்பட்டு இருந்திருக் கின்றது.

### முறுத்தானை

இப்பிரதேசத்தில் அதிகமான வயது முதிர்ந்த யானைகள் காணப்படுகின்றது. இதனால் முறுத்தானை என்ற பெயர் வரக் காரணமாயிற்று. அத்துடன் இங்கு யானைகள் அதிகமாகவும் கூட்டமாகவும் காணப்படுகின்றது. இங்கு மக்கள் விவசாய நடவடிக்கையும் வேட்டையாடுதல் போன்ற தொழிலும் செய்து வருகின்றனர்.

### கோராவெளி

மதுரையினை அகோரம் கொண்டு எரித்த கண்ணகி வந்து அமர்ந்த இடமாக எண்ணப்படுவதினால் இப்பிரதேசம் கோராவெளி என அழைக்கப்படுகின்றது. இதை விட வேறு ஒரு கருத்தும் உண்டு. இங்கு கோர வல்லி என்ற ஆதிவாசிப் பெண் இப் பிரதேசத்தில் வாழ்ந்த மையால் அப்பெயர் மருவி கோராவெளி என அழைக்கப்படுகின்றது.

### புலிபாய்ந்தகல்

இக்கிராமமானது கிரானில் இருந்து மேற்கு பக்கமாக காணப்படுகின்றது. இவ் ஊரில் காணப்படும் நாற் சந்தியின் வட பகுதியின் ஊடாக செல்லும் ஆற்றின் ஊடாக புலி பாய்ந்து சென்றதினால் புலிபாய்ந்தகல் என பெயர் வந்தது.

### திகிலிவெட்டை

ஆரம்பத்தில் பீலி வெட்டை என இக்கிராமம் அழைக்கப்பட்டு காலப்போக்கில் திகிலிவெட்டை என பெயர் மாற்றம் பெற்றது. இங்கு மேடும் பள்ளமும் மலைத் தொடருமாக நில அமைப்பு காணப்படுவதினாலும், நீர் வழிந் தோடக்கூடிய பீலி போன்ற வடிவில் நில அமைப்பு இருப்பதினாலும் திகிலிவெட்டை என பெயர் வந்து இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.



பெயர் :- கணபதிப்பிள்ளை பொன்னையா

**கௌரவிக்கப்படும் துறை – நாட்டுக் கூத்து**

விலாசம் :- பிள்ளையார் கோயில் வீதி,
கோரகல்லி மடு.

பிறந்த திகதி :- 1927.04.08

துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப் பகுதி :- 10 வயதில் இருந்து.

பங்கு கொள்ளும் துறை :- கூத்து

வடமோடியில் – குருசேத்திரம் போர், திருத்தொண்டர் நாடகம், சுபத்திரை கல்யாணம்.

தென்மோடியில் – பரிமளகாச நாடகம், அல்லி நாடகம், அனுபுத்திர நாடகம் என கூத்துக்கள் பழக்குவதிலும், எழுதுவதிலும் பெயர் பெற்ற அண்ணாவியாராகத் திகழ்கின்றார்.

# கலைஞர்களை வாழ்த்துவோம்

# கலைகள் வாழும்

பெயர் :- நவரெட்ணம் கிங்ஸ்லி தயாளகுணசீலன்.

**கௌரவிக்கப்படும் துறை – ஓவியம், இசை**

விலாசம் :- ஆச்சிரமம், கிரான்.

பிறந்த திகதி :- 1950.2.19

துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப் பகுதி :-
1965ம் ஆண்டில் இருந்து



பங்கு கொள்ளும் துறை :- ஓவியம், எழுத்துத்துறை கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல், இசை அமைத்தல், சிந்தாமணி, வீரசேகரி, தொண்டன், அமுதம் ஆகிய பத்திரிகைகளில் ஆக்கங்கள் வெளிவந்தமை.



பெயர் :- சின்னத்தம்பி கண்ணகை
(மருத்துவிச்சி)
**கௌரவிக்கப்படும் துறை - கிராமிய மருத்துவம்**

**விலாசம் :-** குடும்பி மலை.
**பிறந்த திகதி :-** 1926.
**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப் பகுதி :-**
50 வருடத்திற்கு மேல்,
**பங்கு கொள்ளும் துறை :-** பிரசவ வைத்தியம் பார்ப்பது.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு நாளில் 14 பேருக்கு பிரசவ வைத்தியம் பார்த்த பெருமைக் குரியவர் தற்போதும் கிராமத்தில் வீடுகளில் பிரசவம் நடக்கும் போது சேவை செய்து வருகின்றார்.

# கலைஞர்களை வாழ்த்துவோம்

# கலைகள் வாழும்



**பெயர் :-** கனகசபை கந்தசாமி
**கௌரவிக்கப்படும் துறை - கிராமிய மருத்துவம்**

**விலாசம் :-** பெரிய தெரு வீதி, வடமுனை.
**பிறந்த திகதி :-** 1937.12.30
**பங்கு கொள்ளும் துறை:-** முறிவு வைத்தியம், நாட்டு வைத்தியம்.
**பங்கு கொள்ளும் காலம்:-** ஏறக்குறைய 40 வருடம்.

# உறவுகளைப் பேணி நட

என். கே. தயாளகுணசீலன்

உண்டான கல்வி செல்வம் உனக்கிருந்தும்
உறவுதன்னைப் பேணாத வாழ்க்கையெங்கே
நன்றென்பார் தாளையுனைக் கைவிட்டேகி
நண்பரென்றும் சுற்றமென்றும் சாற்றுவோர்கள்
உண்டான உறவுதனைப் பேணுதற்கு
ஒப்புரவு இல்லாத குடிமை கண்டோம்
அன்று நம் முன்னோர்கள் ஆக்கிவைத்த
அழகான உறவுகளின் பெருமையெங்கே

சாதிமதம் இனமென்று யார்கண்டது
சற்குருவே நீதிவழி காட்டி நிற்க
ஏது மறியாப் பாவி மனிதனிங்கே
எத்தனையோ பிரிவுகளைத் தனக்குள் வைத்து
சூதுமனம் கொண்டதற்கு யார்பொறுப்பு
சுத்தமனம் இல்லாதான் துணிவில்லாதான்
ஆதலினால் அவனேதான் உறவைப்பேண
அருகி நின்றான் அடுக்களைக்குள் சல்லியானான்

அன்புதான் இன்ப ஊற்று என்றான் புத்தன்
அன்பையே நேசியென்றான் இயேசு, காந்தி
அன்பையே போதித்து வழி நடந்தார்
அன்புடைய தாசர்களை உறவாய்க் கண்டார்
இன்பமுற நாம்மட்டும் உறவைப் பேண
இதயமில்லா மனிதர்களா? இல்லை, உண்மை
அன்பு தனை அகல்விளக்காய் ஏற்றி நிற்போம்
அங்கேதான் மலரும் எங்கள் உறவின் வித்து.

எம்மதமோ இனமொழியோ வேறுபாடோ
எவனொருவன் உன்னுடன் இணைகின்றானோ
அம்மனிதன் தன்உறவை இதயத்தில் வை
ஆசிவரும் அன்புவரும் பாசம் பொங்கும்
கன்னமுறு கள்வனுக்கும் இதயமுண்டு
காருண்ய சிந்தை மட்டும் உனக்கிருந்தால்
வன்மமுறு தீயனும் உன்உடன் பிறப்பாம்
வகைதெரிந்து நடப்பதொன்றே மனிதநேயம்

# கோராவெளியும் கண்ணகி அம்மன் வரலாறும் வழிபாடும்

திரு. எஸ். சிவசுந்தரம்



கண்ணகி கதை பற்றிக் கூறும் முதல் நூல் சிலப்பதிகாரமாகும். இந்நூல் சங்கமருவிய காலத்தைச் சேர்ந்ததாகவும், கற்புடைய மங்கையான கண்ணகியைத் தலைவியாகவும் கோவலனைத் தலைவனாகவும் கொண்டு இளங்கோவடிகளால் எழுதப்பட்ட ஒரு காப்பியம் ஆகும். ஐம்பெரும் காப்பியங்களுள்ளே காலத்தால் முற்பட்டதாக விளங்கும் சிலப்பதிகாரமானது தன்னிகரில்லாத் தலைவன் தலைவி, நாடு, நகரம், அரசியல், ஊழ்வினை, பண்பாடு என பல அம்சங்களை வெளிப்படுத்தி நிற்பதுடன் மணிமேகலை எனும் காப்பியத்திற்கு வழி சமைத்துள்ளது. இந்நூலின் உயரிய நோக்காக விளங்கும் அம்சங்கள் எனும்போது, அரசியல், பிழைத்தோனுக்கு அறன் கூற்றுவனாதல், ஒருவர் செய்த ஊழ் வினைப் பயன் தப்பாது அவரையே சாரும் மற்றும் கற்புடைய மங்கையர் உயர்ந்தோரால் போற்றப்படுவர் என்பனவாகும். சிலப்பதிகாரம் கொற்றவை, காளி, ஆகிய தெய்வங்களுடன் கண்ணகியைத் தொடர்பு படுத்துவதுடன், சேரன் செங்குட்டுவன், கஜபாகு வேந்தன், சோழன் போன்றோர் கண்ணகிக்கு விழா எடுத்ததாகவும் இந்நூல்மூலம் அறிய முடிகிறது.

ஈழத்தில் கண்ணகி வழிபாடானது கஜபாகு மன்னனால் கொண்டு வரப்பட்டதாகவும், யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் கண்ணகி கோவில்கள் அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதற்குச் சான்றாக வற்றாப்பளை, முல்லைத் தீவு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கண்ணகி கோயில்களைக்

## கண்ணகி வழிபாடு

இந்து மதமானது இறைவழிபாட்டில் ஆகமம் சார் வழிபாடு, ஆகமம் சாரா வழிபாடு என இரு தளங்களைக் கொண்டுள்ளது. இவ் இரண்டு வழிபாட்டு முறைகளினதும் நோக்கம் ஒன்றாக இருப்பினும் வழிபாட்டு முறைமைகள் வேறுபட்டே நிற்கின்றன. அந்த வகையிலே இந்து மதத்தின் சக்தி வழிபாட்டின் ஒரு பிரிவாக அன்று முதல் இன்றுவரை "பத்தினித் தெய்வ' வழிபாடு எம்மிடையே இடம்பெற்று வருவதோடு, நீண்ட வரலாற்றுப் பின்னணியையும் கொண்டதாக இந்துக்கள் மத்தியில் விளங்கும் இவ்வழிபாடானது ஆகமம் சாரா வழிபாட்டு முறையினுள்ளே அடங்குகின்றது. சங்ககாலம் முதல் இடம்பெற்று வரும் இவ்வழிபாடானது இந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து காணப்படுவதுடன், தமிழ்நாட்டில் பக்தி நெறியுடன் நெருங்கிய தொடர்புடைய இவ்வழிபாடு ஆரிய, திராவிட கலப்பால் பரவியது எனக் கூறப்படுகின்றது.

குறிப்பிடலாம். நாவலர் பெருமான் காலத்தில் அவர் மேற்கொண்ட ஆகமம் சாரா வழிபாட்டு எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக இவ்வாறான ஆலயங்கள் இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி அம்மன் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் ஆகமம் சார் வழிபாட்டு முறைமைக்குள் உட்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நாவலரின் மதப்பிரச்சாரம் சென்றடையாத சில தீவுப் பிரதேசங்களில் இன்றும் கண்ணகி வழிபாடுகள் இடம் பெறுவதை அவதானிக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய தெய்வ வழிபாட்டிற்கு இல்லாத பெருமை கண்ணகி வழிபாட்டிற்கே உண்டு. இதற்குக் காரணம் 19ம் நூற்றாண்டில் நாவலர் பெருமானது ஆகமம் சாரா வழிபாட்டு எதிர்ப்புப் பிரச்சாரம் வடபகுதிகளில் அதிகமாகவும், கிழக்கிலும் மற்றும் சில தீவுப்பகுதிகளிலும் குறைவாகவும் அல்லது சென்றடையாது இருந்தமையும் ஒரு காரணமாகக் கருதலாம். இதனை "மட்டக்களப்பு மாண்மியம்" எனும் நூல் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட ஏழு கண்ணகி சிலைகள் கிழக்கின் ஏழு இடங்களில் வைத்து வழிபடப்பட்டதாக கூறுகின்றது. இதனைப் பின்வரும் பாடல் அடி தெளிவுபடுத்துகின்றது.


வினாயகர் பானையை அடுப்பில் வைக்கும் காட்சி

*"பட்டி நகர், தம்பிலுவில் வீரமுனை காரை நகர்......"*

என்ற பாடல் மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு பற்றி எடுத்துக் காட்டுவதுடன் "குயில்வசந்தன்", 'பட்டி மேட்டு கண்ணகி காவியம்' போன்ற நூல்களும் எமது மாவட்டத்தின் கண்ணகி வழிபாட்டுக்கு பெருமை சேர்க்கின்றது.

கண்ணகி வழிபாடும், அதன் நம்பிக்கைகளும் எனும்போது, மக்கள் நோயில் இருந்து விடுதலை பெறவும் மழை வளம் வேண்டியும் வழிபட்டதுடன், கண்ணகியின் கோபத்திற்கு ஆளாகினால் வைசூரி, குக்கல், வெப்பு, அம்மை, சின்ன முத்து, கொப்பளிப்பான், கண்நோய் போன்ற நோய்கள் வரும் என அஞ்சி வழிபட்டனர். கிராமங்களில் ஆண்டு தோறும் கண்ணகி வழிபாடு இடம்பெறாவிட்டால் துக்குறிகளும், தீய நிகழ்ச்சிகளுமே தொடர்ந்து நடைபெறும் என்ற நம்பிக்கை எமது மக்களிடம் இன்று வரையும் காணப்படுகின்றது. கண்ணகி வழிபாட்டில் இடம் பெறும் நிகழ்வுகளாக கதவு திறத்தல், கும்பம் வைத்தல், தெய்வமாடல், உடுக்கையடித்தல், காவியம் பாடல், தீமிதித்தல், பொங்கல் படையல், திருக்குளிர்த்தி அம்மானை, தாலாட்டு குளிர்த்திப்பாடல் என்பன முக்கியம் பெறுகின்றன. எமது பிரதேசத்தின் பத்தினித் தெய்வ வழிபாட்டைப் பொறுத்தவரை இவ்வழிபாடானது கண்ணகியாகவும் மற்றும் காளி, பேச்சி, மாரி என பலமுக நாமங்களில் வழிபடப்படுகின்றது. கண்ணகிக்கு உகந்த நாள் வைகாசித்திங்கள் ஆகும். இந்தப் பூரணை நாளிலே கண்ணகிக்கு சடங்கு எனும் விழா எடுக்கப்படுவது வழக்கமாகும்.

### கோராவெளி கண்ணகி அம்மன் வழிபாடு:

கண்ணகி வழிபாட்டில் கோராவெளி கண்ணகி அம்மன் கோயில் பற்றியும், அதன் வழிபாட்டு அம்சங்கள் பற்றியும் நோக்குவது பொருத்தப்பாடுடையதாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயமானது பல வழிபாட்டு மரபுகளையும், சிறப்பம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மட்டக்களப்பின் வடக்கே 25km தொலைவில் உள்ள கிரான் பிரதேசத்திற்கு மேற்காக சுமார் 8km தொலைவில் கோராவெளி எனும் விவசாய வயல்வெளிக் கிராமத்திலேயே இவ் ஆலயம் அமைந்துள்ளது. சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்ததாகக் கூறப்படும் கோராவெளி கண்ணகியம்மன் ஆலயமானது இப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக மட்டுமன்றி இப்பிரதேசத்தில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வழிபாடு செய்யும் ஓர் இடமாகவும் சிறப்புப் பெறுகின்றது. இப்பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழில் விவசாயம் ஆகும். அந்த வகையில் விவசாயிகளின் காவல் தெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும் மற்றும் அவர்களை நோய்நொடியில் இருந்து காத்து சிறப்பான வாழ்வளிக்கும் தெய்வமாகவும் மக்கள் மத்தியில் இத்தெய்வம் இடம் பிடித்துள்ளது. இப் பிரதேசத்தின் பொதுவழிபாட்டுத்தலம் எனும் கருத்தை எடுத்துக்காட்டும் இவ் ஆலயமானது அமைப்பில் சிறிதாகவும், புகழில் பெரிதாகவும் பறைசாற்றி நிற்கின்றது.

நாற்புறமும் நீரோடைகளையும், வெண்மணற் பரப்புக்களையும், படர்ந்து வளர்ந்த பெரிய முதுரை மரங்களையும் மற்றும் சுற்றுப்புறம் முழுவதும் வயல் நிலங்களும் நிறைந்து காணப்படும் ஓரிடமாகும். மெல்லிய சுகமான இளங் காற்றையும், மலர்களின் நறுமணத்தையும், வண்டினங்களின் ரீங்கார ஓசையையும் மற்றும் அமைதியான ஒரு சூழலையும் காணக் கூடிய ஒரே இடம் கோராவெளியேயாகும். யதார்த்த ரீதியாக நோக்குமிடத்து எமது மாவட்டத்தில் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் வெப்பநிலை உயர்வாக காணப்படுவதுடன், இக்காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய ஒரு பிரதேசமாகவும் இயற்கையழகை அனுபவிக்கக் கூடிய ஓரிடமாகவும் திகழ்வது மற்றுமொரு விசேடமாகும்.



> "மட்டக்களப்பு மாண்மியம்" எனும் நூல் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட ஏழு கண்ணகி சிலைகள் கிழக்கின் ஏழு இடங்களில் வைத்து வழிபடப்பட்டதாக கூறுகின்றது.

இவ் ஆலயத்தின் தோற்றம் பற்றிய கருத்தைப் பார்க்கும்போது, கண்ணகி அம்மன் குழந்தைகளின் அழுகுரல் கேளாத ஓரிடம் தேடிச் சென்று இங்கு உறைந்தாள் எனவும், இயற்கை அகோரம் பொறுக்க முடியாமல் குளிர்மையான இடம் தேடிச் சென்று இங்கு உறைந்தாள் எனவும் கூறப்படுகின்றது. மேலும் இப்பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபட்ட ஒருவர் அவரது விவசாயம் வரட்சி காரணமாக நட்டம் ஏற்பட அதனை நினைத்து கவலையடைந்து கொண்டு கொக்கட்டிய மர நிழலில் படுத்ததாகவும், அப்போது அவரது கனவில் கண்ணகி அம்மன் தரிசனமாகி "என்னை நினைத்து வழிபாடு செய்து உனது குறையை முன் வைத்தால் நன்மை கிடைக்கும்" என கனவில் கூறியதற்கு ஏற்ப அவர் அவ்விடத்தில் கொத்துப் பந்தலிட்டு பச்சைக் களி மண்ணால் பானை செய்து பொங்கல் செய்வதாக நேர்த்தி வைக்க மழை கிடைத்ததாகவும், அதற்

காக அன்று முதல் அவ்விடத்தில் கண்ணகிக்கு பந்தல் அமைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. இன்றும் கூட விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் வரட்சி ஏற்படுகின்ற காலங்களில் கோராவெளி அம்மனைவேண்டி ஒன்று கூடி சாடி அல்லது பானை எடுத்தல் என்னும் நிகழ்வினை மேற்கொண்டு மழை பெறுவதைக் காண முடிகின்றது. அன்றுமுதல் இன்று வரை பந்தல்கள் அமைத்து வருடம் ஒரு முறை சடங்கு செய்து குளிர்த்திபாடி வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு கல்லால் அமைக்கப்பட்ட உறுதியான கட்டிட அமைப்பு எதுவும் இல்லை. அதற்கு மாறாக கோவில் அமைத்தால் அவ்விடத்தில் அது நிலைக்காது எனும் ஒரு கருத்தும் நிலவுகின்றது. காரணம், ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒரு பெரிய ஆலயம் சரிந்து வீழ்ந்து கிடப்பதைக் காணலாம். அம்மன் கனவில் தோன்றி எனக்கு கல்லால் ஆலயம் அமைக்கத் தேவையில்லை என்றும், எனக்கு ஆலயம் நிலத்துக்கு கீழே உள்ளது எனவும் கூறியதாகவும் கூறப்படுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து இவ்வாலயமானது இரண்டு நீரோடைகளின் மத்தியில் உள்ளதாலும் மழைக்காலங்களில் நீரோடைகள் பெருக்கெடுக்கும் போது இரண்டு ஓடைகளும் ஒன்று சேர்ந்து பெரும் ஆறாக மாற்றம் பெற்று நீர் வேகமாக பரவிச் செல்வதால் அவ்விடத்தில் கட்டிடம் அமைப்பது பௌதீக ரீதியாக பொருத்தமற்றதாகும். எனவே



விநாயகர் பானை பொங்கும் காட்சி

ஆண்டுதோறும் சடங்கு உற்சவத்திற்கு வருகின்ற மக்கள் சிறுசிறு கொத்துப் பந்தல்களை அமைத்தே வழிபட்டு செல்கின்றனர்.

இங்கு காணப்படும் சிறப்பு அம்சம் என்னவெனில் கொக்கட்டிய மரம் இருந்த இடமே பிரதான இடமாகவும், அதன் அடியில் ஒரு பொந்து உள்ளதாகவும், அதன் உள்ளே அம்மனின் ஆலயம் உள்ளதாகவும் கருதி அப்பொந்தினுள் காணிக்கையிட்டு வழிபடுகின்றனர். மக்களின் குறைகளை முறையிட்டு இப்பொந்தினுள் காணிக்கையிட்டால் அது நிறைவேறும் எனும் ஐதீகம் இன்றுவரை உள்ளது.

இப்பிரதேசத்தில் வித்தியாசமான ஒரு முறையில் கோராவெளி கண்ணகி அம்மன் வழிபாடானது திகழ்கிறது. அதாவது எட்டுத் திசைகளையும் நோக்கியவாறு எட்டுப் பந்தல்கள் காணப்படுகின்றன. இவை எட்டுக் கிராம மக்களுக்கு உரித்துடையதாகவும், அந்தந்த கிராம மக்கள் அவரவர் பந்தல்களில் நேர்த்திகளையும், காணிக்கைகளையும் செலுத்தி வழிபடுகின்றனர். எவ்வாறாயினும் அனைவரும் தாய்ப்பந்தலை வணங்கிய பிற்பாடே அவரவர்களுக்குரிய பந்தல்களில் வழிபடுவர். அனைவருக்கும் பொதுவானதாகவும், பிரதான இடமாகவும் தாய்ப் பந்தல் விளங்குவதே இதற்குக் காரணம் ஆகும். இவ்வாறு பல பந்தல்கள் தோற்றம் பெறக் காரணம் சந்ததிகள் பிரிந்தமையாகும். அதாவது ஒரு குடும்பமாக வாழ்ந்த மக்கள் திருமணம் என்பதன் காரணமாக அயல் கிராமங்களில் வாழ வேண்டிய தேவை ஏற்பட்டது. இதுவே

பிற்காலத்தில் பல்வேறு பந்தல்களாக பிளவுபடக் காரணமாகும். எவ்வாறாயினும் பிரதான பந்தல் தாய்ப்பந்தலாகும். தாய்ப்பந்தல் என்பது முதன் முதல் தோற்றம் பெற்ற பந்தல் ஆகும். அதுவே கொக்கட்டிய மரப்பொந்தின் மீது அமைந்துள்ளது.

எட்டுப்பந்தல்களும் ஒரே காலத்தில் தோற்றம் பெற்றவை அல்ல. வெவ்வேறு காலங்களிலே தோற்றம் பெற்றன. அவை முறையே பின்வருமாறு அமையும். தாய்ப்பந்தல் - சித்தாண்டிப் பந்தல் - முறக்கொட்டாஞ் சேனைப்பந்தல் - கிரான் பந்தல் - கிண்ணையடிப் பந்தல் - முறாவோடைப்பந்தல் - சந்திவெளி பந்தல் (ஊர்) - கோரகல்லி மடு பந்தல் (ஊர்) என்பனவாகும். சந்திவெளி, கோரகல்லிமடு எனும் இரு கிராமத்தைச் சேர்ந்த வழித் தோன்றல்களே தாய்ப்பந்தல் எனும் பந்தலுக்கு பொறுப்பாக இருந்து செயற்படுத்தி வருகின்றனர். ஏனெனில் இக் கோயிலை உருவாக்கியவருக்கு இரண்டு பிள்ளைகள் என்றும் அதில் ஒரு ஆண்பிள்ளை சந்திவெளியில் வாழ்ந்தார் என்றும், அவரது தங்கையான மற்றவர் கோரகல்லிமடுவில் திருமணம் செய்து வாழ்ந்தார். எனவும் கூறப்படுகின்றது. இதனாலே இன்றுவரை இவ்விரு குடும்ப வம்சாவழியினரும் தாய்ப் பந்தலை தலைமைதாங்கி குடும்ப வழி மரபாக நடாத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இவ் ஆலயத்திற்கு பல கிராமங்களிலும் இருந்து வரும் மக்கள் இங்கு வரும் அடிய்வர்களுக்கு உணவு சமைத்து வழங்கும் ஒரு மரபையும் காண முடிகின்றது. இது எமது இனத்தின் விருந்தோம்பல் பண்பையும், அடியவர்களுக்கு அன்ன தானம் வழங்க வேண்டும் என்ற உயரிய பண்பையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ் ஆலயத்தின் வழிபாட்டு முறை பற்றிப் பார்க்கும் போது, ஆகமம் சாராத ஒரு வழிபாட்டு முறையே பின்பற்றப் படுகிறது. அதாவது வைகாசிப் பூரணையை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் சடங்கு உற்சவம் நடைபெறுகின்றது. முதலாம் நாள் நிகழ்வாக ஒவ்வொரு ஊரில் இருந்தும் புறப்படும் பந்தல்காரர், நிருவாகிகள் அம்மனை ஊர்வலமாக எடுத்துச் சென்று கோராவெளியை வந்தடைவர். அன்றைய தினம் நோர்ப்பு சமைத்தல் எனும் நிகழ்வு பிரதான நிகழ்வாக இடம் பெறும். அதாவது தெய்வம் ஆடி நெல்

> ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தவறாது பொங்கல் செய்து அம்மனுக்கு காணிக்கையாக கொடுப்பர். இப் பொங்கல் நிகழ்வானது விநாயகர் பானை எடுத்தல் எனும் நிகழ்வைத் தொடர்ந்தே நடைபெறும், பச்சைக்களி மண்ணில் புதுப்பானை செய்து அதனைச்சுட்டு அதிலே பொங்கல் செய்வது மரபு.

குற்றும் வைபவம் இடம்பெறும், பின்னர் அந்த அரிசியை சோறு சமைப்பதுடன், ஏழு மரக்கறி வகைகளையும் ஒன்று சேர்த்து கறியும் சமைப்பர். அத்துடன் பால், தயிர், கூழ், கொழுக்கட்டை, மோதகம், பலகாரம் என பல படையல் பொருட்களைச் செய்து அம்மனுக்கு படைப்பர். பின்னர் தெய்வம் ஆடி படையலில் உள்ள பொருட்களை எடுத்து ஒரு கலவையாக புரட்டி ஓலைப் பெட்டியில் எடுத்து தலையில் வைத்து சுமந்து கொண்டு தெய்வக்காரர் கோயிலை வலம் வருவார். அப்போது அச் சோற்றுக் கலவையை அள்ளி வானத்தை நோக்கி எறிந்து வருவர். இதன் நோக்கம் என்னவெனில் காவல் தெய்வங்களை எழுந்தருளப் பண்ணி எட்டுத்திசைகளிலும் காவல் தெய்வங்களை நிலை நிறுத்துவதுடன் அவற்றிற்கு படையல் அளித்தல், கெட்ட ஆவிகளை விரட்டல் என்ற அம்சங்களை நோக்காகக் கொண்டதாகும். இதனை

தாய்ப்பந்தல் மேற் கொண்ட பிற்பாடு ஏனைய பந்தல்களும் இதனைப் பின் பற்றுவர். அதன்பின்னர் சமைத்த உணவு கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இந் நிகழ்வுகள் யாவும் முதலாம் நாள் மாலை இடம்பெறும்.

தொடர்ந்து இரண்டாம் நாள் நிகழ் வாக அம்மனின் சடங்கு உற்சவம் நடை பெறும். அன்றே மக்கள் அனைவரும் ஒன்று கூடி அம்மனுக்கு பொங்கல் செய்வர். ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தவறாது பொங்கல் செய்து அம்மனுக்கு காணிக் கையாக கொடுப்பர். இப் பொங்கல் நிகழ் வானது விநாயகர் பானை எடுத்தல் எனும் நிகழ்வைத் தொடர்ந்தே நடைபெறும், பச்சைக்களி மண்ணில் புதுப்பானை செய்து அதனைச்சுட்டு அதிலே பொங்கல் செய் வது மரபு. முதலில் தாய்ப்பந்தலில் தெய் வம் ஆடி விநாயகர் பானை எடுக்கும் நிகழ்வு நடைபெற அதனைத் தொடர்ந்து ஏனைய பந்தல்களில் விநாயகர் பானை எடுக்கும் வைபவம் நடைபெறும். அதன் பிற்பாடே பொதுமக்கள் தங்களது நேர்த்தி களை நிறைவேற்றும் பொருட்டு பொங்கல் செய்வர்.

மாலையில் அம்மனுக்கு படையல் எனும் பள்ளையம் இடப்பட்டு திருக் குளிர்த்தி நடைபெறும். இத்திருக்குளிர்த் தியானது மாலை வேளையில் கண்ணகி அம்மனின் அம்மானைப் பாடல்களைப்பாடி திருக்குளிர்த்தி நடைபெறும். இதன் போது வீசப்படும் நீர்த்துளிகள் ஒவ்வொரு நபர்கள் மீதும் பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். காரணம் அந்த நீர்த் துளி கள் பட்டால் தங்களுக்கு அம்மை நோய், கொப்பளிப்பான், கண்நோய், போன்றவை கள் ஏற்படாது என்பது ஐதீகம். எமது பிரதேசத்தில் சித்திரை, வைகாசி மாதங்க ளில் அதியுயர் வெப்பநிலை காணப் படுவதால் அம்மனை குளிரப் பண்ணுவதற் காகவே இந்நிகழ்வை மேற்கொள்கின்ற னர். அவ்வாறு செய்யாவிட்டால் அம்மனின் குறையால் மக்களுக்கு நோய்கள் ஏற்படும்



அம்மனை எழுந்தருளச் செய்து அடுக்க சாத்தும் காட்சி

என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது.

இங்கு வழிபாட்டின் போது பொங்க லுடன் பழம், இளநீர் சேர்த்து செய்யப்பட்ட ஒரு பானமும் முக்கியம் பெறுகின்றது. இதுவே அம்மனுக்கு உகந்த படையல்க ளாக இங்கு முக்கியம் பெறுகின்றது. இந்த இரண்டாம் நாள் நிகழ்வுகளிலே மக்கள் தெய்வங்களிடம் குறிகேட்கும் நிகழ்வு நடைபெறுகின்றது. தெய்வம் வாக்கு அல்லது கட்டு கூறுதல் என்பதே இவ் ஆலய வழிபாட்டின் உச்ச நிகழ்வு என லாம். மக்கள் தங்கள் குறைகள், துயரங் கள், கோரிக்கைகளை அம்மனிடம் முன் வைப்பதாகவும் அதனை தெய்வங்கள் வாக்குகூறல் மூலம் தீர்த்து வைக்கப்படு வதாகவும், அதன் நன்மை தீமைகளை மக்கள் உணர்ந்து செயற்படுவதாகவும் இதனால் தங்கள் வாழ்வில் நடந்தவை, நடக்கப் போவதை உணர்ந்து மக்கள் செயற்பட்டு தங்கள் வாழ்க்கையை சரிப் படுத்திக் கொள்வதாக நம்பப்படுகின்றது.

அதிகமாக இவ்வழிபாட்டின் நோக்கம் அம்மை, கண்நோய், கொப்பளிப்பான், போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதுடன் குறைவாக பேசும் குழந்தை களை நன்றாக பேசும் பொருட்டு, திரு மணங்கள் நடைபெறும் பொருட்டு, குழந் தைப்பேறு வேண்டி, தீராத நோய்கள் தீரும் பொருட்டு என பல்வேறு தேவைகளை நோக்காக கொண்டு அம்மனை வழிபடு கின்றனர்.

இத் தேவைகள் நிறைவேறும் போது, அம்மனுக்கு காணிக்கைகளை வழங்குகின்றனர். காணிக்கைகளாக பொங்கல், இளநீர், பழங்கள், பூக்கள் என்ப வற்றுடன் ஆடு, மாடு, கோழிகளை வழங் குதல், வெள்ளி அல்லது பொன்னால் செய்யப்பட்ட மனித அங்கங்களை வழங்கு தல், சேலை, சட்டை போன்ற உடைகள், தங்க நகைகள், வெள்ளி வெண்கல பாத்தி ரங்கள், விளக்குகள் என்பவற்றுடன் காவடி, கற்பூரச்சட்டி, மொட்டைபோடுதல், பிரதட் சனை செய்தல் முதலான நேர்த்திகளைக் காணிக்கையாக வழங்குகின்றனர். இவ் அம்மன் வழிபாட்டின்போது பக்தர்கள் மெய்யுருகி நெஞ்சுருகும் நிலைக்கு உள் ளாவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாலய வழிபாட்டில் ஒட்ட மாவடியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் குடும் பத்தவர்களுக்கு இன்று வரைக்கும் தொடர்பு உள்ளதையும் கோராவெளி கண்ணகி அம்மன் கோயிலில் காணலாம். அதாவது ஆரம்ப காலத்தில் எமது விவசாயப் போடி யார் ஒருவருடன் முஸ்லிம் நபரும் சேர்ந்து விவசாய நடவடிக்கைளில் ஈடுபட்டதாகவும், அக்காலத்திலிருந்து அவரும் இவ்வாலய வழிபாட்டில் இணைந்து செயற்பட்டதாகவும், அது பிற்பாடு அவரது பரம்பரையினர் ஊடாக தொடர்ந்ததாகவும் கூறப்படுகின் றது. இதற்கு சான்றாக இன்று வரைக்கும் தாய்ப் பந்தலில் ஓட்டமாவடி முஸ்லிம் நபரின் வழித்தோன்றல்களுக்காக ஒரு மடை வழங்கப்படுவதை அவதானிக்கலாம்.

> அம்மாள் வழிபாட்டின் போது பொங்கலுடன் பழம், இளநீர் சேர்த்து செய்யப்பட்ட ஒரு பானமும் முக்கியம் பெறுகின்றது. இதுவே அம்மனுக்கு உகந்த புடையல்களாக இங்கு முக்கியம் பெறுகின்றது.

இவ்வாலயத்தின் நிருவாக செயற் பாடு பற்றி சற்று நோக்குவோமாயின், இவ் வாலயம் ஆனது கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலகத்திற்கு பொறுப்பான ஒரு அரசகோயில் ஆகும். எட்டுப் பந்தல்களுக் கும் தனித்தனி நிருவாக அமைப்பு காணப் படுகின்றது. இவற்றை மையப்படுத்தி ஒரு பொதுக்குழு காணப்படுகின்றது. இதற்கு தலைவர் கோறளைப் பற்று தெற்குப் பிரதேச செயலாளர் ஆவார். செயலாளர், பொருளாளர் என்போர் எட்டுப் பந்தல்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப் படுவர். தாய்ப் பந்தலையுடைய குடும்ப உறுப்பினர்களே செயலாளர் அல்லது பொருளாளர் ஆக அன்று முதல் இன்று வரை இருந்து வரும் மரபும் உண்டு. தாய்ப்பந்தல் உறுப்பினர்கள் இன்று வரைக் கும் குடும்ப ரீதியாகவே பொதுக்குழுவுக்கு வருகின்றனர். மாறாக பொதுவாக மக்க ளால் தெரிவு செய்யப்பட்டு வருவதில்லை. ஆனால் ஏனைய பந்தல் உறுப்பினர்கள் மக்கள் தெரிவு மூலமே தெரிவு செய்யப் படுகின்றனர். தாய்ப்பந்தல் இன்றுவரை குடும்பரீதியாக செயற்பட்டு வருவதையே இச் செயற்பாடு காட்டுகின்றது.

பந்தல்களுக்கு வரும் வருமானம் பந்தல் நிருவாகிகளிடம் சென்றடைய பொதுவருமானங்கள் அனைத்தும் பிரதேச செயலாளர் ஊடாக அரசுக்கு சொந்தமா கின்றது. உற்சவ காலங்களில் இப்பிர தேசத்தின் சகல அரச அரசசார்பற்ற அமைப்புக்களும் இங்கு வந்து தமது

சேவையை வழங்குகின்றனர். உதார ணமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச சபையினர், குடிநீர்வழங்கல் பிரிவி னர், துப்பரவு செய்யும் பிரிவினர், முதலு தவிப் பிரிவினர், கிராமசேவகர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், பொருட்கள் பாது காப்புப் பிரிவினர் என்பவற்றுடன் சாரணிய சங்கங்கள், பொது அமைப்புக்கள் என்பன வும் தமது சேவையை இங்கு வரும் அடிய வர்களின் நலன் கருதி வழங்குகின்றனர்.

இவ்வாறாக பல சிறப்புக்களை வெளிப்படுத்தும் கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயமானது அமைப்பிலே சிறிதாகவும், புகழிலோ உயர்ந்ததாகவும் தனது மகிமையை பறை சாற்றியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படு கின்ற கண்ணகி அம்மன் வழிபாட்டிலே கோராவெளி கண்ணகி அம்மன் ஆலயம் எனும் பெயர் பெரும் செல்வாக்குள்ளதாக விளங்குகின்றமை எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்க்கின்றதாக அமைகிறது. எனவே எமது சமூகத்தினர் அனைவரி னதும் ஒத்துழைப்பால் இன்றுவரை பேணப்பட்டு வருவது மட்டுமன்றி, இவ்வழி பாட்டினை மேலும் சிறப்பான முறையில் நடாத்த இளம் சந்ததியினரும் பங்கேற்க வேண்டும் என்பது எனது அவாவாகும். எமது இளம் சமூகத்தினருக்கு இதன் மகிமைகளை அறியப்படுத்துவதுடன் சிறப் பான பல கட்டமைப்புக்களையும் உரு வாக்கி ஆலயத்தையும், அதன் சேவைக ளையும் விஸ்தரிப்பதுடன், மக்கள் வழிபாட் டில் ஈடுபடுவதற்கு ஏற்ப பல வசதி வாய்ப் புக்களை ஏற்படுத்தல் வேண்டும். அத்து டன் சமூகத்திற்கும், இப்பிரதேசத்திற்கும் இக்கோராவெளி கண்ணகி அம்மன் ஆலய மானது பல சேவைகளை ஆற்ற வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

## கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக சாகித்திய விழா – 2007 போட்டி முடிவுகள்

### கிராமிய பாடல்

1ம் இடம் – பா.சுதாகரன் – கிரான் மகாவித்தியாலயம்

2ம் இடம் – ச. சுதாகரன் – கிரான் மகாவித்தியாலயம்

3ம் இடம் – ப. தனேஸ் குமார் – கிரான் மகாவித்தியாலயம்

### வில்லுப் பாட்டு


1ம் இடம் – மட்/சந்திவெளி வினாயகர் வித்தியாலயம்.

2ம் இடம் – முல்லை சிறுவர் இல்லம், பேரில்லாவெளி.

### நாடகம்

1ம் இடம் – மட்/சந்திவெளி வினாயகர் வித்தியாலயம்.

2ம் இடம் – மட்/கிரான் மகா வித்தியாலயம்.



# அழிந்து வரும் பாரம்பரியக் கலையாக நாட்டார் பாடல்கள்

செல்வி. ரிஜுஜா ஜெகதீஸ்வரன்

பாரம்பரியக் கலைகளைத் தம் உதிர மாகக் கொண்டு விளங்கிய இத் தேச மானது 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்ததும் அவ் உதிரத்தையே துளித் துளியாக சிந்தவிடத் தொடங்கியது. தொழி நுட்பங்களும், அபிவிருத்தியும் துளிர் விட ஆரம்பித்ததும் பாரம்பரியக்கலைகள் அடியழுகத் தொடங்கி விட்டது. பாரம்பரி யம் என்பது பரம்பரை பரம்பரையாக அனைவராலும் பேணியும் பாதுகாக்கப் படுவதுமே ஆகும். பாரம்பரியக் கலைகள் என்று நோக்குமிடத்து சமயம் சார்ந்ததாக மட்டுமல்லாது சமூகம் சார்ந்ததகாவும், சமூகத்துடன் இணைந்ததாகவும் காணப் படும் கூத்து, மகுடி, கும்மி, கோலாட்டம், நாட்டார் பாடல் என பல்கலைகள் எம்முள் புதைந்து கிடக்கிறது.

இயற்கையுணர்வும், கலையுணர் வும் கொண்ட கிராமிய மக்களால் பற்பல சந்தர்ப்பங்களில் கவிநயத்துடன் பாடப்படு வதே 'நாட்டார் பாடல்' எனப்படும். இது ஆணி கொண்டு ஏட்டில் பொறிக்கப்பட்டது அல்ல, செவி வழியாக தோற்றம் பெற்றதே இக்கலை. இவை பல்வேறு வகைப்படுகின் றன. அவையாவன தலாட்டுப் பாடல், உழவர் பாடல், தேயிலைத் தோட்ட பாடல், மீனவர் பாடல், கேளிக்கை பாடல் இன்னும் பல.. இவை பற்றி நாம் விரிவாக நோக்கு வோம். இவை அனைத்தும் பாமர மக்க ளால் பாடப்பட்டது. ஆனால் இது தற்போது வழக்கில் இல்லை என்பது வருத்தத் திற்குரிய விடயம் என்பது குறிப்பிடத் தக்கது.

நாட்டார் பாடல் வகையைச் சேர்ந்த தாலாட்டுப் பாடலை நோக்குமிடத்து, தாய் தனது சேயை தூங்க வைக்கவும், உணவு கொடுக்கவும் பல்வேறு வகையான பாடல் களைப் பாடுவார்.

"நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறிவா
மல்லிகைப்பூ கொண்டு வா"

அப்பாடலானது எதுவித சொல் அலங்காரமும் அற்றது. குழந்தைகள் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடியதா கவும் அது அமையப் பெற்றுள்ளது.

"ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
அண்ணன் அடித்தானோ....."

இப்பாடல் கூட கவிநயத்துடன் பாடப்பட்டதே ஆகும். நாட்டார் பாடல் என்று பெயர் பெற்றாலும் எதுகை, மோனை, சொல் சீர்திருத்தம் என்பவற்றைத் தம்ம கத்தே கொண்டு சிறப்புற்று விளங்கு கின்றது.

அடுத்ததாக நாம் விளையாட்டுப் பாடலை நோக்கும் இடத்து, இது கிராமத் திலே முற்றுமுழுதாக காணப்பட்டது. அதாவது, ஒரு குறிப்பிட்ட வயதைச் சேர்ந்த சிறார்கள் விதியிலே அல்லது வீட்டி னுள்ளே விளையாடுவர். இவற்றுள் கிட்டிப் புள், உள்ளே, வெளியே என்பன குறிப்பிடத் தக்கது. கிட்டிப்புள் என்பது ஒரு தடியைக் கொண்டு விளையாடுவதாகும். இவ்விளை யாட்டில் தோல்வியுற்ற சிறார்களினால் பாடப்படுவதாகும்.

"ஆலையிலே சோலையிலே
ஆலம் பாடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கி அடிக்கப் பாலாறு...."

எனத் தமது மூச்சை அடக்கிக் கொண்டு பாடுவர்.

அடுத்ததாக கேளிக்கைப் பாடலை நோக்குவோமாயின்,

"எருக்கலம்பிட்டிக்கு
எருக் கொண்டு போற தம்பி
மச்சானக் கண்டா
மயில் வரட்டாம் எண்டு சொல்லு"

இப்பாடல் கிராமிய ரீதியாக முன்னைய காலத்தில் பெருஞ் செல்வாக்கைப் பெற்று விளங்கியது.

மற்றும்,

"எட்டு நாளாச் செத்துக்கிடந்த
எட்டடிப் பாம்பை



எட்டி நின்று பார்த்தான்
என் மச்சான்"

இவ்வாறான பாடல்கள் மிகவும் சிறந்த முறையில் முன்னர் பாடப்பட்டது. ஆனால் தற்போது வழக்கில் இல்லை. அடுத்ததாக நாம் உழவர்பாடல், மீனவர் பாடல் என்பவற்றை நோக்குவோம். அதாவது வேலை செய்யும் தொழிலாளர்கள் தமக்கு பசி, களைப்பு என்பன தெரியாமல் இருப்பதற்காக ஒற்றுமையாகப் பல பாடல்களைப் பாடுவர். உழவர்கள் தாம் பட்ட கஷ்டங்களின் விளைவாக பயிர் செழித்து நிற்பதைக் கண்டு கீழ்வரும் பாடல்களைப் பாடுவர்.

"காடு வெட்டி களனி செய்து
கஷ்டப்பட்டு விதவிதச்சு
கதிர் மணியாய் சிரிக்குதிங்கே பாருங்கடி
களத்து மேட்டில் அறுத்து போடுங்கடி"

இவை ஒரே எழுத்து சீரில் அமைந்ததாகக் காணப்படுகின்றது. படிப்பறிவில்லாத பாமர மக்களாகக் காணப்பட்ட போதும் இலக்கணச் சொல் அமைதி குடிகொண்டல்லவா காணப்படுகிறது. அடுத்ததாக நாம் மீனவர் பாடலை நோக்குமிடத்து

"ஏலேலோ ஐலசா
ஏலேலோ ஐலசா..."

எனப்பாடுவர் இது சந்தம், தொனி, பாடல் அமைப்பு என்பன சிறந்த முறையில் அமைந்து காணப்படும். மீனவர்களாக இருந்தாலும் இவ்வாறான பாடல்களைப் பாடுகின்றனர். ஆனால் இது தற்போது வழக்கில் இல்லை. இதற்குரிய காரணம் பற்றி பின்பு நோக்குவோம். மீனவர்கள் கடலுக்குச் செல்லும் போது மிகவும் துன்புற்ற மன நிலையுடன் பின்வரும் பாடலைப் பாடுவர்.

"கோழி கூவி நேரமாச்சு
எழுந்திடு மாமா..........."

எனத் தொடங்கும்.

இவ்வாறாக நாட்டார் பாடலானது அகவல், வெண்பா, விருத்தம், தரு போன்ற பாவடிவங்கள் கொண்டு பாடப்பட்டது. இவை அனைத்தும் நாட்டார் பாடலுக்குரிய சிறப்பம்சங்களே ஆகும். அடுத்து நாம் இவை அழிவுறுவதற்கான காரணங்களை நோக்குவோம்.

இயற்கையுணர்வு மிக்க இக்கலை அழிவுறுதலுக்கு முழுக்காரணம் திரையிசைப்பாடலே ஆகும் என்பது உள்ளங்கையில் நெல்லிக் கனிபோல தெளிவாக வுள்ளது. முன்னர் தாலாட்டுப் பாட்டும்,

உழவர் பாட்டும் மற்றும் ஏனைய நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள் தற்போது திரை இசைப்பாடல்களை விரும்புகின்றனர். தற்போது நடைமுறையைக் கருதுவோம் ஆயின் பிள்ளைகள் எல்லாம் "ஆராரோ....." பாடி தூங்குகின்றனர் என்பது சிறிதள வேனும் இல்லை. இதற்குப் பதிலாக "ஆசைப்பட்ட எல்லாத்தையும்....." எனும் பாடலையே பாடுகின்றனர். இதற்கு கார ணம் எமது கலை, கலாச்சாரம் மழுங் கடிக்கப்படுவதே ஆகும்.

> "என்னைப் பொறுத்த வரையில் நானும் நாட்டார் பாடலை மறந்து விட்டேன். நான் வாழ்வது கூட கிராமத்தில் தான்" இவ்வாறு அனைவரும் கூறினால் பாரம்பரியம் எவ்வாறு தலை தூக்குவது.

உதாரணமாக,

"கத்தி கொடுத்து கம்பு வாங்கினேன்
டிங் டிங் டிங்
கம்பு கொடுத்து அப்பம் வாங்கினேன்
டிங் டிங் டிங்"

என்பது ஒரு நாட்டார் பாடல் என்பது அனைவரும் அறிந்ததே. இப்பாடலின் அதே இசையைக் கொண்டு.

"கண்ணும் கண்ணும் பாத்துகிட்டால்
டிங் டிங் டிங்..."

எனும் பாடல் உருவாக்கப்பட்டது. திரையிசைப் பாடல்களின் வளர்ச்சிக்கு நாட் டார் பாடல் பேருதவியாக காணப்பட்ட போதும் நாட்டார் பாடல் இப்போது பின் தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. இவ்வாறாக மேற்கூறப்பட்டவற்றில் இருந்து அழிந்து வரும் பாரம்பரியக்கலைகளில் நாட்டார் பாடலும் ஒன்றாகும் என்பது அனைவரும் அறிந்ததே. தற்போதைய கிராம மக்களுக்கும் இது புரியாத புதிர் என்றால் பாருங்களேன்.

அடுத்ததாக நாம் எமது சமய பாரம்பரியங்கள் அழிவுறுவதை நோக்கு கையில், தமிழர் பண்பாடு, கலாசாரம் பழக்க வழக்கங்களும் ஒரு கலையே ஆகும். உதாரணமாக ஒரு திருமண வீட்டினை எடுத்துக் கொண்டால் கேக் வெட்டுவது, மோதிரம் மாற்றுவது, கோட், சூட் அணிவது அனைத்தும் மேலைத் தேயரின் பழக்க வழக்கமே. இது 1815ல் போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த அடுத்த கணமே பெருவழக்கமாகிவிட்டது. தமிழர் திருமணத்தின்போது அவ் ஆண் மகன் எம் நாட்டு பாரம்பரியம் அழியாது காக்காது கோட், சூட் அணிவது வழக்கம். இது என்ன பழக்கம் இதிலிருந்தே புரி கின்றது அல்லவா? பாரம்பரியம் அழிகின் றது என்று.

அடுத்து நாம் எம்நாடு மட்டு மல்லாது உரோம் நாட்டை நோக்கு மிடத்து, இங்கு காணப்படும் கிரேக்க அரங்கானது அந்நாட்டு பாரம்பரியமாகவும், அங்கு விளையாடும் விளையாட்டு ஒரு கலையாகவும் காணப்பட்டது. இங்கு வீரர்கள் சிங்கத்துடன் போர் புரிவதையும் அதனை



அரசர்கள் பார்வையிடுவதும் ஒரு கலை யாக பேணப்பட்டது. இது வீரத்தின் சவாலாக காணப்பட்டது. அந்நாட்டைப் பொறுத்த வரையில் இதுவும்

கலையாகவே காணப்பட்டது. ஆனால் தற்போது இது உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு இடமாக விளங்குகின்றது.

தேவலோகத்தில் இருந்து பரத முனிவரால் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு கலையே பரதநாட்டியம். இது பெண்களி னால் ஆடப்பட்டால் "லாஸ்யம்" எனவும், ஆண்களினால் ஆடப்பட்டால் "தாண்டவம்" எனும் பெயரையும் கொண்டு விளங்கியது. ஆனால் இப்போது இத்தாண்டவம் என்னும் இப்பாரம்பரியக் கலை வழக்கில் இல்லை. இதனைப் பயின்றால் ஆண்கள் ஆண் மைக்குரிய உடலமைப்பை இழந்து விடுவார்கள் என்ற ரீதியில் இக்கலையை மழுங்கடிக்கச் செய்து விட்டனர். இதற்கு பதிலாக "டிஸ்கோ" நடனம் புரிகின்றனர்.

இவ்வாறாக எமது பாரம்பரியம் சீரழிகின்றது. இதற்கு நாமே இடம் கொடுக்கின்றோம். "என்னைப் பொறுத்த வரையில் நானும் நாட்டார் பாடலை மறந்து விட்டேன். நான் வாழ்வது கூட கிராமத்தில் தான்". இவ்வாறு அனைவரும் கூறினால் பாரம் பரியம் எவ்வாறு தலை தூக்குவது. இது ஓர் கேள்விக் குறியே

அடுத்தாக நாம் மேடை நாடகம், கூத்து, கும்மி, கோலாட்டம், மகுடி என்பவற்றை தொகுத்து நோக்குகையில், முன்னர் திருவிழாக்காலங்கள், மற்றும் பண்டிகைக் காலங்களில் ஊர் தோறும் நடப்பது வழக்கம். அதற்குரிய உடை அலங்காரம், தாள லயம் என்பவற்றை சிறப் பான முறையில் கையாள்வர். ஆனால் இப் பாரம்பரியம் தற்போது வழக்கில் இல்லை. இதற்குப் பதிலாக கோயில் களில் சினிமாப்பாடல் இசைக் கச்சேரி நடைபெறுகின்றது. இதுவே பழக்க மாகவும் காணப்படுகின்றது. அது மட்டும் அல்லாது அம்மானை, பள்ளு போன்ற இலக்கியமும் அழிவுறுகின்றது.

கலைகளினுள் சிறப்புற்றும் முதன்மையாகவும் விளங்குவது இலக் கியம். ஆனால் இப்போது இது எத்தனை யாம் இடத்தில் உள்ளதோ. பழமொழிகள், பொன் மொழிகள் என்பன மருவிவிட்டன.


இதற்கு எல்லாம் சிறந்த ஒரு வழி பேராசிரியர் சு.வித்தியானந்தன் நாட்டார் பாடல்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்று 1960ல் மட்டக்களப்பு நாட்டார் பாடல்களையும், 1964ல் மன்னார் நாட்டார் பாடல்களையும் தேடிப் பெற்று நூல் வடிவம் கொடுத்தார். அவ்வாறே நாமும் செய்யவேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றில் இருந்து அழிந்து போகும் எமது பாரம்பரியக் கலைகளையும், அதற்குரிய காரணங் களையும் அறிந்தோம். அவற்றை செயற் படுத்துவது எம் கைகளிலே உள்ளது. "கண்டது கற்க பண்டிதன் ஆவன்", "கற்றது கைமண்ணளவு, கல்லாதது உலகளவு" என்பவற்றிற்கு இணங்க ஒரு நாட்டின் பெருமையும், சிறப்பும் அதன் பாரம்பரியங்களிலே உள்ளது என்பது ஆணித்தரம். ஒரு நாட்டின் சிறப்புக்கு அதன் ஆதியே காரணம். இலங்கை முன் னர் எவ்வாறான கலைகளைக் கொண்டு காணப்பட்டது. என்பது அனைவரும் அறிந் ததே எனவே எமது பாரம்பரியங்களைக் கட்டிக் காப்போம். நாட்டை சிறப்புறச் செய் வோம். இலங்கையின் அந்நியச் செலா வணி குறைய பாரம்பரியமாக விளங்கும் கலை அழிவுறுவதே காரணம்.

**பிரதேச சாகித்திய விழா - 2007**
**கட்டுரைப்போட்டி - சிரேஸ்ட பிரிவு**
**முதலிடம்.**

# கோறளைப்பற்று தெற்கில் விஷக்கடி வைத்தியமும் எமது முன்னோரும்

வைத்தியர். பூபாலப்பிள்ளை



மீன் பாடும் தேன் நாடாம் மட்டு மா நகரின் வடக்கே ஐவகை நிலங்களுடன் சிறப்புற அனைத்து வளங்களும் அமைந்துள்ள நிலச்சூழல் உள்ள பிர தேசத்தில் அமைந்துள்ள கோரளைப் பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவு கிராமங்களில் உள்ள மக்கள் அன்று தொட்டு இன்று வரை விஷ வைத்திய முறையில் பெயர் பெற்று விளங்கி வந்த னர். நவீன மருத்துவம் வளர்ச்சி பெற்றுக் கொண்டு இருக்கின்ற இக்காலத்தில் கிராமத்து மக்கள் விஷ வைத்திய பரிகாரத்துக்கு கிராமத்து வைத்தி யர்களை கொண்டே மருத்துவம் செய்து வருகின்ற நிலமை காணப்படுகின்றது.

இவ் விஷ வைத்திய முறையானது சித்த வைத்தியத்தில் இருந்து வந்ததாக கொள்ளப்படுகின்றது. சித்த வைத்தியம் அகத்தியர் முதலான 18 சித்தர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. சித்தவைத்திய முறைகளுள் சர்வாங்கம் என்பது (பொது) சகல நோய்களுக்கும் மருந்து செய்யப்படும் முறையாகும். பரிசு (மகப்பேறு), விஷக் கடி, சித்தப்பிரமை, முறிவு, சல்லியம் (அறுவை சிகிச்சை) என பல பிரிவுகளாக சித்த வைத்திய முறை காணப்படுகின்றது.

கோறளைப்பற்று தெற்கு பிர தேசத்தில் பரம்பரை பரம்பரையாக விஷ வைத்திய முறை பேணப்பட்டுள்ளமையையும், பேணப்பட்டு வருகின்றமையையும் அறிய முடிகின்றது.

தன் நம்பிக்கையையும் மூலிகைகளையும் அடித்தளமாகக் கொண்டு வளர்ச்சி பெற்று மருத்துவ முறைகளுடன் போட்டி போடக்கூடிய அளவு விஷக்கடி வைத்தியம் செயற்படுவதாக உள்ளது.

குறிப்பாக எமது கோரளைப்பற்று தெற்கு – கிரான் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் பலர் விஷக்கடி வைத்தியத்தில் பெயர் பெற்று விளங்கி இருக்கின்றனர். அவர்களில் சி.சந்திரசேகரம் என்ற விஷ வைத்தியர் பூலாக்காடு என்ற கிராமத்தில் வைத்திய சாலை அமைத்து வைத்தியம் செய்து வந்திருக்கின்றார். இவரை நாடி பல இடங்களில் இருந்தும் நோயாளிகள்

> கோறளைப்பற்று தெற்கு பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாக விஷ வைத்திய முறை பேணப்பட்டுள்மையையும், பேணப்பட்டு வருகின்றமையையும் அறிய முடிகின்றது.

வந்து சிகிச்சை பெற்று சென்று இருக்கின் றனர். இந்த பிரதேசமானது மூலிகைகளை இலகுவில் பெறக்கூடிய இடமாக இருக்கின்ற மையால் பூலாக்காடு கிராமத்தில் வைத்தி யசாலை அமைத்து செயற்பட்டு இருக்கலாம்.

கிரானில் முத்துப்பதியாரியார் என்பவர் சிறந்த வைத்தியராக சேவை செய்து இருக் கின்றார். இவரும் சகல வைத்தியத்திலும் பெயர் பெற்றவராக விளங்கி இருக்கின்றார். இவரு டைய சகோதரன் பு. சோ. சுப்பிரமணிய சாமி யார் யாழ்ப்பாண ஆயுர்வேத கல்லூரியில் சித்த மருத்துவம் கற்று கிரான் பிரதேசத்தில் வைத்தியம் செய்துள்ளதாக அறிய முடிகின் றது.

விஷ வைத்தியத்தை தற்போதும் எமது பிரதேசத்தில் பின்வருவோர் செய்து வருகின் றனர். அவர்களில் கந்தன் இளையதம்பி, ஐயாத்துரை நல்லராசா, கலுவல்தம்பி காத்தமுத்து, செ. கதிர்காமத்தம்பி சு. நாகராசா, கந்தையா செல்வன், ஆறுமுகம் சிவலிங்கம், சுப்பிரமணியம், பாலசிங்கம், பு. தர்மலிங்கம், க.கந்தசாமி, வை. தம்பிராசா, வே. செல்வராசா போன்றவர்கள் தமது கிராமங்களில் வைத்தி யம் செய்து வருகின்றனர்.

எமது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பாம்பு தீண்டினால் வைத்திய சாலைக்கு செல்வதை விட கிராமத்தில் உள்ள விஷ வைத்தியர்கள் மீது நம் பிக்கை கொண்டு அவர்களிடம் வைத்தியம் செய்து வருகின்ற நிலமை இன்றும் காணப்படுகின்றது. பாம்பு என்றால் படையே நடுங்கும். பாம்பு தீண்டினால் உடன் பரிகாரம் செய்யாவிட்டால் மரணம் நிச்சயம். மனிதனுக்கு மாத்திரம் அன்றி ஆடுமாடுகள் கூட இறக்கும் நிலை உண்டு. விஷத்துக்கு மருத்துவம் செய்யக்கூடிய அனுபவம் பெற்ற கிராம மருத்துவர்கள் கிராமங்களில் உள்ளதை இறைவனின் கொடையாக கொள்ளல் வேண்டும்.

எங்களுடைய வைத்திய முறைப் படி பாம்பு தீண்டியவரை கொண்டு வந்தால் உடனடியாக தூதன் குறி பார்த்து எத்தனையாம் இடத்தில் விஷம் ஏறி இருக்கிறது. பாம்பா வேறு ஏதேனும் விஷம் பட்டு இருக்கின்றதா என தெரிந்து கொண்டு அதற்கு ஏற்ற முறைகளை வைத்தியர்கள் கையாள்கின்றனர். சில வைத்தியர்கள் விஷம் தீண்டியவர் வருவதை பார்த்து மதிக்கும் அளவுக்கு அனுபவம் பெற்று இருக்கின்றனர். பொதுவாக தூதன் குறி மூலம் விஷ வைத்திய முறை செய்யப்பட்டு வருகின் றது. விஷ வைத் திய முறைகளில் மறி, மந்திரம் மருந்து சிகிச்சை முறைகள் இருப்பினும் மருந்து மந்திரம் மூலம் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது.



எமது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பாம்பு தீண்டினால் வைத்தியசாலைக்கு செல்வதை விட கிராமத்தில் உள்ள விஷ வைத்தியர்கள் மீது நம் பிக்கை கொண்டு அவர்களிடம் வைத்தியம் செய்துவருகின்ற நிலமை இன்றும் காணப்படுகின்றது.

குறிப்பாக பாம்பு, ஒருவரை தீண் டினால் நெஞ்சை அடைக்கும் அறிவு மாறும், காதடைக்கும், கண் பஞ்சடையும், வாய் பிதற்றும் சளி உண்டாகும், சரீரம் வெதும்பும், பல்லிறுகும், வாய் வழியே நுரைதள்ளும், ரோமம் சிலிர்க்கும், கடித்த இடம் வீங்கும். இவ்வாறு பல மாற்றங்கள் உடலில் நிகழும். இந்த அறிகுறிகள் தென்படும். சமயத்தில் உடன் பரிகாரம் செய்யாவிடின் மரணம் நிச்சயம்.

மந்திரம் மூலம் சிகிச்சை செய்கை யில் குட்டுதல், குழை அடித்தல், விஷக் கல் வைத்து கொடுத்தல், வீக்கத்திற்கு மருந்து பூசுதல், ஆவிபிடித்தல் போன்றன வழக்கத்தில்

உள்ளன. விஷம் தலைக்கேற முதல் மேற்படி பரிகாரங்களை செய்தல் வேண்டும் இல்லை யேல் விஷம் தலைக் கேறி உயிரை பறிக்கும்.

உள்ளங்கால், உள்ளங்கை, நெற்றி, மார்பு, உதடு, முளை, முக்கு, புருவம், தொப்புள், சந்து, குதிகால், நரம்பு இவை களில் கடித்தால் மீழ்வது அரிது, கரு நாகம் கடித்தால் உடனே இரு காதும் செவிடாகும். வழலைப் பாம்பு கடிக் கின்ற, நக்குகின்ற தன்மையுள்ளது. இதற்கு ஏற்ற வைத்தியம் செய்ய வேண்டும். எமது வைத்திய முறையின் படி எல்லா சாப்பாடும் சாப்பிட முடியாது பத்தியமான சோறு, கறி சாப்பிடுதல் வேண்டும். நித்திரை என்பது 24 மணி நேரம் செய்தல் ஆகாது. நித்திரை செய் கின்றபோது விஷம் ஏறும் வேகம் அதிக ரித்து ஆபத்தை ஏற்படுத்தும் தன்மை உண் டாகின்றது.

நோயாளியை ஆபத்தில் இருந்து காக்கும் பொறுப்புக்கு கிராம வைத்தியன் ஆளாகின் றான்.

இலங்கையில் நிகழ்கின்ற பாம்பு கடி மரணத்தில் மட்டக்களப்பு மாவட் டத்தில் நிகழ்கின்ற இறப்பு விகிதம் ஏனைய மாவட்டங் களுடன் ஒப்பிடும்போது மிக குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. இவ் வாறு உயிர்களை காப்பதற்கு கிராம வைத்தி யர்கள் தன்னுயிரைப் போல மற்றுயிரைக் காக்க தொண்டு செய்துவருகின்றனர். என்ன நவீன மருத்துவ வளர்ச்சி கால மாற்றத்திற்கு ஏற்ப மாறுபட்டாலும் கிராமங்களில் எப்போதும் விஷகடி வைத்திய முறைக்கு மக்கள் மத்தியில் நல்ல ஆதரவும் வைத்திய முறையை கைக் கொள்ளும் எண்ணமும் நிலவி வருகின்றது.

## கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக சாகித்திய விழா – 2007 போட்டி முடிவுகள்

### ஓவியம்

1ம் இடம் – ச. டினேந்திரராஜா - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்.
2ம் இடம் – சீ. நிரோஜன் - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்.
3ம் இடம் – ச. ஜேசுதாசன் - மட்/கிரான் மகாவித்தியாலயம்.

### சிறுகதை


1ம் இடம் – பாலன் சுதாகரன் - மட்/கிரான் மகாவித்தியாலயம்
2ம் இடம் – கலைவாணி கந்தசாமி - மட்/கிரான் மகாவித்தியாலயம்
3ம் இடம் – கணவதிப்பிள்ளை நிரோஜி - மட்/முறக்கொட்டான்சேனை இ. கி. மிசன் வித்தியாலயம்

### கவிதை

1ம் இடம் – கோகிலவதி சிவலிங்கம் – மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்.
2ம் இடம் – வஜியராசா கஜேந்தினி – மட்/முறக்கொட்டான்சேனை மகா வித்தியாலயம்.
3ம் இடம் – துரைசாமி கலைச்செல்வி - மட்/சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயம்.

• ராஜாத்தி

# வாழ்வை புரிதல்



வாழ்வை புரிந்த மீன்குஞ்சு
நீரின் ஆழம் தெரியாமலும்
செல்லும் தூரம் தெரியாமலும்
நீந்திக் கொண்டிருக்கிறது
வாழ்நாளெல்லாம்
வாழ்ந்து கொண்டிருக்கிறது

வழி எங்கும் உறவு
வழி எங்கும் பிரிவு
பிரிவும் உறவும் மாறி மாறி
வாழ்வை பகிர்ந்து கொண்டிருக்கிறது
மீன்குஞ்சு

ஆழத்தில் செல்லும் ஒரு நாள்
அழகை ரசிக்கும்
பின் அந்நியமாகி
மீண்டு திரும்பும்

தூரத்தில் செல்லும் மறுநாள்
தொலைதூர வாழ்வை ரசிக்கும்
தொலைவை விடுத்து
மீண்டும் திரும்பும்
வாழ்வை ரசிக்கிறது
மீன்குஞ்சு

வாழ்வை புரியாத நானோ
வாழ்வின் ஆழம் பற்றி
வாழ்நாளின் தூரம் பற்றி
வாழ்வு தொலைவது பற்றியும் தெரியாமல்
வாழ்வின் உறவு
வாழ்கால பிரிவு
வாழ்க்கையின் இரசிப்பு பற்றி புரியாமல்
வீழ்ந்து கொண்டிருக்கிறேன்
வாழ் நாளெல்லாம்.

*29.11.2007*

# முனைப்பு

• ராஜாத்தி



நட தொடர்ந்து நட
நீ போகின்ற பாதையில்
உனக்காக வெல்லாம் எதிர்பாத்திருக்கும்

நீ போகின்ற பாதை
நீளமாகத் தெரியலாம்
முன்னர் பதித்த
சுவடுகள் அழியலாம்

நட தொடர்ந்து நட
உயிர் உனது
உலகு உனது
ஏன் இந்த பிரபஞ்சமே
உனக்கானதுதான்

நட தொடர்ந்து நட

உனக்கான வாழ்வு
உனக்கான சமூகம்
உனக்கான உறவுகள்
ஏன் நீ சுவாசிக்கின்ற காற்றும்
காத்திருக்கின்றது புதிதாய்

# திரைச்சீலை ஓவியத்தில் எமது பிரதேசம்

என். கே. தயாளகுணசீலன்

ஓவியங்களைப் பொறுத்த வரையில் சீலையில் வரைவது ஒரு தனிரகம். இந்தச் சீலை ஓவியங்களுக்கு ஆரம்ப காலத்தில் இருந்தே பெரும் மதிப்பு இருந்து வந்துள்ளது. ஓவியம் கடதாசியில் வரையலாம் காகித அட்டையில் வரையலாம் சுவரில் வரையலாம். அது போல் சீலையிலும் வரையலாம். எல்லாவற்றிற்கும் மேலாக கலைத்திறன் வாய்ந்தது திரைச்சீலை ஓவியம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. வெளிநாடுகளில் கூட "கேன்வேஸ்" எனப்படும் ஒருவகைத் தடினமான சீலையில் நல்ல ஓவியங்களை வரைந்து விற்பனைக்கு விடுகிறார்கள். அந்த ஓவியங்களைப் பார்ப்பவர்கள் மெய் மறந்து போய் நிற்பார்கள். அதற்கென்றே சட்டங்கள் செய்து சீலையினை அதில் அழகாகப் பொருத்தி நல்ல ஓவியங்களை வரைகின்ற அந்த ஓவியங்களின் வர்ண ஜாலங்களே ஒரு தனி! மேலைத்தேசத்தைப் போலில்லா விடினும் தம்மால் இயன்ற அளவு தமது கலை நுட்பங்களுக்கேற்ப கணக்கற்ற பல ஓவியங்களை திரையில் வரைந்து பெருமையும் வரலாறும் நமது கோறளை தெற்கு பிரதேசத்திற்கு உண்டு.

நமது இந்து ஆலயங்களுக்கு திரைச் சீலை அதி முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. சிவன், வினாயகர், கலைமகள் போன்ற தெய்வங்களின் ஓவியங்கள் ஓவியர்களால் நிறையத் தீட்டப்படுகின்றன. இந்தத் திரைச்சீலை ஓவியம் எமது பிரதேசத்தில் வளர்ந்த கதை கூறுமுன் இந்த ஓவியங்களின் ஊடகங்கள் பற்றிக் கவனிப்போம். திரைச்சீலை ஓவியங்களுக்குப் பயன்படுத்துகின்ற வர்ணம் தூள் வர்ணம் எனப்படும். "சீங்ஸ்" பவுடர், ரெம்பறா பவுடர் என்பன இதற்கு மூலகம் நீரும் வச்சிரமுமாகும். இந்தத் தூள் வர்ணங்களை வச்சிரத் தண்ணீரில் கலந்து ஓவியங்களைத் தீட்டுவார்கள். அதற்கு முன்னர் வரையப்படும் சீலையினை வச்சிரத் தண்ணீரினால் பூசி அது நன்கு காய்ந்தவுடனேயே சித்திரம் மேற்கொள்ளப்படும்.



திரு.என். குமாரவேல் அவர்களது திரைச்சீலை ஓவியம்

1950 அல்லது அதற்கு முந்திய காலப் பகுதிகளில் கிரான், கிண்ணையடி, சந்திவெளி போன்ற கிராமங்களில் பரவலாக திரைச்சீலை வரையப்பட்ட காலம் எனலாம். இதற்குக் காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் கிரான் சி.சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள், கிண்ணையடி K.S.கந்தையா (சிவராசா) ஆசிரியர், கிண்ணையடி மு.று. நவரெத்தினம் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

**திரு. சிவலிங்கம் ஆசிரியர்:** இவர் ஒரு தரமான ஓவியர். அவருக்கு ஓவியங்கள் பற்றிய எல்லா முறைகளும் நன்கு தெரியும். ஆயினும் திரைச்சீலைகள் வரைந்ததாக அறியப்படவில்லை. பாடசாலை நிருவாகத்தோடு அவர் நின்று விட்டார்


**K.S. கந்தையா:** K.S. கந்தையா எனப்படும் சிவராசா ஆசிரியர் நிறைய திரைச் சீலைகளை வரைந்துள்ளார். இக்கட்டுரையை எழுதும் எனக்குக் கூட முன்மாதிரி அவர் தான். அந்நாட்களில் ஊருக்கூர் நாடகங்கள் அரங்கேறிக் கொண்டிருந்த காலம். இந்த வகையில் திரு. K.S.கந்தையா ஆசிரியர் அவர்கள் நாடக மேடைக்கான பல அற்புதமான திரை ஓவியங்களைப் படைத்துள்ளார்.

மட்டுநகரில் ஓவியர் **கொண்டயராஜு:**

தமிழ் நாட்டில் இருந்து வந்த நாடகக் குழுவினர் தமிழ்ப் பிரதேசமெங்கும் தமது நாடகங்களை நடத்திக் கொண்டிருந்த காலம். "சீன்ஸ்" என்று அழைக்கப்படுகின்ற திரைச்சீலை இல்லாவிட்டால் நாடகம் சோபிக்காது. அந்நாட்களில் பெரும்பாலும் புராண இதிகாச நாடகங்களே நடைபெற்றுக் கொண்டிருந்தன. எனவே காட்சி மாற்றங்களுக்கேற்ப திரை மாறும். உதாரணமாக 'வள்ளி திருமணம்' என்னும் நாடகம் நடை பெற்றுக் கொண்டிருந்தால் அங்கே தினைப்புனம், கதிர் காமம் போன்ற காட்சி அமைப்பு முக்கியமானதாக விளங்கும். எனவே அதற்கேற்ப திரை ஓவியங்கள் 'செட்' எனப்படும் காட்சியமைப்புக்கள் போன்றவற்றைச் செப்பனிடுவதற்காக தரமான ஓவியங்களின் உதவி தேவையாக இருந்தது. இந்த வகையில் தமிழ்நாட்டில் பிரபல்யமான ஓவியர் "கொண்டயராஜு" தமது ஓவியக் குழுவினருடன் மட்டக்களப்புக்கு வருகை தந்து தமது அபார கலைப்படைப்புக்களை அறிமுகம் செய்து கொண்டிருந்தார்கள். பிரமிக்கத்தக்க ஓவியங்கள் காட்சிகள் வரைந்து கொண்டிருக்கும் அந்த ஓவியக் குழுவினரை கலா ரசனையுள்ள யார்தான் அணுக மறுப்பார்கள். எங்கள் பிரதேசத்தவரான K.S.கந்தையா ஆசிரியர் அவர்கள் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் திரு. கொண்டயராஜு அவர்களின் ஓவியப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டது மட்டுமன்றி மேற்படி கொண்டயராஜு ஓவியங்கள் வரையும் போது பணிவிடைக்காரராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக திரைச்சீலை ஓவியத்துக்கான உத்தி முறைகளைக் கண்டும், கேட்டும், பழகியும் அறிந்துள்ளார். இது அவர் தாமே சொல்லக் கேட்டவைகளாகும்.

இருந்தாலும் ஓவியம் என்பது எல்லோருக்கும் கைவந்த கலை அல்ல. அவர்களுக்கு அதில் ஒரு ஆர்வம் ஈடுபாடும் இடைவிடாத முயற்சியும் இருக்கவேண்டும். திரு.சிவலிங்கம் ஆசிரியர் அவர்களின் ஓவியங்களைப் பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவருடைய கற்பனை ஆற்றல் அத்தகைய பெருமையுடையது அவருடைய இயற்கைக் காட்சிகளைப் பார்த்தால் மெய்மறந்து போய் நிற்பார்கள். எனவே இப்பெயப்பட்டவர்கள் ஓவிய வளர்ச்சியில் தாங்கள் எதிர்வரும் பிற்கால சந்ததிக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்கள்.

இன்னோரன்ன வாயிலாக எமது பிரதேசத்தில் இடம்பிடித்துக் கொண்ட இந்த திரைச்சீலை ஓவியமானது நமது இளைய தலைமுறை ஓவியங்கள் பலரினால் தூர்ந்து போய்விடாமல் தொடர்ந்தும் கையாளப்பட்டு வரைந்து கொண்டிருப்பது பெருமைக்குரிய ஒரு காரியமாகும். ஆனால் மேற் கூறப்பட்டபடி இதற்கு கையாளப்பட்ட தூள் வர்ணம் இப்போது மருவி விட்டது. இதற்கமைய மேற்கத்தேய நவீன முறை வர்ணங்கள் இருந்த போதிலும் நமது ஓவியங்கள் ஓயில் பெயின் எனப்படுகின்ற தைலவர்ணத்தையே பாவிக்கின்றனர். தூள் வர்ணத்தில் பளபளப்பாக மினுங்கும் தன்மை இருக்காது. சீலையும் மிருதுவாக இருக்கும் ஆனால் தைல வர்ணத்தில் பளபளக்கும் தன்மையுடன் சீலையும் பிரிவினைக்கு கடினமானதாக இருக்கும்.



ஓவிய தர்மாவின் திரைச்சீலை ஓவியம்

இனி நமது பிரதேசத்தில் ஓவியங்களைப்பற்றிக் கவனிப்போம். ஓவியதர்மா என்று பலராலும் பேசப்படுகிற தர்மலிங்கம் என்று இயற் பெயர் கொண்ட தர்மா அவர்கள் பல திரைச்சீலைகளை வரைந்துள்ளார். தற்போதும் தமது ஓவியக் கலையினைச் செய்து கொண்டிருக்கின்றார். இவர் ஒரு (Signe Board) விளம்பர ஓவியர் தமக்கு யாரும் நிகரில்லாத வகையில் இன்னும் ஆக்கபூர்வமான வகையில் எழுத்துக்களில் ஒரு புதுமையை அறிமுகம் செய்தவர். இவருடைய படைப்புக்களை நோக்கும் பட்சத்தில் இதுவரை இவருக்கு நிகராக யாரும் இவரது இடத்தைப் பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திரு.என். குமாரவேல் இவரும் ஒரு தன்னிகரற்ற திரைச்சீலை ஓவியர். இவர் வரையும் உருவப்படங்கள் உண்மையான ஒரு கலைப்படைப்பை வெளிக்கொணரப்படுவதாகும். பல திரைச்சீலைகள் சினிமா கட்டவுட், அரசியல் வாதிகளின் உருவப் படங்கள் பலவற்றைப் படைத்து சாதனை செய்தவர். இவருடைய பல ஓவியங்கள் மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபங்களில் காணப்படுகின்றது. பிரமிக்கத்தக்க இவருடைய படைப்புக்களுக்காக கலா பூஷண விருது பெற்றவர். யாழ்ப்பாணம் ஆட்டிஸ்ற் மணியம் சிற்றாண்டி ஓவியர் குமார் ஆகியோரது வழிகாட்டலில் தனது திறமையை வளர்த்துக் கொண்டவர். திரு வேலாயுதம் (சித்திரவேல்) ஆசிரியர். இவரும் கலைஞர் வரிசையில் முன்னணியில் திகழும் ஒருவர். சித்திர ஆசிரியராகப் பணியாற்றும் இவர் ஒரு சிற்பாசாரியும் கூட. பல திரைச் சீலை ஓவியங்களை வரைந்துள்ளார். நமது இந்துக் கோயில்களின் வர்ணப் பூச்சு வேலைகள், சுவரோவியங்கள், அலங்கார ஓவியங்கள் வரைந்து கொண்டிருக்கின்றார். நமது இந்துக் கோயில்களை வரைந்து கொண்டிருக்கின்றார்.

**திரு.ஆ.வேலாயுதம்:** இவர் ஒரு சோடை போகாத ஓவியர். தமது ஓவியங்களில் வியக்கும் முறையில் பலவித நவீன முறைகளைக் கையாள்பவர். தமது ஓவியக் கலையை வர்த்தகத்துறையில் புகுத்திக் கொள்ளாத இவர் பொழுது போக்காகவே தமது ஓவியங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றார். இவர் ஒரு பிரதிமைக் கலைஞர் தரமான ஓவியர் நடனகலாமணி கைலாசபபிள்ளை ஆசிரியரின் மாணவன். இந்த வரிசையில்,

**என். கே. தயாளகுணசீலன்:**


வித்தியாசமான ஓவியங்கள், இயற்கைக் காட்சிகளை வரைவது இவரது பொழுது போக்கு. திரைச் சீலைகள் அதிகமாக வரையாவிடினும் குறிப்பிடத்தக்க அளவு திரை ஓவியங்களிலும் தடம் பதித்தவர். இறுதியாக இவர் வரைந்த 'குமாரர் தெய்வம்' திரைச்சீலை தடானை குமாரராலய வாயிலை அலங்கரிக்கின்றது. பிரதிமை ஓவியம் இவருக்குப் பிடித்த ஒன்று. நடன கலாமணி கைலாயப்பிள்ளை ஆசிரியரின் மாணவன். பதினைந்து வயதில் இருந்தே ஓவியம் வரையத் தொடங்கியவர்.

**திரு. N.W. அருட்சீலன்:**

பாடசாலை அதிபர், சித்திர ஆசிரியர் இவரும் குறிப்பிடத்தக்க ஓவியராக இருந்தாலும் இவரது படைப்புக்கள் அதிகமாகக் காணப்படவில்லை. சில சுவரோவி யங்கள் நவீன முறையில் வரைந்துள்ளார்.

இப்படியாக எமது பிரதேச ஓவியங்கள் வாழையடி வாழையாக வாழ்வாங்கு வாழ்ந்து கலையுலகிற்கு ஒளியூட்டிக் கொண்டிருப்பது நமது பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். வாழும் கலைஞர்களை வாழவைத்து வரவேற்று பேணி நடப்பதே நமது ஒவ்வொருவருடைய கடமைகளாகும்.

ஓவியம் என்பது எல்லோருக்கும்
கைவந்த கலை அல்ல.
அவர்களுக்கு அதில் ஒரு ஆர்வம்
ஈடுபாடும் இடைவிடாத முயற்சியும்
இருக்க வேண்டும்.



# கோறளைப்பற்று தெற்கு முறுத்தானை கிராம ஆதிக் குடிகள்

இ. சர்வேஸ்வரன் (B.A)

"சாதிகள் இரண்டொழிய வேறில்லை"

என்பது பாரதி காட்டிய சீரிய நெறியாகும். அதனையே நாமும் பேணி நடப்பதுடன், சமத்துவ மான சமரச சமூகத்தை உருவாக்கும் பணிக்கு எம்மால் முடிந்த உதவிகளை வழங்குவது எம் ஒவ்வொருவரது கடப்பாடாகும்.

"வரலாற்றை படிக்காதவன் மனிதனல்ல,
வரலாறு இல்லாவிட்டால் மனிதனுமில்லை"

என்று கூறக் கூடியளவிற்கு வரலாறுக ளின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகின்றது. எமது பிரதேசத்தில் பல கிராமங்கள் நீண்ட கால வரலாற்றைக் கொண்டு காணப்படுகின்ற போதும் முறுத்தானை எனும் கிராமத்தின் பல சிறப்பம் சங்களை பலர் அறியாமல் உள்ளனர் என்று கூறக் கூடிய அளவிற்கு இக்கிராம வாழ் மக்களது சமூக வாழ்க்கையமைப்பும், அதனோடிணைந்ததாக ஏனைய செயற்பாடுகளும் உள்ளன.

எமது நாட்டைப் பொறுத்தவரை இலங்கை ஒரு ஜனநாயக தேசமாக போற்றப் படுகின்ற போதும் ஜனநாயகம் பற்றியோ, அதன் உரிமைகள், சலுகைகள் பற்றியோ அறியாதவர் களாகவும், அதனை பெறமுடியாததோர் தாழ்நிலை சமூகமாகவும் முறுத்தானைச் சமூகம் உள்ளமை வெளிப்படையானதோர் உண்மையாகும். இக்கிராம வாழ் சமூகமானது தங்களுக்கென்று ஓர் தனித்துவ மான கலாசாரப் பின்னணியையும், வாழ்க்கை முறைமையையும் கொண்டு வாழ்வதுடன் எமது கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கை முறைமையில் இருந்து இது வேறுபட்டுள்ளதையும் காணமுடிகின் றது அந்தவகையில் இக்கிராமம் பற்றியும், இங்கு வாழ் சமூகமக்கள் பற்றியும், அவர்களின் தோற்றம் சமூக வாழ்க்கையமைப்பு, தொழில், கல்வி, வழி பாடும் தெய்வ நம்பிக்கைகளும், தற்காலத்தில் அவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்பன பற்றியும் சற்று ஆழமாக ஆராய்வது பொருத்தமானதாகும்.

முறுத்தானை எனும் கிராமமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டதாக கிரான் பிரதேசத்திற்கு மேற்காக சுமார் 25km தொலைவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திற்கு தென்மேற்காக குடும்பிமலைப் பிரதேசமும், வடக் காக கள்ளி வடமுனைப் பிரதேசமும் காணப்படு கின்றது. சுமார் 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்ததாகக் கூறப்படும் இக்கிராமம் ஆனது முற்றுமுழுதாக வேடுவர் சமூகத்தைக் கொண்ட

தாகவும், சுற்றிவரை அடர்ந்த காடுகள், சிற்றாறுகள், மலைகள், குளங்கள் என பல்வேறு இயற்கை வளங்க ளைக் கொண்ட ஓர் இடமாக திகழ்கின்றது. இச்சமூகத்தினரின் பூர்வீகம் பற்றிப் பார்க் கும்போது இவர்களது மூதாதையர் "மியான்குளம்" எனும் பிரதேசத்திலே ஆதியில் வாழ்ந்ததாகவும் பின்னர் அங்கிருந்து சிற்சிறு குழுக்களாக முறுத்தானை, லாவாணை, மன்னம்பிட்டி, சொறிவில் அளவாக் கும்பற, தலுக்கன்ன என பல பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து குடியேறியதாக கூறுகின்றனர். தற்போது முறுத்தானைக் கிராமமானது சுமார் 75 குடும்பங்களையுடைய **500**கும் குறையாத மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. தற்போதைய நிலை மில் இங்கு வாழும் சமூகமானது மினுமினுத்தவெளி, அக்குறாணை, வாகனேரி, காயான்கேணி ஆகிய கிராமங்களிலும் திருமணம், தொழில், இடம்பெயர்வு காரணமாக பிரிந்து வாழ்வதாகவும், அக்கிராம உறவுகளுடன் தொடர்புகளைப் பேணுவதாகவும் குறிப்பிடுகின்றனர். இருந்த போதும் ஆரம்ப காலத் தில் பிரிந்து சென்ற பூர்வீக சமூகத்தினருக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும், உறவும் இன் றியே வாழ்வதாகவும் கவலையடைகின்றனர்.

ஆரம்பகாலத்தில் இவ்வேடுவ சமூகத்தினர் சிங்களவர்களுடன் நெருங்கிப் பழகியதுடன் குடும்ப உறவுகளை ஏற்படுத்தியும், மொழி குல பேதமின்றி வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்ற போதும், பிற்காலத்தில் பிரிந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்ததால் தொடர்பு அற்றுப் போயிற்று என்கின்ற னர். முறுத்தானையில் உள்ள ஒரு சில முதியவர் கள் இன்றும் கூட சிங்கள மொழியைப் பேசுவதுடன், தெய்வ வழிபாட்டில் சிங்களம் மற்றும் வேடுவ மொழிகளைப் பயன்படுத்துகின்றனர். தற்போது முறுத்தானையில் பிறந்து வாழ்ந்தவர்களின் வரிசையில் 3ம், 4ம் தலைமுறையினரே இக்கருத்துக் களை தெருவிக்கின்றனர். இத்தலைமுறையினரே தற்போது முறுத்தானையில் வாழும் வயோதிபர்களா வார்கள். இக்கிராமம் சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்தது என்பதற்கு இங்கு பிறந்து வாழ்ந்த வர்களின் தலைமுறைகளே சான்றாகிறது.

இக்கிராமத்தில் தற்போதைய நிலையில் சின்னத்தம்பி வண்டையாதம் (60), சின்னக்குட்டி – சின்னப்பிள்ளை (55) ஆகிய தம்பதியினர் இவ்வாழ்மக்களை தலைமை தாங்குபவர்களாக காணப்படுகின்றனர். இவர்களை இக்கிராம மக்கள் முன்னிலைப்படுத்துவதை இக்கிராமத்திற்கு சென்ற போதும் மற்றவர்களின் கருத்துக்கள் மூலமும் அறியமுடிவதுடன், இவர்களே இவ்வூரில் உள்ள மாரியம்மன் ஆலயத்தில் தெய்வமாடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். கந்தன் – சின்னத்தம்பி – வண்டையா ஆகியோருக்கு முன்பு இருந்தோர் பற்றி இவரால் கூறமுடியாது உள்ளது. வண்டையாவின் அப்பா, அப்பப்பா ஆகியோர் முறுத்தானையிலே பிறந்து வாழ்ந்ததாகவும், இவர்களே இக் கிராமத் தவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தனர் என்றும் குறிப்பிடுகிறார்.

இச்சமூகத்தினரின் பூர்வீகம் பற்றிப் பார்க்கும்போது இவர்களது மூதாதையர் "மியான்குளம்" எனும் பிரதேசத்திலே ஆதியில் வாழ்ந்ததாகவும் பின்னர் அங்கிருந்து சிற்சிறு குழுக்களாக முறுத்தானை, லாவாணை, மன்னம்பிட்டி, சொறிவில் அளவாக்கும்பற, தலுக்கன்ன என பல பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து குடி யேறியதாக கூறுகின்றனர்.

அடுத்து முறுத்தானை வாழ் சமூக மக்களது வாழ்க்கை அமைப்பு முறைமை பற்றிய விடயங்களைப் பார்க்கும் போது, நாற்புறமும் அடர் காடு சூழ்ந்து காணப்பட்ட போதும் இலுக்கால் வேயப்பட்ட சிறுசிறு குடிசைகளிலே இவர்களது வாழ்வு இடம்பெறுகின்றது. இக்குடிசைகளானது மிகவும் சிறியதாக காணப்படுவதுடன், காட்டில் கிடைக்கும் சிறுதடிகள், கொடிகள், நார்கள் என்ப வற்றை மட்டும் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளது. இக்குடிசைக்கு சுற்றிவர சுவர் அமைப்புக்கள்


எதுவும் கிடையாது. இவர்களது வீடு சிறு குடிசையாக காணப்பட்டாலும் அதற்குள் பெரும் எண்ணிக்கையிலானோரே வாழ்க்கை நடத்துகின்றனர். இக்குடும்பங்களின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை எனும் போது சராசரியாக 6, 7 – 10, 12 ஆகவே காணப்படுகின்றது. மிகவும் இளம் வயதில் திருமணம் செய்யும் வழக்கம் இங்கு காணப்படுவதோடு, திருமணமாகியவர்கள் பிறிதொரு சிறு குடிசையை அமைத்து தங்கள் வாழ்க்கையைத் தொடர்கின்றனர். திருமணம் என்பது சட்ட ரீதியானதாக இல்லாமல் சம்பிரதாய பூர்வமானதாகவே காணப்படுகின்றது. சுமார் 30, 35 வயதிற்கு இடையில் பல குழந்தைகளைப் பெற்றவர்களாக இங்குள்ள பெண்கள் காணப்படுவதுடன், இளமையிலே உடலமைப்பால் முதிர்ச்சியடைந்தவர்களாக தென்படுகின்றனர். ஒரு குடும்பத்தின் வாசலில் தாய், மகன், மகள் ஆகியோரின் ஒரே வயதுக் குழந்தைகள் ஒன்றாய் விளையாடுவதை அவதானிக்கலாம்.

கூட்டுக் குடும்பம் என்று இவர்களது வாழ்க்கையமைப்பை கூறுவதிலும் பார்க்கக் கூட்டுச் சமூக வாழ்க்கையமைப்பு என்று கூறும் அளவிற்கு இவர்களது வாழ்க்கை முறைமை காணப்படுகின்றது.

இவர்களது தொழில் எனும்போது ஆரம்ப காலத்தில் வேட்டையாடுதல், தேன்வெட்டுதல், மீன்பிடித்தல், கருவாடு காயவைத்தல் என்பன பிரதானமானதாகவும், தற்காலத்தில் சிறியளவிலான, சேனைப்பயிர்ச்செய்கை, ஆடு, மாடுகளை வளர்த்தல், பக்கத்து பிரதேச விவசாயிகளின் நிலங்களில் கூலிக்கு வேலை செய்தல் என்பன காணப்படுகின்றது. இம்மக்களின் பிரதான உணவுகளாக இறைச்சி, மீன், தேன், பால், தானியம், கிழங்குவகை நாட்டு மரக்கறிகள் என்பன காணப்படுகின்றது. இறைச்சிவகை எனும் போது அதிகமாக இவர்கள் உடும்பு, அனுங்கு, பன்றி, ஆமை போன்றவற்றுடன் ஏனைய விலங்குகளையும் வேட்டையாடி உண்கின்றனர். இம்மக்கள் தேன் வெட்டுதல், வேட்டையாடச் செல்லல் என்பவற்றின்போது மனைவி, பிள்ளைகள் முறுத்தானையில் இருக்க, ஆண்கள் தூர இடங்களுக்குச் சென்று சில நாட்கள் கழித்து இவர்களது வாழ்விடம் திரும்புகின்றனர். சில பருவகாலத் தொழில்கள் நிமிர்த்தமும் குடும்பத்துடன் தங்கள் வீட்டிலிருந்து சென்று வாழ்கின்றனர். உதாரணமாக குளங்கள் வற்றி மீன் அதிகமாக பிடிக்கும் காலங்களில் குளக்கரைகளிலே குடிசைகளை அமைத்து கணவன், மனைவி இருவரும் குளக்கரைகளிலே வெயிலிலும், தீயிலும் காயவைத்து கருவாடு ஆக்குகின்றனர். இதற்கு தங்கள் குழந்தைகளையும் முழுமையாக பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

இம் மக்களின் குடிசைகளின் முன்பக்கமாகவே சமையல் அடுப்பு காணப்படுகின்றது. இவ்விடத்தில் மீன்களை பதப்படுத்தக் கூடிய ஒரு அமைப்பை எல்லாக் குடிசைகளிலும் காணக் கூடியதாக உள்ளது. கருவாடு, தேன், இறைச்சி என்பவற்றை விற்பதன் மூலமே இவர்கள் பணம் சேகரிக்கின்றனர். இவர்கள் சேகரிக்கும் பணம் இவர்களது உணவுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. சேமிப்பு பழக்கம் என்பது இவர்களிடம் முற்றாக இல்லை என்றே கூறலாம். ஆடை, நகை என எந்தவித ஆடம்பரச் செலவுகளும் இல்லாமலே வாழ்கின்ற இவர்களிடம் புகைத்தல், மதுவருந்தல் என்பன காணப்படுகின்றது. எமது கிராமங்களில் காணப்படும் அளவிற்கு மிகவும் மோசமான நிலையில் மது அருந்தும் பழக்கமும், அதனால் குடும்பங்களில் ஏற்படும் சண்டை சச்சரவுகளும் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். காரணம் மதுவை பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் அல்லது பொருளாதாரம் எனலாம், ஆனால் மாறாக புகைத்தல், வெற்றிலை உண்ணுதல் போன்றவற்றில் ஆண்கள், பெண்கள், இளம் சிறார்கள் என பலரும் ஈடுபடுகின்றனர். அதிகமான ஆண்கள் கஞ்சாவை புகைப்பதைக் காண முடிகின்றது. கஞ்சாவை அவர்களே உற்பத்தி செய்வதால் இதற்கு இங்கு தட்டுப்பாடு இல்லை என்றே கூறலாம்.

உடைகள் அணிவதிலும் பல வித்தியாசங்களை காணமுடிகின்றது. ஒட்டமாவடி, கிரான் பிரதேசங்களுக்கு தாங்கள் சேகரித்த பொருட்களை விற்பதற்காக வரும் போதுமட்டும் சேலை, சேட்



நாவல் இலைகளால் உருவாக்கப்பட்ட வழிபாட்டிடம்

அணிகின்றனர். ஏனைய நேரங்களில் ஆண்கள் இடுப்பில் சாறனும், பெண்கள் இடுப்பில் ஒரு துண்டும் மேலங்கியாக ஒரு சட்டையையும் அணிகின்றனர். இக்கிராம மக்கள் அறிந்த பெரும் நகரங்கள் என்றால் ஓட்டமாவடி, கிரான் ஆகிய வற்றையே குறிப்பிடுகின்றனர். இங்கு வரும் இவர் கள் தங்கள் பொருட்களை விற்றுவிட்டு தமக்கு வேண்டிய வெற்றிலை, பாக்கு, தேங்காய், தேயிலை, சீனி, உப்பு போன்ற பொருட்களை அதிகமாக வாங் கிச் செல்கின்றனர். இவர்களது உற்பத்தி களுக்கு நியாயமான விலை என்பது ஒருபோதும் கிடைப் பதில்லை. அவர்களின் உற்பத்திகள் கொள்ளை இலாபத்தில் இடைத்தரகர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இவர்களது போக்குவரத்து என்பது மிகவும் கஷ்டமான ஒருவிடயமாகும். கால் நடையாகவே அன்று முதல் இன்றுவரை கிரான், ஓட்டமாவடிக்கு வருகின்றனர். இடையில் மூன்று, நான்கு ஆறுகளில் பாய்ந்து சென்றே தமது தேவைகளை நிறைவேற்றுகின்றனர். மழை காலங் களில் இது பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதுடன் மரணத்திற்கும் இட்டுச் செல்கின்றது. இங்கு வாழ் மக்களின் இறப்புகள் பெரும்பாலும் யானை மிதித்தல், பாம்புகடித்தல், முதலைபிடித்தல், குறைப்பிரசவங்கள், நோய்கள், மூடநம்பிக்கைகள் என்பவற்றாலே இடம் பெறுகின்றது. இங்குள்ள பெரும்பாலான முதியவர்கள் நல்ல முதுமைய டைந்து 70, 80 வயதுகளின் பிற்பாடே இறக்கின்ற னர். இவர்களது ஆயுட்காலம் சராசரியாக அதிகம் என்றே கூறலாம். இறுதிக் காலம்வரை பெரும் பான்மையோரின் உடல்நிலை ஆரோக்கியமானதாக உள்ளதோடு நீரிழிவு, குருதியமுக்கம், பருத்த உடலமைப்பு, இதய நோய் போன்றவற்றைக் காண முடியாது என்றே கூறலாம். தங்களிடையே எவ்வித வர்ணப் பாகுபாடும் கொண்டிராது ஒரே சகோதர மாக வாழ்கின்ற இவர்கள் தங்கள் குழந்தைகளி னதும், தங்களினதும் தலைமுடியை தாங்களே வெட்டிக் கொள்கின்றமை இவர்கள் பிறரில் நம்பியி ருக்காமையைக் காட்டுகின்றது.

திருமணம் எனும் விடயமும் சமூகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகவே உள்ளது. இங்கு சட்டரீதியான பதிவுத்திருமணங்கள் அல்லது ஆலயத்தில் இடம்பெறும் திருமணங்களோ இடம் பெறுவது இல்லை. மாறாக அச்சமூகத்தினருக் குள்ளே பெரியோர்கள் சேர்ந்து பேசி "சேர்த்து வைத்தல்" எனும் நிகழ்வே திருமணமாக கொள்ளப் படுகின்றது. இங்கு திருமணங்கள் நிகழும்போது வண்டையாவும், சின்னப்பிள்ளையும் பிரதானமாக கலந்து கொள்கின்றனர். திருமணத்தின்போது சிறுதொகை மக்கள் சேர்ந்து ஆண்மகனையும், பெண்மகளையும் கைப்பிடித்து கொடுக்கின்றனர். இதனைக்கூட பெற்றோர்கள்தான் செய்வது என்று இல்லை. அக்கிராம பெரியோர் ஒருவராலே கைப் பிடித்துக் கொடுக்கப்படுகின்றது. பின்பு அனைவரும் சேர்ந்து சமைத்த உணவுகளை கூடி உண்பதுடன் திருமணம் நிறைவு பெறுகின்றது. இங்கு சாஸ்திரம், பொருத்தம், நேரம், காலம், வயது, பருவம் என்பன முக்கியம் பெறுவதில்லை. இவர்களது திருமணங்

கள் பெரும்பாலும் ஒரு மாலை வேளையில் இடம் பெற, மறுநாள் காலை அவர்கள் புதிய குடும்பமாக மாற்றமடைகின்றனர். குடும்பப்பிணக்குகள், விவாகரத்துக்கள் பெரும்பாலும் இல்லை. இறுதி வரை சேர்ந்தே வாழ்கின்றனர். கணவன் அல்லது மனைவியை இழந்தால் மறுதாரம் செய்வது வழக்கம். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, வண்டையாவின் முதல் மனைவி ஐந்து பிள்ளைகளின் பின் இறக்கிறார். அதேபோல் சின்னப்பிள்ளையின் முதல் கணவரும் நான்கு பிள்ளைகளின் பின் இறக்கிறார். பின்னர் வண்டையாவும், சின்னப்பிள்ளையும் ஒருவரையொருவர் மறுதாரம் செய்ததோடு இருவரது குழந்தைகளையும் இருவரும் சேர்ந்து பராமரித்து வந்துள்ளனர். இவ்வாறு கணவன், மனைவியை இழந்தவர்கள் பலர் மறுதாரம் செய்யும் முறை பரவலாகக் காணப்படுகின்றது.

திருமணத்தின்போது காணி, வீடு, பணம் எதுவும் சீதனமாக கொடுப்பது இங்கு கிடையாது. திருமணம் செய்தவர்கள் தமக்கு விரும்பிய பிறிதொரு இடத்தில் குடிசையை அமைப்பதோடு, இருவரும் இணைந்து தொழில்களில் ஈடுபட்டு நிம்மதியாக வாழ்கின்றனர். இங்கே உள்ளவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது ஆணும், பெண்ணும் சமம் எனும் நிலையில் காணப்படுவதுடன் பெண்ணடிமைத்தனம் என்பது இல்லை என்றே கூறலாம். இன்றுவரை திருமணமாகதவர்கள் என்று கூறக்கூடிய அளவிற்கு ஆண்களோ, பெண்களோ வயது சென்று காத்திருப்பது என்பதற்கு இங்கு இடமேயில்லை. மாறாக சிறுபராயத்திலேயே திருமணம் எனும் பந்தத்தில் இணைந்து விடுகின்றனர். இக்குடும்பங்களிடையே குடும்பப் பிணக்குகள் ஏற்பட்டால் வண்டையா அதில் தலையிட்டு தீர்த்து வைப்பது வழக்கமாக உள்ளது. இங்கு திருமணம் செய்பவர்களின் வயது எல்லை எனும்போது பெண்கள் சுமார் 13–15 வயதும் ஆண்கள் சுமார் 15–18 வயதுமாக காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகளிலே 18 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்களாகவே சொல்லப்படுகின்ற போது இக்கிராமச் சிறுவர்களது உரிமைகள் அவர்களுக்குரிய காலத்தில் கிடையாமல் போவதுடன், வாழ்க்கைச் சுமை எனும் சுமையை இளவயது முதலே சுமக்கின்றனர் எனலாம். இக்கிராமத்தவர்கள் தங்களுக்குள் நிகழும் இறப்பு, பிறப்பு பற்றி உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொள்கின்றனர் என்று கூற முடியாது. 90% மேலானோருக்குக்கூட தங்களதும், தங்கள் குழந்தைகளிலும் பிறந்த ஆண்டு, மாதம், தேதி என்பன தெரியாது என்றே கூறுவர். தேசிய அடையாள அட்டை, குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் என்பன இல்லாதவர்களாகவே இங்குள்ள பெரும்பாலானோர் வாழ்கின்றனர். இதற்குக் காரணம் இம்மக்கள் இவ்விடயங்களில் எவ்வித நாட்டத்தையும் காட்டாமையேயாகும்.

> *இங்கு வாழ் மக்களின் இறப்புகள் பெரும்பாலும் யானை மிதித்தல், பாம்புகடித்தல், முதலைபிடித்தல், குறைப்பிரசவங்கள், நோய்கள், மூடநம்பிக்கைகள் என்பவற்றாலே இடம் பெறுகின்றது.*

முறுத்தானை மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் விடயம் என்னவெனில் அவர்களது தெய்வ நம்பிக்கைகளுக்கும், வழிபாட்டு முறைகளுக்கும் ஆகும். இவ்வேடுவ மக்களின் முதன்மைத் தெய்வமாக பத்தினியம்மனும், முருகனும் விளங்குகின்றனர். தற்போது மாரியம்மன், பிள்ளையார் கோவில்கள் சிறிய அளவுடையதாக இக்கிராமத்தில் காணப்படுவதுடன், வேடுவத் தெய்வங்களே பெரிதாக வழிபடப்படுகின்றது. இவர்களது மாரியம்மன் ஆலயத்தில் மூன்று நாட்கள் சடங்கு வருடத்திற்கு ஒரு முறை இடம்பெறும். இதில் முதல் இரண்டு நாட்களும் பத்தினியம்மன், மாரி, பேச்சி, கண்ணகை, காளி, குத்துக்கிளவி, நரசிங்க வைரவர், வீரபத்திரர், நாககன்னி, வதனமார், குமாரர் ஆகியவற்றிற்கான தெய்வமாடல் நிகழ்வு இடம்பெறும். இதில் சின்னப்பிள்ளை என்பவரே தெய்வம் ஆடி குறி சொல்கின்றார். அடுத்த மூன்றாம் நாள் முழுவதும் வேடுவத் தெய்வவழிபாடு இடம்

பெறும். அதாவது கப்பத்தெய்வம் (மசமுத்தம்மா) கலராசன், மாயக் கன்னிக்கிழவி என்பன போன்ற பல தெய்வங்கள் ஆடப்படுகின்றன.

இங்கு கப்பத்தெய்வம் (மசமுந்தம்மா) ஆடல் முக்கியம் பெறுகின்றது. அதாவது பெரிய ஒரு மரம் நட்டு, அதைச்சுற்றி பறன் அமைத்து, அதனை நாவக் கொத்தால் அலங்கரித்து அதற்குள்ளே படையல்கள், தெய்வங்களை வைத்துவிட்டு இதற்கு மேலே ஏறி நின்று தெய்வமாடுபவர்கள் ஆடுகின்றனர். இதனை 46ம் பக்கத்தில் உள்ள படத்தில் காணலாம். இதன் போது காலில் சலங்கை, மார்பில் மாராப்பு, இடுப்பில் லேஞ்சி, கையில் நாவல் கொத்து அல்லது வில்லும் அம்பும் அல்லது ஒரு சிறு பெட்டி என்பவற்றை வைத்துக் கொண்டு ஆடுகின்றனர். இதில் வண்டையாவே முதன்மைத் தெய்வக்காரராக விளங்குகின்றார். இத்தெய்வங்களுக்கு ஆடுபவர் களை கப்புறாளை என்கின்றார்கள். இதன்போது சிங்கள மொழியிலும், வேடுவமொழியிலும் குறி சொல்கின்றனர். அதனை பிறிதொருவர் மொழி பெயர்த்து தமிழில் மக்களுக்கு கூறுகின்றார். படையல்களாக வெள்ளரிசிச் சோறும், மரக்கறிக ளும் சமைத்து படையலிடும் நிலை காணப்படு கின்றது.

அடுத்து கலராசன் எனும் தெய்வம் ஆடும் போது, பால்மரம் எனும் ஒருமரம் நாட்டப்பட்டு காணப்பட அதில் தெய்வம் ஆடும் கப்புறாளை களால் அம்பு எறியப்படும். அப்போது அம்பு சரியாக மரத்தில் பட்டால் நல்லது என்றும், படாமல் குறிதவறினால் கூடாது என்றும் கருதுகின்றனர். இங்கு முக்கிய விடயம் என்னவெனில் மந்திரங்கள் கப்புறாளைகளாலே ஓதப்படுவதுடன், இதனை விடவும் "மண்டாடு" என்பதே முக்கியமாகும். பத்தினி தெய்வத்தையும், முருகனையும் நினைத்தே மண்டாடு செய்கின்றனர். இவர்களது இவ் வழிபாட்டினை "மண்டாடு" வழிபாடு என்றே கூறலாம், மக்கள் இவ்வழிபாட்டின் போது ஆடு, மாடு, கோழி, தேன் என்பவற்றை நேர்த்தியாக வழங்குவதுடன், தங்களுக்கு ஏற்படும் நோய்களுக்

ஆூ

கூட்டுக்குடும்பம் என்று இவர்களது
வாழ்க்கையமைப்பை கூறுவதிலும்
பார்க்கக் கூட்டுச் சமூக
வாழ்க்கையமைப்பு என்று கூறும்
அளவிற்கு இவர்களது வாழ்க்கை
முறைமை காணப்படுகின்றது.

கான முக்கிய காரணம் இத்தெய்வங்களின் குறையே என்பதை அதிகமாக நம்புகின்றனர். இதனாலே இவர்கள் வைத்தியசாலைகளை நாடி மருத்துவ வசதி பெறுவது என்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. நோய் ஏற்பட்டால் கப்புறாளை ஊடாக திருநீறு சாத்துதல், நேர்த்திவைத்தல், திருநீறு போடுதல், மஞ்சள் தண்ணி நேர்தல், சிறிய சடங்கு செய்து குறிபார்த்தல் என்பன நிகழ்கின்றது. அத்துடன் தேன் வெட்ட, வேட்டையாட செல்லும் போது இத்தெய்வங்களை வழிபட்டே செல்கின்றனர். இவர்களது தொழில் ஆயுதங்களாக தற்காலத்தில் கத்தி, கோடரி, ஈட்டி, சட்டவிரோதமாக செய்யப்பட்ட துப்பாக்கிகள் என்பவற்றோடு, நாய்களையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டே காட்டில் செல் வது வழக்கமாக காணப்படுகின்றது.

இக்கிராம மக்களிடம் "காணிக்கை" போடுதல் எனும் நம்பிக்கையும் காணப்படுகின்றது. அதாவது குழந்தைப்பேறு, தீராதநோய் போன்ற வற்றிற்காக தெய்வ வழிபாட்டின் போது காணிக்கை இட்டால் அது விரைவில் நிகழும் என்கின்றனர். இவர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான மருத்துவ வசதியினை வண்டையாவிடமே பெறுகின்றனர். அதாவது கிரந்திக்கு கிரந்திக்கட்டை அரைத்துப் பூசுதல், குழந்தை பெற்றவர்களுக்கு காண்டவேர் ஊறல் கொடுத்தல், கர்ப்பிணித்தாய்மாருக்கு ஊறல் கொடுத்தல், தலைக்குத்துக்குப் பார்த்தல், திருணீறு சாத்துதல், குழந்தைகளுக்கு வயிறு ஊதலுக்குப் பார்த்தல், கண்கொதிக்கு தண்ணீர் ஓதிக் கழுவுதல், அம்மை நோய்க்கு பள்ளையம்

போட்டுக் கொடுத்தல் என்பன இங்கு இடம் பெறுவதோடு, வண்டையாவின் இந்த மருத்துவம் இம்மக்களுக்கு சமூக சேவையாகவே கிடைக் கின்றது.

இம் மக்களது கல்விமட்டம் மிகவும் பின் தங்கிய நிலை என்றே கூறலாம். தற்போது ஒரு சில குறிப்பிட்ட இளம் சிறார்களைத்தவிர பெரும் பான்மையானோர் கைவிரல் அடையாளம் இடுபவர் களாகவே உள்ளனர். எமது மாவட்டம் கல்வியில் வளர்ச்சி பெற்ற மாவட்டம் என்று கூறப்பட்டாலும் மிகவும் மோசமான நிலையில் கல்வியறிவுள்ள ஒருசில சமூகத்தையும் கொண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இதுவரைக்கும் எதுவிதமான அடிப்படைவசதிகள் எதுவும் இன்றி மரங்களின் கீழ் ஓரிரு ஆசிரியர்களின் மூலம் ஒரு சில மணித்தி யாலங்கள் கல்வி புகட்டப்படுகின்றது என்றே கூறலாம். கல்வியை வழங்குவதில் பெரும் சவால் என்ன வெனில் சிறுவர்களை பாடசாலைக்கு ஒன்று சேர்ப் பதுதான். ஒருநாள் வந்தபிள்ளை மறுநாள் பாடசாலைக்கு எப்போது வரும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அத்துடன் பருவகாலத்திற்கு ஏற்ப மீன்பிடி, விவசாயம், சேனைப்பயிர்க்காவலர், கால்நடைகள் மேய்ப்பு, மற்றும் இளைய குழந்தை களைப் பாரமரித்தல் என்பவற்றிற்காக சிறுவர்கள் அதிகமாக பெற்றோர்களால் பயன்படுத்தப்படுகின் றனர். கல்விவாய்ப்பு என்பது இச்சிறார்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது என்றே கூறலாம்.

தற்காலத்தில் இம்மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எனும் போது, அடிப்படை வசதியாக கருதப்படும் வீடு இல்லாமை, போக்குவரத்துப் பாதையில் லாமை, ஆறுகளுக்கு பாலம் இல்லாமை, சுகாதார வசதிகள் இன்மை, கல்வியைத் தொடரும் அடிப்படை வசதிகள் இன்மை, தாய் சேய் குடும்ப நலக்கல்வியின்மை, போஷாக்கு இன்மை, உரிய சந்தைப்படுத்தல் வசதியின்மை, வறுமை, தொழில் வழிகாட்டல் ஊக்குவிப்பு இல்லாமை, நியாயமான சலுகைகள், கடன்கள், உதவிகள் இன்மை என பல பிரச்சினைகளின் மத்தியிலே வாழ்க்கின்றனர். இந்நிலை முறுத்தானைக்கு மட்டும் உரியதன்று அத னோடு இணைந்து காணப்படும் பல அயற்கிராமங் களுக்கும் உரியதேயாகும்.

நாங்கள் மட்டும் பிறந்தோம், வாழ்ந்தோம், என்று இல்லாமல் எமது சமூகத்திற்கும், மக்களுக் கும் எம்மால் முடிந்த ஒரு சிறு சேவையாவது ஆற்றுதலே அச்சமூகத்தின் உயர்ச்சிக்கு முக்கிய மானதாகும். எமது பிரதேசத்தில் காணப்படும் இவ்வாறான பல பாதிப்புக்களுக்கு மத்தியில் அல்ல லுறும் பல்வேறு பின்தங்கிய கிராம மக்கள் மீதும் எமது சமூகத்தினரின் பார்வை செல்ல வேண்டும், அவர்கள் மீது கருணைகாட்ட வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

இச்சமூகத்தினருக்கு மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் ஓரளவேனும் தீர்க்கப்படுமிடத்து அச்சமூகத்திலிருந்து எமது பிரதேசத்தின் வளர்ச் சியையும், நாட்டின் உயர்ச்சியையும் பெறமுடியு மெனலாம், எமது நாட்டின் அரசியல் சட்டத்திற்கு அமைய நாட்டு மக்கள் அனைவரும் சகலவிதமான உரிமைகளையும், சலுகைகளையும் பெற முடியும் எனக் கூறப்பட்ட போதும், இவ்விடயம் இக் கிராம மக்களைப் பொறுத்தவரை ஏட்டுச் சுரக்காயாகவே காணப்படுகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து முறுத்தா னைச் சமூகமானது பழம் பெரும் வேடுவச் சமூக மாக காலாகாலமாக வாழ்ந்து வந்த போதும், தற் காலத்தில் அவர்கள் வேடுவர். சமூகம் எனும் எண்ணக்கருவை விரும்பாதவர்களாக இளந்தலை முறையினர் காணப்படுவதுடன், வேடுவர் பாரம் பரியத்திலிருந்து ஒரு வளர்ச்சியடைந்த சமூக நிலைக்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதை இளம் தலைமுறையினர் ஊடாக அறிய முடிகின்றது. இவ்வாறு இருப்பினும் எமது பிரதேசத்தில் இவ் வாறான பல சிறப்பம்சங்களையும், வாழ்க்கை முறைமைகளையும், பல பிரச்சினைக ளையும் கொண்டுள்ள சமூகங்களும் வாழ்கின்றனர் என்பதை வெளிக்காட்டுவதே என் நோக்காகும்.

பிரதேச சாகித்தியவிழா 2007 - சிறுகதை போட்டியில் முதலிடம்

# சுமைகள் கூட ஏணிப்படிகள் தான்...

பாலன் சுதாகரன்

இலேசாகத் தொடங்கிய காற்று அதன் வேகத்தை அதிகரித்துக் கொண்டு செல்ல "அடியேய் புள்ள ஓடிவாடி மழையிருட்டி வருது, இருக்கிற ஓட்டக் கூரையையும் சனியன் பிடிச்ச காற்று கிளப்பியெறியுது. பாரம் ஏத்தாட்டி இரவைக்கும் படுத்த மாதிரித்தான்" என்ற தாயினது நீண்ட ஓலம் கேட்டதும், படித்துக் கொண்டிருந்த பாடப்புத்தகத்தினை மூடி வைத்து விட்டு காற்றோடு போராடிக் கொண்டிருந்த தன் அன்னையோடு கூடி, கூரைக்குப் பாரமேற்றிக் காற்றைத் தோற்கடித்த களிப்போடிருக்க மழை இலேசாகத் தூறல் போடத் தொடங்கியது. "தூத்தல் மழையில் நிக்காம கெதியா உள்ளே போபுள்ள" என்று தன் மகளின் மீதான அக்கறையினை தாய் வெளிப் படுத்த அகல்யாவும் வீட்டின் உள் நுழைய மழையும் அதன் வீழ்ச்சியை அதிகப்படுத்தி "இது மாரி காலம்" என்பதனை கட்டியம் கூறுவது போல் "சோ" எனப்பெய்தது.

கடற்கரையில் மீன் வலை யிழுக்கும் பேர் மத்தியில் நின்று கொண்டு "ஏலேலோ...." போட்டு ஐம்பதோ, நூறோ கூலி வேண்டி ராஜனின் மதுபானச் சாலையுள் நுழைந்து மருந்து குடித்து விட்டு ஐந்தோ, பத்தோ மீதிச் சட்டைப்பையில் வைத்து விட்டு தினம் நாலுகாலில் வரும் அப்பா, கறி, புளி வேண்டக் கூடக் காசில்லையென்று சண்டை போட்டு, சட்டைப்பையில் கைபோட்டு மற்றவர்களைப் போல் வசதியாக வாழ முடியவில்லையே என்று அலுத்துக் கொள்ளுகின்ற அம்மா, "அண்டேஸ்கெட் கிழிஞ்சித்து", "செருப்பு அறுந்துத்து", "ரியூசனுக்கு காசில்ல".... என குறைந்தபட்ச கட்டாயத் தேவைகள் சொல்லும் குடும்பக் கஷ்டம் உணராத நான்கு தங்கைகளுமாய் மூத்தவள் அகல்யா.

கிரான் மகா வித்தியாலய மாணவியாகிய இவளுக்கு படிப்பதில் அளவு கடந்த பிடிப்பு இருந்தது. படிப்பில் வகுப்பின் நாயகி அவள்தான். அதிபர் தொடங்கி எல்லா ஆசிரியர்களுக்கும் அவள்மேல் அளவு கடந்த பிரியம் இருந்தது. காரணம் அவள் படிப்பில் மட்டுமின்றி, ஒழுக்கத்திலும் உயர்வில் இருந்தாள். பட்டினி கிடந்தாவது பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவள் உள்ளம் நிறையக் கிடந்தது. காலாகாலம் கூலிக்கு வேலை செய்து குடும்பம் நடத்தி வந்த அவள் பரம்பரையில் இதுவரையில் ஒருவர் கூடப் படித்து வாழ்ந்தவர்கள் இல்லையென்பதை அகல்யா நன்கறிவாள். அந்த வழமையினை தானே தான் மாற்றி அமைத்து விட வேண்டும் என்பதில் உறுதியோடிருந்தாள்.

அன்றும் அதிகாலையில் தன் கற்றல் கடமைகளோடு ஆரம்பித்து, சகல காலைக் கருமங்களையும் நிறைவு செய்து கொண்டு ஆறு மணி தமிழ் வகுப்பிற்குப் போக வேண்டும் என்ற அவசரத்தில் வேகமாகச் செயற்பட்டு வெளியேற எத்தணிக்க "புள்ளேய் பழஞ் சோத்தப் புளி போட்டுக் கரச்சி வச்சிருக்கன் சாப்பிட்டுத் துப் போ, மதியத்துக்கும் நாலுமணிக்குப் புறகுதான் வாறனி, வயிறு கெட்டுப் போயி ருண்டி" என்ற தாயின் அன்பான அதட்டலுக்கு" இல்லம்மா தனுஷியா போயிருவாள், மழை பெய்யுது அவயோட போனாத்தான் குடைக்குள்ள போகலாம்" என்று தாய்க்கு விடை கூறி வெளியேறியவளை "அக்கா எண்ட பென் மை முடிஞ்சிது, உன்னிட்ட ரெண்டு பென் இருந்தா தாவன்" என்றவளுக்கு தன்னிடம் இருந்த

இரண்டு பென்களில் ஒன்றைக் கொடுத்து விட்டு, தனுஷியாவிடம் குடைக்காக ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

பாடசாலை சென்றாலும் அவளின் மனம் பாடத்தில் பாதியும், வீட்டு நிலமையில் பாதியுமாக மாறி மாறி நின்றது. இடைவேளை நேரத்தில் எல்லோரும் சிற்றுண்டிச்சாலை செல்ல இவள் மட்டும் வழமை போல் வகுப்புக்குள்ளிருந்தாள். தனுஷியா வந்து "ஏண்டி இன்ரவெல் வெல் அடிச்சிருக்கு வாவன் கெண்டின் பக்கம் பெயித்து வருவம்" என்றவளுக்கு, மற்றவர்கள் வேண்டித்தர எத்தனை நாளைக்குத்தான் சாப்பிடுவது எண்றெண்ணி "இல்லடி நீ பெயித்து வா" எனச் சொல்லிவிட்டு, இரவிற்கு எழுத வேண்டிய தமிழ்க் கட்டுரையை வீட்டு வெளிச்ச நிலையைக் கருத்திற் கொண்டு நேரத்தினைப் பயன்படுத்த எண்ணி எழுதத் தொடங்கினாள். ஆசிரியர் வராத பாடவேளை தோழிகள் கூடியிருந்து தாம் செல்லும் ஒவ்வொரு பிரத்தியேக வகுப்புக்கள் பற்றியும் அவ் வகுப்புக்களுக்குக் கொடுக்கும் பணம் பற்றியும் பெருமையோடு கூடிக் குலாவி கூறிக் கொண்டிருந்தவர்கள், அகல்யாவின் தந்தை நேற்றிரவு மதி கெட்ட நிலையில் பிள்ளையார் கோயில் பூசகருடன் சண்டையிட்டு விட்டு வீதி எல்லாம் தகாத வார்த்தைகள் பேசி, விழுந்து, புரண்டு திரிந்த கதை பேசி கெக்கரித்துச் சிரித்தவேளை அகல்யாவுக்கு நெஞ்சை ஊசி கொண்டு துளைத்தாற் போலிருந்தது.


பாடசாலை விட்டு வீடு திரும்பும் போது பாடப்புத்தகச் சுமைகளோடு வீடு பற்றிய மனச் சுமையினையும் சுமந்து கொண்டு இன்று என்ன அதிர்ச்சி காத்திருக்குமோ என்று எண்ணிச் சென்றவளுக்கு அயல் வீட்டவர்களெல்லாம் அங்கு கூடியிருந்ததைக் கண்டு, அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. நேற்று வெளியில் போன தந்தை அவள் காலையில் வரும் வரைக்கும் வீடு திரும்பியிருக்கவில்லை. தந்தைக்கு ஏதோ நடந்து விட்டது என்ற தவிப்போடு அணமித்தவளுக்கு அவர்கள் மகிழ்ச்சியான முகம் துக்கமான விடயம் ஒன்றும் இல்லை என்பதைப் பறைசாற்ற பதட்டத்தினை விட்டு உள் நுழைந்து தனது மூன்றாவது தங்கையும் வயது வந்த விடயமறிந்து மகிழ்ந்தாள்.

ஆயினும் தாய்மட்டும் கவலை தோய்ந்த முகத்தோடு, கடை சென்று கடன்பட்டு வேண்டி வந்து இருந்த வேம்பு நெய், முட்டை, எள்ளு, மஞ்சள்.... என சமான்களை சரிபார்த்துக் கொண்டிருந்தாள். மகள் வயதுக்கு வந்து விட்டாள் என்ற மனமகிழ்வு இருந்தாலும், உடையிலிருந்து இன்னும் அவளுக்குத் தேவையான எத்தனையோ புதுத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய சுமை ஏற்பட்டு விட்டதே என்ற வேதனை உள்ளம் முழுக்கக் கிடந்தது.

இத்தனைக்கும் மத்தியில் மழை பொட்டுப் பொட்டென்று பெய்து கொண்டிருக்க ஆங்காங்கே ஒழுக்கு வேறு வீட்டினுள்ளே பாடசாலை உடை மாற்றி தாயருகே சென்று "ஆரிட கடையில அம்மா சாமான் வேண்டினனி" என்று கேட்ட அகல்யாவிடம் பதில் சொல்ல முடியாதவளாய் தாய் வாயடைத்து கண்ணில் நீர்கசிய நிற்க, தாய் வழமை போல எங்கோ அவமானப்பட்டிருக்கின்றாள் என்பதனை ஊகித்தறிந்தவளாய், தன் பொறுப்பற்ற தந்தையினை எண்ணி நொந்து, அவள் கண்ணில் கசிந்த நீரைத் தாய்க்குக் காட்டிக் கொள்ளாது, உள்ளே சென்று சாமிபடத்தை பின்பக்கமாகத் திருப்பி "நான் ஒரு வைத்தியராகுவேன்", எனப் பென்னால் எழுதி விட்டு, கண்ணை மூடிக் கொண்டு அவள் இலட்சியத் தீபத்திற்கு இன்னும் எண்ணெய் ஊற்றினாள்.

குடும்பத்தின் சுமைகள் கண்டு துவண்டு போகும் பேர் மத்தியில் இவள் ஓர் விதி விலக்கு........

## கோறளைப்பற்று தெற்கு பிரதேச கலாசார பேரவை - 2007




**அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்:**
திருமதி. குமுதினி இருதயதாசன், திருமதி. ஹெலன் சிவராசா, திரு. வெ. தவராஜா, திரு. கே. கமலசேகரன், திரு.த. ரவிராஜ்

**பின்வரிசையில் இடமிருந்து வலம்:**
திரு. ஏ. சந்திரகுமார், திரு. மு. சுதாகரன், திரு. எஸ். பி. வரதராஜன், திரு. எம். பத்மநாதன், திருமதி. நிரேக்கா தயாபரன், திரு. ச. பெ. சத்தியசீலன், செல்வி. மார்க் மிலானி

**சமூகமளிக்காதோர்**
திருமதி. தயாவதி கௌரீஸ்வரன், திரு. எஸ். சிவசுந்தரம் திரு. எம். குணரெட்ணம் திரு. ஐ. சர்வேஸ்வரன் திரு. கே. அருமைராஜா

# கோறளைப்பற்று தெற்கு பிரதேசத்தில் கைவினைகள்

க. சசிதரன்



கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட எமது பிரதேச மானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையெனும் ஐவகை நிலங்க ளையும் தன்னகத்தே கொண்ட ஒரு அழகிய பிரதேசமாக மிளிர்கின்றது. எமது பிரதேச மானது யுத்தம், சுனாமி போன்ற அனர்த் தங்களுக்கு உள்ளாகிய பிரதேசமாக காணப் பட்டாலும் இப்பிரதேசத்தின் செழிப்பானது என்றும் குறைவில்லாது காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படும் கோறளைப்பற்று தெற்குப் பிரதேசமானது தனது எல்லையாக வடக்கே திம்புலாகல பிரதேச செயலகத்தின் எல்லையையும், கிழக்கே கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் எல்லை யையும், வங்காள விரிகுடாவையும் தெற்கே ஏறாவூர் பற்று பிரதேசசெயலகத்தின் எல்லை யையும் மேற்கே திம்புலாகல பிரதேச செயலகத்தின் எல்லையையும் கொண்ட மைந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த சனத் தொகை யினரில் 70% மானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாவர். எனினும் இவர்களின் வாழ்வாதாரத் தொழிலாக கூடுதலாக விவசாயத் துறையையும் மீன்பிடித் தொழிலையும் மேற்கொள்வதனைக் காணக்கூடிய தாகவுள்ளது.

இவ்வாறாக இப்பிரதேசத்தில் காணப்படும் மக்கள் மத்தியிலே தமது வாழ்வாதாரத் தொழிலினூடாக கை வினைகள் காலம் காலமாக வளர்ந்து வந்ததனை காணக்கூடியதாகவுள்ளது. கைவினைகள் என்பது முழுக்க முழுக்க பயன்பாட்டு நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய அதாவது வருமான நோக்கம் பயன்பாட்டு நோக்கம் போன்ற வற்றிக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கைவினைகள் என்ப தற்குள் அடக்கலாம் இந்தவகையில் இக் கைவினைகள் கலையின் ஒரு அம்சமாகவும் உருவாக்கம் பெறுவதை யும் காணலாம்.


இவ்வாறாக தமது தொழில், வருமான நோக்கத்திற்காக எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்க ளால் மேற்கொள்ளப்பட்டுவரும் கைவினைகளையும், அவற்றின் உற் பத்தி முறைகளையும், அவற்றின் அழகியலையும் அவற்றிற்கான சந்தை வாய்ப்புக்களையும் நோக்குவதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

**இப்பிரதேசத்தில் காணப்படும் கைவினைகள்:**

01) பிரம்பை மூலப்பொருட்களாகக் கொண்ட கைவினைகள்
02) பனைப்பொருட்களை மூலப்பொருட்களாகக் கொண்ட கைவினைகள்
03) களிமண்ணை மூலப்பொருட்களாகக் கொண்ட கைவினைகள்
04) தென்னைப் பொருட்களை மூலப் பொருட் களாகக் கொண்ட கைவினைகள்
05) ஏனைய கைவினைகள்

என்ற அடிப்படையில் நோக்கக் கூடியதாகவுள்ளது.

**பிரம்பை மூலப் பொருட்களாகக் கொண்ட கைவினைகள்:**



ஒருபிரதேசத்தின் வளத்தைக் கொண்டே அப்பிரதேசத்தின் தொழில், பொருளாதாரம், போன் றவை காணப்படும் என்பதற்கிணங்க எமது பிரதே சத்தில் காணப்படும் வளங்களைக் கொண்டே தொழில்களும் பொருளாதார செயற்பாடுகளும் அமைந்துள்ளது. எமது பிரதேசத்தில், வயலும் வயல் சார்ந்த பிரதேசமும் காடும் காடு சார்ந்த பிரதேசமும் அத்துடன் வாவிகளும் அண்டிய பிரதேசமாக காணப்படுவதனால் இப்பகுதிகளில் பிரம்பு வளம் அதிகமாக காணப்படுகின்றது உதாரணமாக புலி பாய்ந்த கல், கும்புறுமூலை, கிரான், சந்திவெளி, பலையடித்தோணா, போன்ற பகுதிகளில் பிரம்பை எடுக்கக்கூடிய வசதிகள் அதிகமாக காணப்படு கின்றது. இதனால் இப்பகுதிகளில் பிரம்பை மூலம் பொருட்களாகக் கொண்டு மேற்கொள்ளும் கை வினைகள் அதிகமாக காணப் படுகின்றது.

காலம் காலமாக இப் பகுதிகளில் பிரம்பினை மூலப் பொருட்களாகக் கொண்டு தொழி லின் அடிப்படையில் வருவாய் ஈட்டும் நோக்குடன் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர். குறிப்பாக கிரான், சந்திவெளி, கோரகல்லிமடு, முறக்கொட்டான்சேனை போன்ற கிராமங்களில் இக்கைவினைப் பொருட்களின் உற்பத்திகளைக் காணலாம். உதாரணமாக ஆரம்ப காலத்தில் இருந்து சிறந்த முறையில் பிரம்புக் கைவினையில் தேர்ச்சி பெற்ற வராக எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்ந்தவராக சந்தி வெளி உபதபால் அதிபரான காலஞ்சென்ற செ. வடிவேல் போன்றோரைக் குறிப்பி டலாம். இவர்களைத் தவிர இன்று இப்பிரம்புக் கைவினையை வளர்த்தெடுத்துச் செல்பவர்க ளாக இப்பிரதேசத்தில் பலர் காணப்படுகின்றனர் உதாரண மாக சந்திவெளிப் பிரதேசத்தில் வசிக்கும் அமரசேகரம் தங்கராசா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்கள் தமக்குத் தேவையான பிரம்புகளை தமது அயல் பிரதேசங்களிலும் தமது கிராமங்களிலும் பெற்றுக் கொள்வதுடன் பொலநறுவை, மன்னம்பிட்டி போன்ற பிரதேசங்க ளிலும் மேலதிகமான பிரம்பு களை பெற்றுக் கொள்கின்றனர். இவர்களின் கருத்துப்படி பிரம் பிலே மலைப்பிரம்பு, உப்புத் தண்ணிப் பிரம்பு, நற்தண்ணிப் பிரம்பு என்று மூன்றுவகை

காணப்படுவதாகவும் அவற்றிலே நற்தண்ணில் பிரம்புதான் சிறந்தது என்று கூறுகின்றனர். இவற்றை அவர்கள் காயவைத்து உடைத்துப் பார்க்கும் பொழுது நற்தண்ணில் பிரம்பு மிகவும் பலமானதாக இருக்கும் இவ்வாறான தன்மைமூலம்தான் நற்தண்ணிப் பிரம்பை அடையாளம் காண லாம் எனக்கூறுகின்றனர்.



ஆரம்ப காலத்தில் இருந்து சிறந்த முறையில் பிரம்புக் கைவினையில் தேர்ச்சி பெற்றவராக எமது பிரதேசத்திற்குப் பெருமை சேர்ந்தவராக சந்திவெளி உபதபால் அதிபரான காலஞ்சென்ற செ. வடிவேல் போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக எடுக்கும் பிரம்புகளை முதலில் பதத்திற்கு அதாவது கூடுதலாக காயவிடாமலும் கூடுதலான நீர்த்தன்மை அற்றதான தன்மையில் எடுத்துக் கொள்வர் இவ்வாறு பதத்திற்கு எடுத்த பிரம்புகளை தாமாகவே தயாரித்த வெட்டுக்கத்திமூலம் பிளந்து கொள்வர். இப்பிரம்பை பிளர்த்தல் என்பது செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்றாற்போல் பிளப்பர் அதாவது சுளகு, கைப்பெட்டி, கதிரை போன்றவற்றிக்கு பயன்படுத்தும் பிரம்புகளை தட்டையாகவும் பூச்செண்டு, கைக்கூடை, புத்தக அலுமாரி போன்ற அழகுசாதனப் பொருட்கள் செய்வதற்கான பிரம்புகளை மூலை வரக் கூடியவாறு பிளந்து கொள்வர். இப்பிரம்பு களின் நீளம் 6 அடி அல்லது அதற்குக் குறைந்த அளவு கொண்டதாக காணப் படும் காரணம் சில வேலைகளை இலகு வாக்குவதற்கு இவ்வாறு பிளர்ந் தெடுத்த பிரம்புகளை வைத்துக் கொண்டு தமது கைவினைப் பொருட்களைச் செய்வர். இவ்வாறு பிரம்பு வேலைகளைச் செய்த முன்னாள் உப அஞ்சல் அதிபர் செ. வடிவேலும் தற் போதய அமரசேகரம் தங்கராசவும் சரி தமது உற்பத்திக்கான மேலதிக ஊழியர் களை தமது குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு மேற்கொள்வ தாக காணப்படுகின்றது.

**பிரம்பை மூலப்பொருட்களாக கொண்டு உற்பத்தி செய்யும் பொருட்கள்:**


கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் இருக்கும், இருந்த பிரம்புக் கைவினை யாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை அழகியல் நோக்கத்திற்காகவும் பாவனை நோக்கத்திற்காகவும் உற்பத்தி செய்து வருவதனை காணக்கூடியதாகவுள்ளது. இந்த வகையில் இவர்களால் செய்யப்படும் பொருட்கள்

1) பாவனைப் பொருட்கள்
2) அழகியல் பொருட்கள்

என்ற வகையின் அடிப்படையில் நோக்கக்கூடியதாகவுள்ளது.

பாவனைப் பொருட்கள் என்ற வகையில் கூடை, கைப்பெட்டி, கதிரை, புத்தகஅலுமாரி, கோழிக்கூடை போன்ற பாவனைக்காக மட்டும் பயன்படுத்தும் பொருட்களையும் உற்பத்தி செய்கின்றனர். இவை கூடுதலாக கொள்வனவு செய்யும் நபர்களின் விருப்பத்திற்கேற்ப அமைத்தும் அளவுகளால் மாற்றங்களையும் செய்தும் கொடுப்பர்.

அழகியல் பொருட்கள் என்ற வகையில் பிரம்பினால் செய்யப்படும் கைவினைப் பொருட்களாக பூச்செண்டு, பூச்சாடி, சாடிகளில்தொங்கவிடும் அழகிய உருவங்கள், பூக்கள், பேனா நிறுத்திகள் (pen stand) போன்றவற்றைக் குறிப்பிடலாம் இவை முழுக்கமுழுக்க அழகியல் அம்சம் நிறைந்தனவாகவும் நேர்த்தியாகவும் காணப்படும்.



**பிரம்பின்மூலம் செய்யப்படும் கைவினைப் பொருட்களின் அழகியல்:**


பிரம்பினை மூலப் பொருட்களாகக் கொண்டு செய்யப்படும் பொருட்களில் எமது கைவினையாளர்கள் தமக்கு தெரிந்த அதாவது நவீனமுறையற்ற தமது நாட்டார் நுட்பங்களைப் பயன்படுத்தி நவீன முறைகளில் தமது உற்பத்திகளை மேற் கொள்கின்றனர். இவர்கள் தமது உற்பத் திப் பொருட்களுக்கு மேலதிகமான அழ கைக் கொடுக்கும் வர்ணங்களையும் வர்ண நாடாக்களையும் பயன்படுத்துவ தனை காணலாம்.

இவர்களின் கைவினைகளின் அழகியலை கூடுதலாக அழகியல் பொருட் களிலே காணலாம் பாவனைப் பொருட்க ளில் அழகியல் என்பது வர்ணங்கள் இடப்பட்ட பிரம்பின்மூலம் இடை இடையே அலங்கரித்துள்ளதைக் காணக்கூடியதாக வுள்ளது. இவர்களினால் உற்பத்தி செய்யப் படும் அலங்காரப் பொருட்களிலே கூடுத லான அழகியல் அம்சங்களைக் காண லாம். உதாரணமாக மலர்ச் செண்டை எடுத்து நோக்கினால் இவற்றில் நீளமான பிரம்புகளை எடுத்து அவற்றிலே நீழ்வட்ட வடிவங்களையும் முக்கோண வடிவங்க ளையும் அமைத்து அவற்றில் இறப்பர் பூ, இலைகளை வைத்து பூச்செண்டு செய்வத னையும், இவற்றைவிட பூ கூடைகளை இன்றைய இளைஞர் சமுதாயத் திற்கு ஏற்ற விதத்தில் சிறிய சிறிய கூடைகளை இதய வடிவிலும் சதுர அமைப்பிலும் அமைத்து அவற்றி னுள் பூக்களை வைத்து அலங்க ரித்துள்ளனர் இவை தற்காலத்தில் திருமண வீடுகளிலும் கூடுதலான சிற்றுண்டிகள் பரிமாறமும் பயன் படுகின்றது. இவற்றிற்கு பச்சை, சிவப்பு போன்ற வர்ணங்களைப் பாவித்து அவ்அலங்காரப் பொருட் களில் மொட்டுக்கள், இலைகள், அலை வடிவங்கள் என்பவை வரையப்படுவதுடன் கூடுதலாக இதயம், நட்சத்திரம் போன்றவை வரையப்ப டுகின்றன இவற்றை மேலும் அழகுபடுத்த வர்ண நாடாக்களையும் மினு மினுப்புக் களையும் பயன்படுத்துகின்றனர்.

புத்தக அலுமாரி, பென்நிறுத்தி போன்றவற்றிலும் அழகியலை வெளிப்படுத் தும் வகையில் கூடுதலான வடிவங்கள் வரையப்படுவதுடன் வடிவங்களை அமைத் தும் வடிவமைக்கின்றனர், அதாவது புத்தக அலுமாரிகளில் தாமரைவடிவம், பறவை, நிறைகுடம், பிறைவடிவம், இலங்கைப் படம், கட்டடஅமைப்பு போன்றவற்றை அமைப்பதுடன் இவற்றுக்கீடு வேறு வர்ணப் பிரம்புகள் பாவிப்பதைக் காணலாம். இதனைவிட வார்னிஸ் பூசும் முறையும் காணப்படுகின்றது இதன் மூலம் இவற்றின் அழகினை மேலும் மிளிரச் செய்வதாக அமைகின்றது.

**பனைப்பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்ட கைவினைகள்:**

கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கிடைக்கக்கூடிய வளங்களில் ஒன்றுதான் பனைமரம் இப்பனையின் பாகங்களை வைத்து கைவினைப் பொருட்களை உருவாக்குதல் என்பது ஆரம்பகால மக்களிடையே இருந்துவந்த தொன்றாக காணப்படுகின்றது. இக் கைவினைகளை



மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக தமது வீட்டிலே உற்பத்தி செய்வது வழக்கம் ஆரம்பகாலத்தில் இருந்து வந்தாலும் அதற்கென தனித்துவம் பெற்ற வர்களும் இப்பிரதேசத்தில் இருந்துதான் உள்ளார்கள். எனினும் இன்றைய காலப் பகுதிகளில் இப்பனையோலைக் கை வினையில் சிறந்தவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். உதாரணமாக இப் பிர தேசத்தில் உள்ள அமரசேகரம் தங்கராசா வைக் குறிப்பிடலாம். இவர்கள் தமக்குத் தேவையான பனை, மூலப் பொருட்களை தமது வீடுகளில் உள்ள பனை மரங்களி லும் இப்பிரதேசத் தில் உள்ள காடுகளில் காணப்படும் பனை மரங்களிலும் இருந்து பெற்றுக் கொள்வதுடன் ஒரு குருத்தோலை 10/- என்ற விலையிலும் கொள்வனவு செய்கின்றனர்.

இங்கு விசேடமாக குறிப்பிடப் படுவது என்னவென்றால் மரபு ரீதியான முறைகளே இங்கு உற்பத்திக்கு பயன் படுத்தப்படுகின்றது. உதாரணமாக பனை யோலைகளை வாருவதற்காக பயன்படும் கருவியாக இரும்பு அறுக்கும் வாளை தமக்குத் தேவையான பனையோலையின் அளவிற்கேற்றாற் போல் கட்டையில் பதித்து அதன்மேல் பனையோலையை வைத்து அமத்தி இழுக்கும் வேளையில் அவை ஒரே அளவான பனையோலை களாக வருவதைக் காணலாம்.

**பனையோலையை மூலப்பொருட்களாகக் கொண்டு செய்யும் பொருட்கள்:**

பனையோலையினை மூலப் பொருட்களாகக் கொண்டு செய்யும் பொருட் கள் பயன்பாட்டுத்தேவை உடையனவா கவும் அழகியல் சார்ந்தனவையாகவும் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

பயன்பாட்டுத் தேவைக்குரிய பாய், பெட்டி, அகப்பை செருகி, தட்டு, வண்டு போன்ற பல்வேறு பொருட்களை குறிப்பிட லாம். இவற்றிலே பாய் எனக் குறிப்பிடும் போது, நெல் காய வைப்பதற்காக விசேட மாக நீளமான ஒத்த ஓலையில் செய்வ தாகவும், விருந்தினரை வரவேற்கவும் வீட்டுப் பாவனைக்குமான பாய்கள் இரட்டை ஓலை வைத்து பின்னுவதாகவும் விசேடமாக “சாணப்பாய்” அதாவது சிறு பிள்ளைகளுக்கு தொட்டில்களில் இடுவதற் கான பாயும் செய்கின்றனர். இதனைவிட பெட்டி என்று கூறும் போது எமது கிராமத்தில் பெண்பார்க்கும், மாப்பிள் ளைபார்க்கும் வேளையில் இருபெட்டியின் செல்வாக்கு அதிகமாக காணப்படுவத னால் மாப்பிள்ளை பெட்டி என்பது விசேட மாக அலங்கரித்து செய்யப்படுவதனையும், இவற்றைவிட புதிர்ப் பெட்டி என்பது மூடி கொண்ட பெட்டியாக புதுநெல் எடுப்பதற் காகவும் கோயிலுக்கு பூசைப் பொருட்கள்

கொண்டு செல்வதற்குமாக விசேடமாக செய்யப்படுகின்றது. இவற்றைவிட வீட்டுத் தேவைக்கான அகப்பைகளை வைப்ப தற்காக அகப்பை செருகியும், பொருட் களை பரிமாறக்கூடிய தட்டுக்களும் செய்கின்றனர். அழகியல் சார்பொருட்கள் என்று நோக்குகின்ற வேளையில்.

01) பூச்செண்டு
02) பூச்சாடி
03) ஆபரணங்கள்
04) வாழ்த்துமடல்கள்

போன்றன செய்யப்படுகின்றன இவற்றிலே பூச்செண்டானது அழகிய முறையில் இதயம், முக்கோணம் போன்ற வடிவங்களில் பின்னப்பட்டு பல அளவு களிலும் நவீன வடிவை ஒத்ததாகவும் செய்வதுடன் பல வர்ணங்களிலும் செய்கின் றனர் அவற்றைவிட பூச்சாடிகளை நோக்கும் போது இவை மிக அலங்கரித்து மேசை கள், தூண்களில், அவைகளை வைக்கக் கூடிய முறைகளில் வடிவமைத்துள்ளனர். இவற்றைவிட ஆபரணங்கள் என்னும் பொழுது தெய்வ வாகனங்களுக்கு அணி விக்கக்கூடிய ஆபரணங்களைச் செய்கின் றனர். வாழ்த்து மடல் என்று கூறும்போது தங்கரசாவின் கூற்றுப்படி “பனையோலை யில் எழுதும் எழுத்து பலிக்கும்” என்ற கருத்தின்படி பனையோலை வாழுத்துமடல் சிறந்ததாகவும் இவை இன்றைய நாகரீக

> மாப்பிள்ளை பெட்டி என்பது விசேட மாக அலங்கரித்து செய்யப்படுவதனையும், இவற்றைவிட புதிர்ப் பெட்டி என்பது மூடி கொண்ட பெட்டியாக புதுநெல் எடுப்பதற் காகவும் கோயிலுக்கு பூசைப் பொருட்கள் கொண்டு செல்வதற்குமாக விசேடமாக செய்யப்படுகின்றது.

நிலைக்கேற்ப வடிவமைப்பதைக் காண லாம்.

### பனையோலையை மூலப்பொருளாகக் கொண்ட பொருட்களில் அழகியல்

பனையோலையை மூலப் பொருட் களாக கொண்டு செய்யப்படும் பொருட்க ளில் காணப்படும் அழகியலை நோக்கும் போது இவற்றில் கூடுதலாக நிற நாடாக் களையும் வர்ண ஓலைகளையும் பயன் படுத்தி செய்துள்ளதை காணக்கூடியதாக வுள்ளது. பாயில் காணப்படும் அழகியலை நோக்கும் போது இவற்றில் வர்ணங்களில் துவைத்த ஓலைகள்மூலம் தாமரை, நிறைகுடம், Well Come போன்ற சொற்களை உள்ளடக்கியதாக வடிவங்கள் அமைக்கப் படுவதைக் காணலாம். இவற்றை விட பாய்களின் ஓரங்களில் ரேகை வடிவங்களை மேற் கொண்டுள்ளதைக் காணலாம். இவற்றைவிட புதிர்ப் பெட்டி போன்றவற்றில் அழகிய ரேகைகள் வரையப்படுவதையும் மூடிக்கு ஓர் வர்ணம் பெட்டிக்கு ஓர் வர்ணம் தீட்டுவதையும் இதே போன்று மாப்பிள்ளைப் பெட்டியும் அலங்கரிக் கப்படும் இவற்றில் கூடுதலாக மங்கள கரமான விடயங்கள் வரையப்படும் உதா ரணமாக குத்துவிளக்கு, நிறைகுடம் போன்றன வரையப்படும்.

இவற்றைவிட அழகியல் நோக்கத் திற்காக செய்யப்படும் பொருட்களில் காணப்படும் அழகியலை நோக்கும் போது பூச்செண்டுகளில் கூடுதலான அலங்கார வேலைப்பாடுகளுடன் இதயம், முக் கோணம் போன்ற அமைப்பைக் கொண்ட தாக சிறிய ஓலையால் பின்னப்பட்டு அதன் ஓரங்களில் நிற நாடாக்களினால் தைக் கப்பட்டும் அவற்றில் செயற்கை பூக்களை இணைத்தும் அதனை அழகியமுறையில் நிற நாடாவினால் கட்டியும் அழகுபடுத்தி யிருப்பர். இதே போன்று பூச்சாடிகளும் சிறிய கூடைகள் போன்று கைபிடிகளைக் கொண்டதாகவும் மேசையில் வைக்கக்

கூடியதாகவும் இதயம், நீள்சதுரம், முக் கோணம் போன்ற அமைப்புக்களில் சுவர் களில் பொருத்தக்கூடியவாறும் அமைப்பர் இவற்றின் ஓரங்களில் நிற நாடாவினால் அலங்கரித்தும் செயற்கைப் பூக்களையும் கொண்டு அழகுபடுத்தியிருப்பர்.

வாழ்த்து மடல்களில் காணப்படும் அழகியலை நோக்கும் போது இவற்றின் வடிவமும் இதயம், டைமன், சதுரம் போன்ற அமைப்புக்களுடன் ஓரங்களில் அழகிய வர்ண நாடாக்களினால் அலங்க ரிப்பதுடன் மூடக்கூடிய தாகவும், திறந்த நிலையுடன் அமைப்பதுடன் அதிலே அழகிய நற்சிந்தனைகள், தத்துவங்களை எழுதி இணைத்திருப்ப தையும் காணலாம். ஆபரணங்களானவை மிகவும் நேர்த்தியு டனும் நுண்ணிய வேலைப்பாடுகளை உடையனவாகவும் செய்யப்படும் இவ்வாறு செய்யப்படும் அனைத்துப் பொருட்க ளுக்கும் வார்ணிஸ் பூசும் பழக்கம் மேலும் அழகுபடுத்துவதாக அமைவதுடன் பள பளப்புத் தன்மையை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.


**களிமண்ணை மூலப் பொருட்களாகக் கொண்ட கைவினைகள்:**

இப்பிரதேசத்தில் களிமண் கூடுத லாகக் காணப்படினும் களிமண்ணை மூலப் பொருளாகக் கொண்டு செய்யும் பொருட் களாக கூடுதலாக செங் கல்லே காணப்படுகின்றது இதனைவிட மட்பாண்ட உற்பத்தி என்பது அரி தாகவே காணப்படுகின்றது.

முதலில் களி மண்ணை எடுத்து அதனை நன்றாகப் பிசைந்து அச்சுக் களில் இட்டு (இவ் அச்சுக் கள் 6" நீளம் கொண்ட தாகவும் 3" அகலம் கொண்டதாகவும் இருக்கும்) கற்களை வெட்டியபின் அதை காய வைத்தபின் கற் சூழயில் இட்டு பழுக்க வைப்பர். இதன்பின் அவற்றின் துறத் தையும் ஒலியையும் வைத்து கற்களை விற்பனைக்காக தெரிந்தெடுப்பர். இச் செங்கல் தொழிலுக்கு சிறந்த காலநிலை தேவைப்படுவதுடன் இவை காலம் பார்த்து செய்யும் கைவினையாகவும் காணப் படுகின்றது. இத் தொழில் ஆரம்ப காலத்தில் வயலை அண்டிய பிரதேசமான கோராவளி, புலி பாய்ந்த கல், பாலமடு போன்ற பகுதிகளில் மேற்கொண்டு வந்தாலும் இன்று யுத்த நிலைகாரணமாக மக்களின் குடிபெயர்வின் காரணமாகவும், கிரான், கோரகல்லிமடு, சந்திவெளி போன்றபகுதிகளில் செங்கல் தொழிலினை மேற்கொள்வதைக் காணக்கூடியதாக வுள்ளது. இன்று சீமேந்துக் கல்லின் வருகை காரணமாக இவற்றின் உற்பத்தி குறைந்து வருவதைக் காணக் கூடியதாக வுள்ளது.

இதனைவிட மட் பாண்ட உற்பத்தி மற்றும் ஏனைய பொருட்களின் உற்பத்தி யென்பது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவில் இப்பிரதேசத்தில் காணப் படவில்லை என்றே கூறலாம்.

இவற்றின் அழகியல் என்ற வகையில் நோக்கும் போது செங்கற்களில் நீள்சதுரமான அமைப்பு மாத்திரமே காணப்



படுகின்றது. இதனைவிட எதுவிதமான அழகியல் தன்மையையும் காணமுடிய வில்லை என்பதனையே கூறவேண்டும்.

**தென்னைப் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்ட கைவினைகள்:**

இப்பிரதேசத்தில் தென்னையின் பாகங்களைக் கொண்டு கைவினைகள் ஆரம்பகாலம் தொடக்கம் மேற்கொள்ளப் பட்டு வருவதனைக் காணக்கூடியதாக வுள்ளது. இதற்கான காரணம் தென்னை வளம் அதிகமாக காணப்படுவதும் காரண மாகும் கூடுதலாக ஈர்க்கில், தும்பு, சிரட்டை, உரிமட்டை போன்றவற்றை வைத்து செய்யும் கைவினைகளே அதிக மாகும்.


**தென்னைப் பாகங்களைக் கொண்டு செய்யப்படும் பொருட்கள்:**

ஆரம்ப காலங்களில் இருந்து கூடுதலாக இப்பிரதேசத்தில் ஈர்க்கிலை வைத்து ஈர்க்கில்தடி போன்றவையே செய்யப்பட்டுவந்ததுடன் அதற்குப் பிற்பட்ட காலத்தில் சில நிறுவனரீதியாக தும்பி னைக் கொண்டு காற்தட்டிகள், கயிறு போன்றவையும், சிரட்டைகளைவைத்து அலங்காரப் பொருட்கள் செய்வதனையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த வகையில் கைவினைப் பொருட்களை நோக்கும் போது.

01. ஈர்க்கில் தடி, பூச்சாடி
02. காற்தட்டி
03. கயிறு
04. நினைவுப்பரிசில்
05. நிறைகுடம்
06. கேத்தல்
07. மேசை அலங்கரிப்புப் பொருள்
08. திறப்பில் தொங்கவிடும் அழகிய பொருட்கள்

**தென்னை மூலப்பொருட்களாகக் கொண்ட கைவினைகளில் காணப்படும் அழகியல்:**

இவற்றிலே ஈர்க்கிலினால் செய்யப் படும் பொருட்களான பூச்சாடி, போன்ற



கிராமிய மீன்பிடி உபகரணம் கரப்பு

வற்றில் அழகியல் என்பது அழகான முறையில் ஈர்க்கில்களை சீவிய பின் அதனை பூச்சாடியின் வடிவில் வளைத்து அழகான முறையில் கட்டி அழகுபடுத்து வர். இதனைவிட காற்தட்டி போன்றவற்றில் அழகிய வர்ணங்களுடன் உருவம், பறவை, Well Come போன்ற சொற்களும் பாவித்து அலங்கரிப்பதைக் காணலாம். இதனைவிட சிரட்டையினால் செய்யப்படும் பொருட்களான நினைவுப் பரிசில் போன்ற வற்றிற்கு சிரட்டைகளை அழகிய வடிவங் களில் அதாவது இதயம், நட்சத்திரம், வட்டம், சதுரம் போன்ற அமைப்பில் வெட்டி அதனை நன்றாக சீவியபின் வாணீஸ் பூசி செய்கின்றனர். இதே வடிவமைப்பில் திறப்பில் தொங்கவிடும் அலங்காரப் பொருட்களும் செய்யப்படுகின்றன. இதனை விட அலங்கார நிறைகுடமானது தேங்காயை அடிப்பாகமாகவும் முகமாகவும் வெட்டி உள்ளிருக்கும் உள்ளீடை எடுத்தபின் குடம் போன்றும் தேங்காய் போன்றும் அமைப்பு டன் செய்வதுடன் தேங்காய் சிரட்டையை மாவிலைபோல் வெட்டி அவற்றையும் இணைப்பர் இவற்றிக்கும் அழகாக சீவி வாணிஸ் அடிப்பர். இதேபோன்று கேத்த லும் அலங்காரப் பொருளாகச் செய்யப்

படுகின்றது. இவற்றை விட பூச்சாடியானது சிரட்டையில் பூக்கள் வெட்டியும் தண்டுகள் சிரட்டையில் வெட்டியும் மிக அழகாக சீவி வார்னீஸ் அடித்து பூச்சாடி செய்கின்றனர். இவற்றிற்கு ஏனைய வர்ணப்பாவனையை தவிர்த்து வருகின்றனர்.

மேலும் இப் பொருட்களில் அழகிய இரேகைகளும், சிறிய அலங்காரங்களையும் சிறிய ஆணி, கூரிய ஆயுதங்கள் மூலம் செய்து வருகின்றனர் இவற்றில் வட்டம், முக்கோணம், இதயம் போன்ற வடிவங்களை வரைகின்றனர்.

**ஏனைய கைவினைகள்:**


மேற்கூறிய கைவினைகளைவிட சிலர் தமது தொழிலின் அடியாக கைவினை களை மேற்கொண்டு வருகின்றனர் உதாரணமாக அரி வாள், கத்தி, கோடரி போன்றவை செய்து வருவதுடன் இவை குறிப்பிட்ட சிலரால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இதில் அழகியல் என்பது பெருமளவில் காணப்படுவதில்லை. அடுத்து மீன்பிடிப்பவர்கள் மீன் பிடிப்பதற்கென கரப்பு போன்ற கைவினைப் பொருட்களையும் செய்து வருவதனை காணக் கூடியதாகவுள்ளது.

**கைவினைப்பொருட்களின் விற்பனையும் சந்தையும்:**

இப்பிரதேசத்திலே செய்யப்படும் அதாவது தொழிலின் நிமித்தம் செய்யப்படும் அனைத்துக் கைவினைப் பொருட்களும் தரம் கூடியதாகவும் அழகியல் வேலைப் பாடுடைய பொருட்களாகவும் காணப்படுவதனாலும் இவற்றின் பெறுமதி எண்ணற்றது. இருந்தும் இன்று இப் பொருட்களின் விலையை நிர்ணயிப்பதற்கும் அதன்பெறுமதியை மதிப்பதற்கும் உற்பத்தியாளர்களே ஆதாரமாக உள்ளார்கள். இவர்களினால் உற்பத்தி செய்யப்படும் இக்கைவினைகள் பிறரால் அதாவது ஏனைய வியாபாரிகளால் இவர்களது வீடுகளுக்கு வந்து குறைந்த விலையில் கொள்வனவு செய்து அந்த வியாபாரிகள் கூடிய விலையில் விற்று லாபம் பெறும் நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இப்பிரதேசத்தில் இப்படி கைவினையாளர்களும், கைவினைகளும் காணப்படும் நிலையில் அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஓர் சந்தை வாய்ப்பு அற்றநிலையில் அவர்களின் பொருள்களுக்கும், அவர்களின் திறன்களுக்கும் பெறுமதி அற்ற நிலை காணப்படுவதைக் காணலாம்.

எனினும் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பிரதேச கைவினையாளர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு பயிற்சிகளையும் உபகரணங்களையும் வழங்கி வந்தாலும் இவர்களின் உற்பத்தியை மேற்கொள்வதற்கான தொடர்ச்சியான ஊக்குவிப்புக்கள் நடை பெறாமல் இருப்பதும் அவர்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக் காமல் இருப்பதனாலும் கைவினைப் பொருட்களின் உற்பத்தி நலிவடைவதுடன் கை வினைகளின் வளர்ச்சி பாதிப்படைவதைக் காணலாம்.






**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு**

- குறிஞ்சி சிறப்புற வாழ்த்துச் செய்தி வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்கட்கும்
- பிரதேச கலாசார பேரவை அமைத்து சிறப்புமலர் வெளியிட அனைத்து ஒத்தாசைகளையும் முழுமனதுடன் வழங்கியதுடன் வாழ்த்துச் செய்தியும் வழங்கிய கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் திரு. வெ. தவராஜா அவர்கட்கும்.
- பிரதேசத்தை மையப்படுத்தி ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கட்கும்
- குறிஞ்சியின் வரவிற்கு முழுமனதுடன் நிதி வழங்கிய வேள்ட் விசன் பிராந்திய அபிவிருத்தி திட்டம் – கிரான்
- போட்டியாளர்களுக்கான பரிசில்களை வழங்கிய தடாகம் நிறுவனம்
- பிரதேச கலாசார நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகள் அனைவருக்கும்
- விழா சிறப்புற ஒத்தாசைகளை வழங்கிய பிரதேச செயலக அனைத்துமட்ட உத்தியோகத்தர்கட்கும்
- மலரை கணனிவடிவமைப்புச் செய்த திரு. த. சங்கர் மற்றும் செல்வி. மை. சுபாஜெனி அவர்களுக்கும்
- மலரை திருத்தம் செய்வதில் உதவிய செல்வி லோ. வதனி மற்றும் குழுவினருக்கும்
- மலரை அழகாக அச்சிட்டுத் தந்த மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தினருக்கும்
- மற்றும் தவறவிடப்பட்ட அனைவருக்கும்

**எமது மனமார்ந்த நன்றிகள்**

– இணைச் செயலாளர்கள் –

குறிஞ்சி சிறப்புற வாழ்த்துக்களும்
அனுசரணையும்



World Vision

**வேள்ட் விஷன்**
கிரான் பிராந்திய அபிவிருத்தி திட்டம்